

செல்வி. தேவி அருணாசலம்

# வரும் வசந்த காலம்

வெளியீடு:
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரும் வசந்த காலம்

செல்வி.தேவி அருணாசலம்

வெளியீடு
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | :- | வரும் வசந்த காலம் |
| ஆசிரியர் | :- | செல்வி.தேவி அருணாசலம் |
| பதிப்பு | :- | முதற்பதிப்பு, 2015 |
| அட்டை | :- | செல்வி.தேவி அருணாசலம் |
| ISBN No | :- | 978-955-4628-20-5 |
| வெளியீடு | :- | பண்பாட்டலுவல்கள் , திணைக்களம் கிழக்குமாகாணம் |
| அச்சிட்டோர் | :- | சண்பிரிண்டர்ஸ். 224, மத்தியவீதி, திருக்கோணமலை |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்பது எவ்வளவு தூரம் உண்மையோ அதன்வழி வாசிப்புப் பழக்கமும், அதற்கான தேடலும் மனிதனைப் படம் போட்டெடுக்கும் அம்சங்களாகும். எனவே எதிர்காலச்சந்ததியினரின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், ஆக்கங்களை கையெழுத்துப் பிரதிகளாகவே எழுதி வைத்திருக்கும் எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளை நூல்வடிவாக்கி வெளியிடவும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தனது வருடாந்த மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து நிதியை ஒதுக்கி வருகிறது. அத்திட்டத்தின் இலக்காக இந்த வருடமும் தெரிவுசெய்யப்பட்ட ஒன்பது நூல்கள் வெளிவருவது மிகவும் ஆரோக்கியமான ஒரு செயற்பாடாகும்.

படைப்பியல் உலகில் எழுத்தாளர்களின் பங்கு மிகவும் முக்கியமானது. தனது சூழலையும், உலகத்தையும் தன் நுண்ணறிவுகொண்டு பார்க்கும் அவர்கள் தமது உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை எழுத்தாக்கி உலகுக்கு அளிக்கின்றனர். எனவே இறைவன்போல் சிருஷ்டித்துவம் மிக்கவர்கள் எழுத்தாளர்கள். எனவே அவர்கள் படைப்புகளும் போற்றுதற்குரியது. அந்த வகையில் எமது கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களமானது கடந்த வருடத்தில் இருந்து கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளை தெரிவுசெய்து நூல்வடிவாக அச்சேற்றி வெளியீடு செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த வருடமும் (2015) எழுத்தாளர்களால் அனுப்பி வைக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் ஒன்பது தெரிவு செய்யப்பட்டு (சிறுகதை, நாவல், கவிதை, திறனாய்வு விமர்சனம், சிறுவர் பாடல்) அப்படைப்புக்கள் நூல்வடிவில் வெளியீடு செய்யப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் எமது சமூகத்தில் அறிவியல் வளர்ச்சியும், படைப்பாக்கத்திறனும் மேன்மையடையும். இளம் தலைமுறையினருக்கான ஒரு வழிகாட்டலையும், உந்துசக்தியையும் இவை அளிக்கும். தொடர்ந்து எழுதுவோரை ஊக்கப்படுத்தும் இச் செயற்பாடு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதன் மூலம் சிறந்த நூல்கள் வெளிவர வேண்டும்.

இச் செயற்திட்டத்தை மேற்கொண்ட பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளருக்கும், கையெழுத்துப் பிரதிகளை அனுப்பி வைத்த எழுத்தாளர்களுக்கும் இவற்றை அச்சேற்றி அழகான நூலாக வெளிவர உதவிய பதிப்பகத்தாருக்கும் மற்றும் இத்திட்டத்திற்கு உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.சி.தண்டாயுதபாணி
கல்வி,தகவல் தொழில்நுட்பக்கல்வி,
முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு,
பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம்,
புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு,
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கடந்த வருடம் முதல் செயற்படுத்தப்பட்டு வரும் கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் கையெழுத்துப்பிரதிகளை அச்சிட்டு நூல் வடிவில் வெளியிடும் நிகழ்வானது தொடர்ந்து 2015 ஆம் ஆண்டும் தனது பணியை செவ்வனே ஆற்றிவருகின்றது.

கிழக்குமாகாணத்தில் வசிக்கும் எழுத்தாளர்களினால் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் அச்சு வாகனம் ஏறாமல் இருப்பதை அறிந்து அந்த எழுத்தாளர்களின் ஆதங்கத்தைப் போக்கும் முகமாக அவர்களின் கையெழுத்துப்பிரதிகளை நூலுருவாக்கி வெளியிடப்படும் நிகழ்வு உண்மையில் எமது கிழக்கு மாகாண எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் ஒரு அம்சமாகும்.

இன்றைய இயந்திர உலகில் எழுத்துத்துறையானது மறக்கப்பட்டு வருவதுடன் வாசிப்புப்பழக்கமும் எம்மை விட்டு வெகுவாகக் குறைந்து செல்வதை அவதானிக்கலாம். எனவே எதிர்காலச்சந்ததியினரின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், ஆக்கங்களை கையெழுத்துப் பிரதிகளாகவே எழுதி வைத்திருக்கும் எழுத்தாளர்களின் கையெழுத்துப் பிரதிகளை நூல்வடிவாக்கி வெளியிடவும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தனது வருடாந்த மாகாண விசேட அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து நிதியை ஒதுக்கி வருகிறது.

அதன் அடிப்படையில் இந்தவருடம் எமது பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட ஒன்பது கையெழுத்துப் பிரதிகள் தெரிவு செய்யப்பட்டு ஒன்பது நூல்களாக வெளிவருகின்றன.இவ்வாறு வெளியீடு செய்யப்படும் நூல்கள் எமது கலாசார வேலைத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாகும். இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துத்துறையை ஊக்கப்படுத்துவதுடன் எதிர்கால இளம் தலைமுறையினருக்கும் ஒரு உந்து சக்தியாக இருக்கும் என்பது திண்ணம்.

இந்தவருடம் தமது கையெழுத்துப்பிரதிகளை நூலாக வெளியிடுவதற்கு எமது திணைக்களத்திற்கு அனுப்பிவைத்த நூலாசிரியர்களுக்கும் அவற்றை அழகாக அச்சேற்றி வெளியீடு செய்ய உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினையும், வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.சிவப்பிரியா வில்வரெத்தினம்
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வழமைபோல் இந்த வருடமும்(2015) பல்வேறு கையெழுத்துப் பிரதிகளை நூல்வடிவில் வெளியிடும் நோக்கில் பத்திரிகை விளம்பரம் மூலம் கோரியிருந்தது. எமது கோரிக்கைக்கு அமைவாக சிறுகதை,கவிதை,நாவல்,திறனாய்வு,சிறுவர் பாடல் என பல்வகைப் படைப்புக்கள் கையெழுத்துப் பிரதிகளாக எமக்கு கிடைக்கப் பெற்றன.

அவற்றை திறன்மிக்க தெரிவாளர்களுக்கு வழங்கி அவர்களினால் சிபார்சு செய்யப்பட்ட கையெழுத்துப் பிரதிகளை நூலுருவாக்கியுள்ளோம்.அந்த வகையில் ஒன்பது நூல்கள் எமது பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வெளியீடு செய்யப்படுவதையிட்டு நான் புளகாங்கிதம் அடைகின்றேன். அதற்கான காரணம் ஒவ்வொரு எழுத்தாளரும் தமது படைப்புக்களை நூலுருவாக்குவது ஒரு பிரசவமாகக்கொள்ளப் படுகின்றது அதனால் அவர்கள்படும் வேதனையும்,துன்பமும் சொல்லிலடங்காது. அவர்கள் படைப்புக்கள் நூலாக வெளிவரும் போதே அவர்கள் பட்ட துன்பங்கள் எல்லாம் பின்னர் மகிழ்ச்சியாக மாறுகின்றது.

அந்த வகையில் இத்தகு முயற்சிக்கு ஆக்கமும்,ஊக்கமும் தந்த கிழக்கு மாகாண கௌரவ கல்வி அமைச்சர் அவர்களுக்கும்,கல்வி அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும் பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அவர்களுக்கும் மற்றும் எழுத்தாளர்கள்,கலாசார உத்தியோகத்தர்கள்,அழகாக அச்சிட்ட பதிப்பகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

க.அன்பழகன்
கலாசார உத்தியோகத்தர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

1990ம் ஆண்டு "புது வாழ்வு பிறக்கட்டும்" என்ற கவிதை ஆக்கத்துடன் எழுத்துலகத்தில் பயணம் செய்ய ஆரம்பித்தேன். முதல் அரங்கு நிகழ்வாக "சக்திகள் சபதம்" என்ற கூத்துருவ புராண நாடகத்தை திருநெல்வேலியில் அமைந்துள்ள எமது குலதெய்வம் பத்திரகாளி அம்பாள் ஆலய முன்றலில் 1992ம் ஆண்டு மேடை ஏற்றம் செய்யபட்டு பலபேரின் பாராட்டையும் பரிசில்களையும் பெற்றதுடன் பலதடவைகள் பல இடங்களில் மேடை ஏற்றப்பட்டது என்பதை மிகவும் பெருமையுடன் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

2004ம் ஆண்டு எதிர்பாராத விதமாக திருமலை திருமறைக்கலாமன்றத்தில் இணைந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கிடைத்தது என்று சொல்வதை விட அந்த அரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த எமது மன்ற முன்னாள் இணைப்பாளர் திரு.என.ரகுராம் அவர்களின் மனைவி திருமதி.தர்மினி அவர்களையே சாரும்.

எனக்குள் புதைந்து கிடந்த சிறுசிறு திறமைகளை வெளியே கொண்டு வர வழிகாட்டியது எமது மன்றம். அதன் பின் மீண்டும் எனது கரங்களுக்கு எழுதும் வல்லமையும், துணிவும் ஆர்வமும் ஏற்படத் தொடங்கியது. எழுதினேன். இன்று வரை எழுதிக் கொண்டே இருக்கிறேன். அத்துடன் பிரதேச செயலகத்தால்வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் சாகித்திய விழாவையொட்டிய தேசிய இலக்கியப் போட்டிகளில் 2009ம் ஆண்டு தொடக்கம் 2015ம் ஆண்டு வரை பலவகையான விடயங்களில் பங்கு பற்றி பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளேன்.

எனது "வரும் வசந்த காலம்" என்ற சிறுகதைத் தொகுப்பின் வரும் சில கதைகள் கற்பனையுடன் கலந்த உண்மைச் சம்பவங்களே ஆகும். எவரையும் பாதிக்கப்படாத முறையில் ஒருசிலர் பட்ட துன்பங்களை அவலங்களை எழுத்து வடிவில் கொண்டு வந்துள்ளேன். எனது முதலாவது சிறுகதை "சுமைகள்" என்ற பெயருடன் 2005ம் ஆண்டு திருமறைக்கலாமன்றத்தின் வெளியீடான சமாதானத்தின் தேடல் என்ற நூலில் பிரசுரமானது. அதன்பின் பலவகையான படைப்புகளில் ஈடுபட்டேன்.

எனது இந்த "வரும் வசந்த காலம்" என்ற சிறுகதை தொகுப்பினை புத்தகமாக வெளியிட நினைத்ததும் ஒரு எதிர்பாராத விடயம்தான். அந்த நினைவுக்கு அத்திவாரம் இட்டதே கிழக்கு மாகாண பண்பாட்டலுவலகம் தான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசி உரை

அருட்தந்தை கலாநிதி
நீ.மரியசேவியர் அடிகள்
திருமறைக்கலாமன்றம்.

செல்வி தேவி அருணாச்சலம் எங்கள் திருகோணமலைத் திருமறைக் கலாமன்றத்தின் நீண்ட கால உறுப்பினரும், தற்போது இதன் இணைப்பாளருமாவார். மன்றத்திற்கு அவரது சேவை அளப்பரியது. தேவி கலையார்வத்துடன், தமிழ் ஆர்வமும், தணியாத இலக்கிய ஆர்வமும் உடையவர். அவருடைய இலட்சியத்தை, கற்பனைகளை, கனவுகளை "வரும் வசந்த காலம்" எனும் வடிவில் எழுத்தில் வடிவித்துள்ளார்.
அவருடைய முயற்சியைப் பாராட்டுகின்றேன் வளர்க!

வாழ்க வளமுடன்!

இயக்குனர்
நீ.மரியசேவியர்
திருமறைக்கலாமன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேலதிக மேடை ஏற்றல் நிகழ்வுகள்

நாடகம் : "சக்திகள் சபதம்" கூடத்துருவப் புராணநாடகம் 1992 - 1995 யாழ்ப்பாணம் ஆறு தடவைகள்

வில்லுப்பாட்டு : தலைப்பு "எங்களுக்கும் காலம் வரும்" நல்லூரப் பிரதேசசெயலகம், முத்துத்தம்பி மகாவித்தியாலயம். 1993

தலைப்பு "இடப்பெயர்வு" சம்பூர் (2004)

தலைப்பு "பெண் விடுதலை" மட்டக்களப்பு (2004)

வானொலிப்பாடல் : ஆழிப்பேரலை (சுனாமி) முதலாம் ஆண்டு (2005) நினைவுகளில் பாடல் இயற்றிபிரித்தானிய ஒலிபரப்பில் (B.B.C) பாடியமை - தொடர்ந்து 2005, 2006, 2007 மூன்றுவருடங்கள் நிகழ்ச்சிகொடுத்தமை.

தாளலயம் : "ஊருக்குத்தான் உபதேசம் உனக்கல்ல" கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, துர்க்கை அம்மன் ஆலயம் திருகோணமலை. (2006)

: தலைப்பு "சிக்கன் குன்யா" சிங்களமகாவித்தியாலயம் துர்க்கை அம்மன் கோயில் திருகோணமலை (2007)

: தலைப்பு "முதியோர் எமது சொத்துக்கள்" நகரசபை திருகோணமலை (2010)

சிறுவர் நாடகம் : தலைப்பு "சிவன்ராத்திரி" பாணந்துறை (2006)
: தலைப்பு "சமாதானமே வருக" கொட்வே (2007)

இசையும், கதையும் : சிறுவர் துஷ்பிரயோகம்" நகரசபை (2010)

புத்தாக்கம் : "நவீனபாரதி" பூம்புகார் (2008)

"மாப்பிள்ளைச் சந்தை" விவேகானந்தாக் கல்லூரி (2013)

நகைச்சுவை நாடகம் : "திருமலைச் சிங்காரி" (Loving Trinco 2012)

பஜனைப்பாடல்கள் : பொதுவான பாடல்கள்

நாடகம் : "புதிய வார்ப்புக்கள்" விவேகானந்தாக் கல்லூரி. 2013

வெளியீடு : கதை
பாடல்
கட்டுரை
வாழ்த்துப்பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் கரங்கள் பெற்ற பரிசில்கள்

**கவிதை** : "புதுவாழ்வுபிறக்கட்டும்" மூன்றாம் இடம் 1990 நல்லூர் பிரதேசசெயலகம்.யாழ்ப்பாணம்

**சிறுகதை**

1. "பிழைக்கத் தெரியாதவன்" 2009 திருகோணமலை மாவட்டம் இரண்டாம் இடம்
2. "அரைப்பிடிகீரை" 2010 திருகோணமலை பிரதேசமட்டம் முதலாம் மாவட்டம் இரண்டாம் இடம்.
3. "வரும் வசந்த காலம்" 2014 திருகோணமலை பிரதேசமட்டம் முதலாம் இடம்
4. "அவள்தான் தாய்" இரண்டாம் இடம் (2015)

**சிறுவர் கதை**

1. "கருணையுள்ள கண்ணன்" 2011 திருகோணமலை பிரதேசமட்டம் முதலாம் இடம், மாவட்டம் இரண்டாம் இடம்
2. "கூடிவாழ்" 2014 பிரதேசமட்டம் முதலாம் இடம்
3. "தன்வினை தன்னைச்சுடும்" முதலாம் இடம் (2015) மாவட்டம்

**விவரணம்**

1. "சமர்க்களத்தை தள்ளிவைப்போம் சமாதானத் தேர் இழுப்போம்" 2011 - தேசிய மட்டம மூன்றாம் இடம்.
2. "பட்டதுயர் தீர்ப்பது யார்? இந்தப் பாவிகளைக் காப்பதுயார்?" 2012. பிரதேசமட்டம் முதலாம் இடம்
   "கடந்த அரை நூற்றாண்டின் கவிதைத் தூறல்கள்" 2ம் இடம் (2014)

**நாட்டார் பாடல்**

1. "சொந்தம் சொந்தம் தான்" 2012 பிரதேசமட்டம் IIம் இடம்
2. "கோழிக் கள்ளன்" 2014 பிரதேசமட்டம் முதலாம் இடம்
3. "காதல் என்ன கடைச்சரக்கா" இரண்டாம் இடம் 2015

**பாடல்**

1. "எம் விதியோ" 2012 பிரதேசமட்டம் மூன்றாம் இடம்.
2. "மீண்டும் வந்திடாதே" 2013 பிரதேசமட்டம் முதலாம் இடம்.
3. "அம்மா" 2014 பிரதேசமட்டம் மூன்றாம் இடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


- சுமைகள்
- பிழைக்கத் தெரியாதவன்
- அரைப்பிடிக்கீரை
- பெருமைப்படுகிறது கடல்
- வரும் வசந்த காலம்
- காலமெல்லாம் காத்திருப்பேன்
- விதியின் விளையாட்டு
- அவர் வருவார்
- அவள் தான் தாய்
- தண்டனை
- வாழ்வோமா
- இன்றைநெற் காதல்
- அவளும் தமிழிச்சியே
- வேலை தேடிக் கொண்டே இருக்கிறாள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைகள்

என்ன சரசக்கா குட்டிபோட்ட பூனை போல அங்கும் இங்கும் திரியுறியள் முகத்தில சந்தோசம் தெரியுது சுவீப் ஏதும் விழுந்ததோ இல்லை மகன் வெளிநாட்டில் இருந்து வாறானோ?

என்ர குடும்பத்தைப்பார்த்து எப்பவும் உனக்கு நையாண்டிதான் நீ இப்படி நெடுகலும் சொல்லிக்கொண்டு வாறாய் ஒரு பிரச்சனையும் வந்திருக்காவிட்டால் என்ர பிள்ளையும் வெளிநாடு போயிருப்பான் எங்கட குடும்பமும் தலை எடுத்திருக்கும் என்ன செய்வது? எல்லாம் எங்கட தலையெழுத்து.

அக்கா நான் எந்தநாளும் பகிடி விடுவதை போலதான் இன்றும் சொன்னான் "என்ர மகன் வெளிநாட்டில் இருக்கிறான் என்று நினைத்து மனதை தேத்திக்கொண்டு இருக்கிறேன் என்று நீங்கள் தானே அடிக்கடி சொல்லுவீங்கள்." இப்படி உங்கள் மனசைப் புண்படுத்தும் என்று தெரியாமல் போச்சு எனிமேல் இப்படி கதைக்கமாட்டேன் என்று கவலைப்படுகின்றாள்.

---

வெளிநாட்டு சுபீட்சத்தை விட சுவீப் ரிக்கற்றில் பல லட்சம் ரூபா கிடைப்பதை விட தொலைந்து போன பிள்ளைகள் மீண்டும் பெற்றோரிடம் வந்து சேருவதே பெரிய அதிஸ்டம் அளவிட முடியாத சந்தோசம் திருப்தி. பாதிக்கப்பட்ட எல்லோருக்கும் சமாதானப்பேச்சு வார்த்தையால் அந்தப்பாக்கியம் கிட்ட வேண்டும்.

---

அடி பைத்தியமே உதுக்குப்போய் கண்கலங்குறாயே. நானும் யோசிக்காமல் கதைச்சுப்போட்டன். பிள்ளை சாரதா இப்ப வெளிநாட்டில் இருந்து சனங்கள் வந்து போவது கொழும்புக்கு போற மாதிரி. உது பெரிய காரியம் இல்லை. வெளிநாட்டு சுபீட்சத்தை விட சுவீப் டிக்கட்டில் பல லட்சம் ரூபா கிடைப்பதை விட தொலைந்து போன பிள்ளைகள் மீண்டும் பெற்றோரிடம் வந்து சேருவார்களே அது தான் அதிஸ்டம் அளவிடமுடியாத சந்தோசம் அந்தப்பாக்கியம் எனக்கு கிடைத்திருக்கின்றது.

என்னக்கா சொல்லுறியள்? சங்கர் வரப்போறானோ? எங்கட சங்கர் வரப்போறானோ? கேட்கவே எவ்வளவு சந்தோசமா இருக்குது. எனக்கே இப்படி என்றால் பெத்தவள் உனக்கு எப்படி இருக்கும் பார்த்தியே அக்கா கௌரிகாப்பின் மகிமையை? நீ அவனுக்காக எடுத்த காப்பு அந்த விரதத்திற்குள்ளேயே அவன் வாறது என்றால் அதுவும் கடவுள் செயல்தான். நீ நடை நடையாய் போய் கைஎடுத்த பலன் கிடைத்து விட்டது. உனக்கு இனிக் கவலையே இல்லை. அவன் கெட்டிக்காரன் உழைப்பாளி கண்ணை மூடித்திறப்பதற்குள் உன் கஸ்டம் எல்லாம் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மட்டுமே படுக்கையில் கிடக்கும் உன்ர மனுசனைத்தூக்கிப்பறிக்க துணை இல்லாமல் நீ எவ்வளவு கஸ்ரப்படுகிறாய் என்று எனக்குத் தெரியும் சங்கர் வந்து விட்டால் அவனும் சேர்ந்து உனக்கு உதவி செய்வான் தானே? அது சரி எப்படியக்கா சங்கரை வெளியே விட்டவன்கள்? பார்க்கவிடாமல் தகப்பனை எத்தனை தரம் திருப்பி அனுப்பினவங்கள் அதுதான் கேட்கிறன்.

ஏதோ இந்த சமாதானப்பேச்சு வார்த்தை வந்ததிலை எத்தனை பேருக்கு விடிவு ஏற்பட்டிருக்கு எவ்வளவு சந்தோசமாக நின்மதியாக பயமில்லாமல் இருக்கிறம். அல்லது இப்ப மற்றப்பிள்ளைகளையும் இரை கொடுத்திட்டு இருந்திருப்பம். சில பிள்ளைகளின் கதையே முடிஞ்சு போச்சுதான். நான் செய்த புண்ணியம் மீண்டும் என்ர பிள்ளை என்னட்டை வாறது என்ர குஞ்சைப்பார்த்து எத்தனை வருசமாச்சு. எங்கை இருக்கிறான் என்று தெரியாமல் போய்ப்பார்க்க முடியாமல் நாங்கள் பட்டபாடு கடவுள் ஒருவனுக்குத்தான் தெரியும். என்ர பிள்ளைக்கு என்ன நடந்தது எது நடந்தது என்று தெரியாமல் கலங்கிப்போனேன். ஏதோ இந்தப் போர் நிறுத்தல் சம்பவமும் சமாதானப் பேச்சு வார்த்தையும் நடைபெறுவதால் எங்கட பிள்ளைகளை நாங்கள் பார்க்கக் கூடியதாக உள்ளது.

சங்கரைப் போய்ப் பார்த்தனீங்களே எப்படி இருக்கிறான்?

தகப்பன் தான் இரண்டு மூன்று முறை போய்ப்பார்த்தவர் அடிக்கடி போய்ப் பார்ப்பதென்றால் எங்களிட்டை வசதியில்லை யாரிட்டை கேக்கிறது சொல்லு? கேட்டாலும் ஒவ்வொரு நையாண்டிக் கதை சொல்லுவினம். என்ர தோட்டை வித்துப்போட்டுத்தான் என்ர பிள்ளையை பார்க்க அனுப்பினனான். ஒருமுறை என்றாலும் நானும் போயிருப்பன் ஆனால் என்ர பிள்ளையை கைதியாகப்பார்க்கும் மனத்தைரியம் எனக்கில்லை என்னால் அதைத்தாங்க முடியாது. சங்கர் எப்படி இருக்கிறானோ?.

சரசக்கா நீங்கள் கவலைப்படாதையுங்கோ உங்கடை மகன் ஒருவிதக்குறையும் இல்லாமல் ராஜா மாதிரி கம்பீரமாக வந்து இறங்குவான் பாருங்கோ. அவன் வீட்டை வரேக்க நான் கட்டாயம் நிக்க வேணும். கனகாலம் காணேல்லை என்ற ஒரு காரணம். அடுத்து ஓசிலை ஒரு சோகமான பாசமலர் படம் பார்க்கலாம் என்றுதான். சீச்சீ நானும் ஒரு ரோசம் கெட்டவள் பகிடி விடுவதில்லை என்று சொல்லிப்போட்டு மீண்டும் கதைக்கிறன்.

சரி சரி கனக்க கதைத்தது போதும். நீ போற இடத்துக்குப் போய் கெதியாய் வா. வரேக்க என்ரை தங்கச்சி கோமதி வீட்டை சங்கருடைய சைக்கிள் நிக்குது அதை உடனே கொண்டு வரச்சொல்லிப்போட்டு பிள்ளை வாற விஷயத்தையும் மறக்காமல் சொல்லு. என்ரை பிள்ளை பத்திரமாக வைத்து பாவித்த சைக்கிள் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுகள் எடுத்துப்பழுதாக்கிப் போடும் என்று தான் அங்கே வைத்துப் பூட்டினனான். எங்களைவ விட அவனுக்கு சைக்கிளில் தான் கவனம் கூட. வந்தவுடன் அவன் அதைத்தான் முதலில் கேட்பான் என்ன கெதியாய் கொண்டுவரச் சொல்லு.

சரசுவின் பரபரப்பையும் சந்தோசத்தையும் பார்த்து தனக்குள்ளே சிரித்தவண்ணம் சாரதா அவ்விடத்தை விட்டுப் போகின்றாள்.

பத்து வருசமா பூட்டி வைத்திருக்கும் சைக்கிள் கறை பிடிச்சிருக்மோ என்று யோசித்த வண்ணம் சமைப்பதற்காக குசினிப்பக்கம் போகின்றாள் சரசு.

பாவம் சரசு சைக்கிள் கறள் பிடிச்சுப் போயிருக்குமோ என்று கவலைப்பட்டவளுக்கு தன் ஒரே ஒரு ஆம்பிளைப்பிள்ளையின் வாழ்க்கையே கறள் பிடிச்சுப் போச்சுது என்பதனை அறியவில்லை.

இரண்டு காலும் நடக்க முடியாமல் முச்சக்கர வண்டியின் துணையுடன் வந்து இறங்கப்போகும் தன் ஆசை மகனைப்பார்த்து எப்படித்தான் தாங்கப்போகிறாளோ தெரியாது.

என்ன நடந்தது யார் செய்தது என்று எவருக்குமே தெரியாது ஆனால் இப்ப சங்கர் ஒரு நொண்டி.

வாகனம் ஒன்று வீட்டுப்படலைக்குள் வந்து நிற்கும் சத்தம் கேட்டது. "பிள்ளை வந்திட்டான் அண்ணை வந்திட்டான்" என்று குடும்பமே சந்தோசத்துடன் படலையை நோக்கி ஓடியது. அங்கே வாகனத்தில் இருந்து முதல் இறக்கப்பட்டது ஒரு முச்சக்கர சைக்கிள் தான். இதைப்பார்த்த குடும்பத்தவர்களும், மற்றும் அங்கு கூடியிருந்தவர்களும் ஒரு கலக்கம் ஏற்பட்ட போதும் அதைப்பொருட்படுத்தாமல் சங்கர் எப்ப இறங்குவான் என்று பார்த்துக்கொண்டு நின்றார்கள். இரண்டு மூன்று பேர் வாகனத்தில் இருந்து இறங்கி ஒரு பெரிய பொருளை தூக்கி இறக்குகின்றார்கள். அந்தப்பொருள் வேறு ஒன்றுமல்ல சரசுவின் ஏக புதல்வன், பொக்கிஷம் சங்கர் தான். அந்தக் கொடுமையைப் பார்த்து குடும்பம் மட்டுமல்ல அங்கு கூடி நின்ற அனைவருமே வாய்விட்டு அழுதார்கள்.

வீட்டுக்குள்ளே கொண்டு வரப்பட்ட சங்கர் ஒரு சலனமும் இன்றி இருந்தான் அவன் கண்களில் இருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வரவில்லை. உடம்பில் இருந்து கண்ணீரை இந்த பத்து வருடகாலத்தில் அழுது முடித்துவிட்டான் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தின் சுமையை போக்குவான் என்று எதிர்பார்த்தவர்கள் எல்லாம் அந்தக் குடும்பத்திற்கே அவன் பாரமாக வந்து விட்டான் என்பதைப்பார்த்தும் பரிதாப்பட்டார்கள். ஒருவரக்கொருவர் பேசியும் கொண்டார்கள். அருகில் இருந்த ஒரே ஒரு ஜீவன் மட்டும் அவன் உயிரோட வந்ததே போதும் தன்ர உயிர் இருக்கும் வரை பிச்சை எடுத்தாவது அவனைக்காப்பாற்றுவேன் என்றும் இந்தக் கோலத்திலையாவது அவனை தன்னிடம் சேர்த்த கடவுளுக்கு நன்றி சொல்லிவிட்டு அவனைக் கட்டிப்பிடித்து "ஓ" என்று அழுதது அந்த ஜீவன்.

அது வேறு யாருமில்லை அவனைப் பத்து மாதம் சுமந்து பெற்ற சரசு தான். எந்தக் காலகட்டத்தலும் எந்தக் கோலத்திலும் ஒருவரை பாசமுடன் அணைத்துக் கொள்ளும் உறவு உண்டென்றால் அது தாய் என்ற ஒன்று தான். அதுக்கு சரசு மட்டும் விதிவிலக்கா என்ன.

மகனே நீ கால் இல்லாத நொண்டி நானோ கால்கள் இருந்தும் நொண்டி போல நடக்க முடியாமல் கிடக்கின்றேன். பாவம் உன் அம்மா எப்படித்தான் இருவரையும் சுமக்கப்போகின்றாளோ தெரியாது என்று ஒரு கிழிந்த பாயில் முடங்கிக் கொண்டு படுத்து இருந்த சங்கரின் தகப்பன் தனக்குள்ளேயே சொல்லி மெளனமாக அழுது கொண்டிருந்தார்.

எல்லோரும் சங்கரைப் பார்த்து கண்ணீர் வடிக்க அவனை ஏளனமாக பார்த்து சிரித்துக் கொண்டிருந்தது அவனது லுமாலா துவிச்சக்கரவண்டி.

முற்றும்

(யாவும் கற்பனை)

**2005ம் ஆண்டு "சமாதானத்தின் தேடல்" நூலில் பிரசுரமானது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிழைக்கத் தெரியாதவன்

என்ன ரமேஸ் இன்னும் உன் வேலை முடியவில்லையோ? படத்துக்கு போவம் என்று என்னை வரச் சொல்லிப் போட்டு நீ சீமெந்தும் கையுமாக நிற்கின்றாய்?

கோபி நான் என்ன உன்னைப் போல அரசாங்க உத்தியோகமே பார்க்கின்றேன்? குறிப்பிட்ட நேரத்திற்கு வேலையை முடிச்சுப்போட்டு வர? நான் இப்ப உடனடியாக உன்னோட வரலாம், ஆனால் இந்தக் கலவை கட்டியாய்ப் போய்விடும். நாளைக்குப் பாவிக்க முடியாது வீண்தானே? என்னை நம்பி முதலாளி விட்டிட்டுப் போனவர் அநியாயம் செய்யக்கூடாது.

எல்லாத்திலும் யோக்கியம் காட்டப்போய்த்தான் இன்னும் அப்படியே இருக்கிறாய், அல்லது தெரிவில கிடந்த காசை எடுத்துப் போய் கோயில் உண்டியலில் போடுவியே? அதுவும் ஆயிரம் ரூபாய்த் தாள். உன்னைப் போல மடையன் யார் இருக்கின்றார்கள்? நீ என்னத்தை என்றாலும் செய். என்ன இப்ப என்னுடன் படத்திற்கு வாறியோ இல்லையோ? இப்ப எத்தனை மணி சொல்லு பார்ப்பம்? நீ கூடுதலான நேரம் நின்று வேலை செய்தாலோ நம்பிக்கையாய் நடந்தாலோ உன் முதலாளி உன் சம்பளத்தை என்ன கூட்டியே தரப் போறார்? மிஞ்சின கலவையை அந்த மதவுக்களை அள்ளிப் போட்டிட்டு வா. அவருக்கு என்ன தெரியவே போகுது?

கோபி! இப்ப மண்ணும் சீமெந்தும் பவுண் விலை விற்குது. மற்றவர்களின் பொருள் என்றாலும் அநியாயம் செய்யக்கூடாது. என்னால் அது முடியாது. இண்டைக்கு மட்டும் நீ தனியப் போட்டு வா. இன்னொரு நாளைக்கு இரண்டு பேரும் போகலாம்.

எனக்கு வாற கோபத்துக்கு இந்தக்கலவையை எடுத்து உன்ர தலையில கொட்டிப் போடுவன். உன்னோட நெருங்கிப் பழகின காலந்தொட்டு இன்று வரை வேலை விசயத்தை தவிர வேறு எங்காவது நான் தனியே போயிருக்கிகேனா? இல்லை நீ தான் போயிருக்கிறியா? சொல் பார்ப்பம்? இண்டைக்கு என்னடாவென்றால் என்னைத் தனியாப் போகச் சொல்லுறாய்? என்ன நெஞ்சமுத்தம் உனக்கு?

சரி சரி கோபப்படாதை. மச்சான் பார்த்தியே உன்ர நண்பனின் புத்திசாலித்தனத்தை? உனக்கு கோபம் வரக்கூடிய வகையில் ஏதும் சொன்னால் நீ நீட்டி முழக்கிக் கொண்டு போவாய் அதற்கிடையில் என் வேலையை முடித்துவிடலாம் என்று நினைத்துத்தான் "நீ தனியாகப் போ" என்று சொல்லி உன் கோபத்தை தூண்டி விட்டேன். பார் என்ர வேலையும் முடிஞ்சு போச்சுது.அதிலை எனக்கு திருப்தியாகவும் இருக்குது. நான் வீட்டை போய் ஒரு ஐந்து நிமிஷத்தில குளிச்சு வெளிக்கிட்டு வாறன் கவலைப்படாதை. படம் துவங்க இன்னும் எவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் இருக்குது. அதற்கிடையில் போகிடலாம். அது சரியடா படத்திற்கே தனியாகப் போக விரும்பாத நீ எப்படி என்னை விட்டு லண்டனுக்கு போகப்போறாய்? அதுவும் ஐந்து வருஷம் என்னை விட்டுப் பிரிந்து இருக்கப்போறாய்?

நீ கேட்பது நியாயம் தான் ரமேஸ். என்ன செய்வது? வேலை பார்க்கும் இடத்தில் என்னை விட எத்தனையோ கெட்டிக்காரர்கள் அனுபவம் வாய்ந்தவர்கள் இருக்கும் போது அவர்களை விட்டுப்போட்டு என்னைப் போகச் சொல்கிறார்கள். எனக்கு கொஞ்சமும் விருப்பம் இல்லை. அதே நேரம் என்னால் மறுத்துச் சொல்லவும் முடியவில்லை. கட்டாயம் போய்த்தான் ஆக வேண்டும். என் குடும்பத்தை விட்டுப் போற கவலையை விட உன்னை விட்டிட்டுப் போகத்தான் என்னால முடியாமல் இருக்குது. என்று கண்கலங்கிக் கூறினான் கோபி.

ஐந்து வருடம் தானே கண்ணை மூடி திறப்பதற்குள் போய் விடும். நீ கவலைப்படாமல் போட்டு வா மச்சான். அட மறந்து போனான். நீ வந்தவுடன் கேட்க வேண்டும் என நினைச்சனான். நீ கவிதைப் போட்டிக்கு எழுதின கவிதையை அனுப்பிப்போட்டியே? இன்னும் மூன்று நாள் தானே இருக்குது. உடனே அனுப்பு. நான் படிச்சுப்பார்த்தனான் மச்சான் சூப்பர் கவிதை கட்டாயம் உனக்குத்தான் முதல் பரிசு கிடைக்கும்.

என்னுடைய கவிதைக்கு தேசிய மட்டத்தில் கூட முதல் பரிசு கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. அதில் சந்தேகமேயில்லை. ஆனால் எனக்கு அதிலே விருப்பமே இல்லை. நீ வற்புறுத்தினபடியால் தான் எழுதினேனே தவிர எனக்கு அதில் எந்தவித ஈடுபாடும் கிடையாது. முக்கியமாக அந்தத் தலைப்புத்தான் எனக்குப் பிடிக்கவேயில்லை. மனித நேயமாம் மனித நேயம். மனித நேயத்திற்கும் இன்றைய நடைமுறைக்கும் எதுவித சம்பந்தமே இல்லை கவிதை எழுதவும். மேடைப்பேச்சில் முழங்கவும் தான் முடியுமே தவிர எவருமே அப்படி நடப்பதில்லை மனித நேயம், மனித உரிமைகள் இருந்தால் இப்படி கொடுமைகள் அநியாங்கள் நாட்டிலே நடக்குமா? ஆஸ்பத்திரியை போய்ப்பார். எத்தனை சின்னஞ்சிறு குழந்தைகள் கருகிப்போய் வந்துள்ளார்கள். வயோதிபர்கள் கை கால் இல்லாமல் பராமரிக்க எவரும் இல்லாமல், காணாமல் போன தங்கள் உறவுகளைத் தேடி அழுது புலம்புகின்றார்கள். எல்லா விதத்தாலும் பாதிக்கப்பட்டு வாழ்க்கையே கேள்விக்குறியாக்கி கொண்டு வந்திருக்கும் இளம் பெண்கள் கதறி அழும் காட்சியை சகிக்கவே முடியவில்லை. பாதிக்கப்பட்டு வந்தவர்களைப் பார்ப்பதற்கு கூட எத்தனை தடைகள்? எத்தனை நிபந்தனைகள்? இவ்வளவையும் கண்ணால் பார்த்த பின்பும் எப்படி என்னால் எழுத முடியும்? அது தான் உணர்ச்சி வசப்பட்டு உருக்கமான கவிதையை வடித்தேன். தரமான கவிதை தான் தணிக்கை செய்யப்படாமல் இருந்தால்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபி நீ ஒரு கவிஞன் எழுத்தாளன் அதனால் உனக்கு விளக்கம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சொல்லுறன். குழி தோண்டிப் புதைக்கப்பட்டதில் மனிதநேயமும் ஒன்றென்று நினைத்துக் கொள்வதை தவிர வேறொன்றும் சொல்ல முடியாது. இருப்பவர்கள் ஒரு சிலர் கூட சந்தர்ப்ப சூழ்நிலையால் வெளியே காட்ட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். கோபி! நீ உணர்ச்சி வசப்படுவது கோபப்படுவது எல்லாம் நியாயம் தான். ஆனால் எம்மால் என்ன செய்ய முடியும்? நியாயங்களை பேசவோ, எழுதவோ எமக்குச் சுதந்திரம் கிடையாது. அநியாயத்தைச் சுட்டிக்காட்ட எமக்கு தைரியம் போதாது. எத்தனையோ எம்மைப் போன்ற இளைஞர்களும் இப்படித்தான் ஆதங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ன செய்வது? காலத்திற்கு ஏற்றவாறு நாங்கள் எம்மையும் மாற்றிக் கொள்ள வேண்டியதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய இயலாது. எங்கள் தலை எழுத்து அப்படி. அதை விடு பயணம் போற நேரத்தில மண்டையப் போட்டு குழப்பாமல் எழுதின கவிதையை அனுப்பு.

சரி அனுப்புறன் உனக்காக உனக்காகவே அனுப்புறன். யோசிக்காதை. இனி எங்க படத்திற்குப் போறது இடைவேளை கூட விட்டிருக்கும் வீட்டை போவம் மச்சான். இருவரும் அவரவர் வீடுகளுக்குச் செல்கின்றார்கள்.

ஒரு வாரத்தால் நண்பனை லண்டனுக்கு அனுப்பிவிட்டு தன் தனிமையை நினைத்து வேதனைப்பட்டான் ரமேஸ் அடிக்கடி நண்பனுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்வதால் சற்று ஆறுதல் அடைந்தான்.

சுமார் ஒரு மாதத்தின் பின் வழக்கம் போல ஒரு நாள் வேலை செய்து விட்டு ரமேஸ் களைத்துப் போய் வீட்டிற்கு வந்தான். அங்கே அவன் வீட்டில் ஆரவாரமாக இருந்தது. ரமேஸின் தங்கை கமலினியின் தோழிகளும் அங்கே கூடி இருந்தனர்.

"இன்று அவளின் பிறந்தநாளும் இல்லையே வேறு என்ன விஷேஷமாக இருக்கும்" என்று நினைத்தவனை "அண்ணா வாழ்த்துகள்" என்று அவன் கைகளைப் பற்றித் தங்கை குலுக்க வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், என்று அவள் தோழிகளும் கை குலுக்கினார்கள். குசினிக்குள் வேலை செய்து கொண்டிருந்த அம்மமாவும் ஓடி வந்து மகனைக் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தாள். அப்பா அவன் முதுகில் தட்டிக் கொடுத்து தன் மகிழ்ச்சியை தெரிவித்தார். தன்னைச் சுற்றி என்ன நடக்குது என்று அவனுக்குப் புரியவில்லை. அனைவரையும் மிரள மிரளப் பார்த்தவன் பொறுக்க முடியாமல் "என்ன நடந்தது எல்லோரும் துள்ளிக்குதிக்கிறியள்" என்று கேட்டே விட்டான்.

"அண்ணா! சும்மா நடிக்காதை. நீ இப்ப பெரிய ஆளப்பா இந்தா பிடி பேப்பரை" என்று நீட்ட தங்கையிடம் அதை வாங்கி அவசரம் அவசரமாகப் பக்கங்களைப் புரட்டிப் பார்த்தான். பெரும் அதிர்ச்சிக்குள்ளானான். காரணம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைப் போட்டி முடிவுகள்:- தேசியமட்டம் முதலாம் இடம்

செல்வன் :- இராஜரட்ணம் ரமேஸ்குமார். என்ற செய்திதான்.

"நான் கவிதை ஒன்றும் அனுப்பவில்லையே இது வேறு ரமேஸ்குமாராக இருக்கலாம்." எங்கோ தவறு நடந்து விட்டது என்று நினைத்து மீண்டும் பத்திரிகையை உற்றுப்பார்த்தான். இது என்னுடைய வீட்டு விலாசம் தான் சந்தேகமேயில்லை. ஆனால் எப்படி? என நினைத்துக் குழம்பியவனுக்கு சட்டென்று விடை கிடைத்து விட்டது.

"உனக்காக அனுப்புகிறேன். உனக்காகவே அனுப்புகிறேன்." என்று அன்று கோபி சொன்னதின் அர்த்தம் இன்று தான் அவனுக்குப் புரிந்தது. அவன் இடத்தில் தன்னை வைத்துப் பார்த்த தன் அருமை நண்பனின் அன்பை நினைத்து பெருமைப்பட்டான். அவனுக்குக் கிடைக்க வேண்டிய பரிசும் பாராட்டையும் எனக்கு கொடுத்திருக்கிறான். அந்த மனம் இந்தத் தியாகம் எவருக்குமே வரமாட்டுது.

நண்பன் மேல் வைத்திருந்த பாசம் மேலும் பெருகியது. ஆனாலும் அவன் அந்தப் பரிசையோ பாராட்டையோ ஏற்கப் போவதில்லை என்பது நிட்சயம். காரணம் அவன் ஒரு வித்தியாசமான பிறவி. பாடசாலையில் பரீட்சை நடக்கும் வேளையில் சில மாணவர்கள் விடையைப் பார்த்து எழுதி பிறர் சொல்லிக் கொடுத்து எழுதி அதிக புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திற்கு வந்தவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் யாராவது உதவி செய்ய வந்தாலும் "குறுக்கு வழியில் நான் பாஸ் பண்ண விரும்பவில்லை" என்று மறுத்து விடுவான் ரமேஸ். கஸ்ரப்படாமல் ஒரு பலனையும் பெறமாட்டான். இதுவும் அப்படித்தான்.

ரமேஸ் சிந்தித்துக் கொண்டிருந்தான். மாற்று வழிக்கு மருந்து தேடினான். கிடைத்து விட்டது அவனுக்கு வழி திருப்தியடைந்தான்.

கலோ! கவிஞரே! என்ன பலமான யோசினை? இவ்வளவு காலமும் நீ கவிதைகளை எழுதி எழுதி அது சரியில்லை, தராதரம் இல்லை என்று அனுப்பாமல் சேர்த்து வைத்தாய். ஆனால் இப்ப துணிஞ்சு அனுப்பினபடியால் தானே அதுவும் போட்டியில் உன் கவிதைக்கு முதல் பரிசு கிடைத்திருக்கு. பரிசுத் தொகையை நினைக்க எனக்கு எவ்வளவு சந்தோசமாக இருக்குது தெரியுமா?....... இப்ப சொல்லிப்போட்டன் எனக்கு சங்கிலி வேண்ட அந்தக் காசைத் தரவேணும் அதில் ஒரு ரூபாய் கூட யாரும் எடுக்கக் கூடாது. எத்தனை நாளைக்குத் தான் நான் இந்த "இமிற்றேசன்" சங்கிலியைப் போட்டுக் கொண்டு திரியிறது. பார் அது கலரே மாறிப் போச்சு. எனக்கு இனி இது வேண்டாம் என்று கூறிய ரமேஸின் தங்கை கமலினி கழுத்தில் இருந்து கழற்றி ஒரு மூலையில் போடுகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கையின் நம்பிக்கையைத் தான் தவிடுபொடியாக்கப் போகின்றேனே என்ற வேதனையுடன் யாரிடமும் ஏதும் பேசாமல் அவ்விடத்தை விட்டு எழும்பிப் போகின்றான் ரமேஸ்.

வெளியே போனவன் இரவு எட்டு மணி போலத்தான் வீட்டிற்கு வருகின்றான். சாப்பிடக் கூப்பிட்ட தாயாரிடம் தனக்குப் பசி இல்லை என்று சொல்லிப்போட்டு போய்ப்படுத்துக் கொண்டான்.

கமலி! கொண்ணை சாப்பிடாமல் படுத்திட்டான் பாவம் பிள்ளை பசியோடு படுத்திட்டான் போய் எழுப்பிக் கொண்டு வா.

அம்மா அண்ணை இண்டைக்கு நல்ல சந்தோசமாய் இருப்பார். அதனால சினேகிதர்களோடு சேர்ந்து ஏதாவது வெட்டியிருப்பார். அது தான் கள்ளன் பசி இல்லை என்று சொல்லுது அல்லது உங்களோட மகன் பெரிய சாப்பாட்டு ராமன் பட்டினியாக் கிடப்பானோ? நீங்கள் போய்ச் சாப்பிடுங்கோ.

தாயும், தங்கையும் பேசியதைக் கேட்டுக்கொண்டிருந்தான் ரமேஸ். எந்தப் பேப்பரைப் பார்த்து தன் குடும்பம் சந்தோசப் பட்டதோ அதே பேப்பரிலே நாளைக்கு வரப் போகும் செய்தியைப் பார்த்து கவலைப்படப் போகின்றார்கள் என நினைத்து மனம் வருந்தினான்.

அடுத்த நாள் பொழுது வெகு சீக்கிரமே வந்தது போல் இருந்தது. அப்பாவின் கையில் பேப்பர் இருந்ததையும் அம்மா, தங்கையின் முகவாட்டமும் விசயம் என்னவென்று அவனுக்கு விளங்கியது. ஒன்றும் பேசாது தகப்பனின் கையில் இருந்த பேப்பரை வாங்கிப் பார்க்கின்றான்.

நேற்றைய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த படி நடந்து முடிந்த கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றிருந்த கவிதை ஆக்கம் என்னுடையது அல்ல. முதலிடம் பெறும் அளவிற்கு கவிதை எழுதும் திறன் எனக்கில்லை என்னுடைய பெயரில் நண்பன் கோபி தான் அதை எழுதினான். இக் கவிதை மூலம் வரும் பாராட்டும் பரிசும் எனக்குரியதல்ல அவன் அறிவிற்கும் முயற்சிக்கும் கிடைத்த சன்மானம். அதனால் நான் இந்தப் பரிசை ஏற்க விரும்பவில்லை.

தான் எழுதிக் குடுத்ததில் ஒரு வரி கூட விடாமல் போடப்பட்டிருப்பதைப் பார்த்து ரமேஸ் மிகவும் திருப்தியடைகின்றான். அந்த நேரத்தில் அவன் வீட்டுப்படலை திறக்கும் சத்தம் கேட்டு எழும்பிப் போய்ப்பார்க்கின்றான்.

ரமேஸ் படித்த பாடசாலை அதிபர் வந்து கொண்டிருந்தார். அவனுக்கு சந்தோசமாகவும் வியப்பாகவும் இருந்தது அவர் வருகை. காரணம், அவர் மிகவும் கண்டிப்பானவர். பாடசாலையில் படிப்பிக்கும் ஆசிரியர்களிடம் கூட அதிகமாக கதைக்கமாட்டார். எல்லோரும் அவரை பெருமை பிடிச்சவர் என்று தான் கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியானவர் அவன் வீடு தேடி வருவது என்றால் ஆச்சரியம் தானே?

என்னடப்பா வீடு தேடி வந்தவர்களை ஒரு மரியாதைக்காவது வா என்று சொல்லமாட்டியா?

"அப்படி இல்லை சேர் நீங்கள் என்ரை வீட்டைத் தேடி அது தான்" என்று இழுத்தான்.

"ஏன் உன்ரை வீட்டை நான் வரக் கூடாதே" என்று கூறிய அதிபர் பக்கத்தில் கிடந்த கதிரையில் தானே போய் அமர்ந்து கொண்டார்.

சேர் நீங்கள் சொல்லி அனுப்பியிருந்தால் நான் உங்கள் வீட்டிற்கு வந்திருப்பேனே. நீங்கள் நெஞ்சு வருத்தக்காரன். இவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கிறியள் என்ன சேர் நீங்கள் முதலில் இந்தக் கோப்பியை குடியுங்கோ. ரமேஸ் குடுத்த கோப்பியை குடித்த அதிபர் ரமேஸ்! உன்னை எங்கள் மாணவர் என்று சொல்வதில் எனக்கு மட்டுமல்ல நீ படித்த பாடசாலைக்கும் பெருமை. படிக்கும் போது இருந்த அதே நல்ல குணம் இப்போதும் உன்னிடம் இருக்கிறதைப் பார்த்து நான் மிகவும் சந்தோசமாக இருக்கிறன். எங்கே புகழ் வரும், பணம் வரும் எப்படி மற்றவர்களை சுரண்டி வாழலாம் என நினைக்கும் இந்த உலகத்தில நீ ஒரு புதுமையான ஆளாக இருக்கிறாய். நேற்றுப் பத்திரிகையில உன் பெயரைப் பார்த்து சந்தோசப்பட்டதை விட அதை நீ மறுத்து வெளியிட்ட செய்தி தான் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

தேடி வந்த புகழை அது யாருக்கோ சொந்தமானது என்று உதறித்தள்ளினியே. நீ நீ தாண்டா என்றோ ஒரு நாள், இல்லை வெகு சீக்கிரமே உன் நற்பண்பு உன்னை உயர்த்தும். நீ நல்லாய் இருப்பாய் நீ பிழைக்கத் தெரியாதவன் என்று மற்றவர்கள் கூறுவார்கள். நானும் சொல்லுறன் நீ பிழைக்கத் தெரியாதவன் தான். ஆமாம் ! மற்றவர்களை சுரண்டிப் பிழைக்கத் தெரியாத நல்லவன் என்று கூறியவர் ரமேஸின் தகப்பனைப் பார்த்து "ஐயா! இப்படியான ஒரு நல்ல பிள்ளையை பெற்றதிற்கும் நீங்கள் என்ன வரம் பெற்றீர்களோ?" என்று கூறினார்.

அங்கே அதிபரால் தன் அண்ணன் புகழ் பாடப்படுவதை கேட்டுக் கொண்டிருந்த கமலினி அண்ணனை பெருமையுடன் பார்க்கின்றாள்.

மூலையிலே கழற்றி எறியப்பட்ட அவளின் "கிலிற் சங்கிலி" அவளைப் பார்த்து வா வா என்று கூப்பிடுவதை போல இருந்தது.

முற்றும்

(யாவும் கற்பனையே)

தேசிய இலக்கியப் போட்டியில் மாவட்ட மட்டம் முதலாம் இடம் பெற்ற சிறுகதை (2009)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரைப்பிடிக்கீரை

ஏன் இடித்துக்கொண்டு எல்லோரும் குமிஞ்சு நிக்கிறியள்? ஒழுங்கா வரிசையா ஒருவருக்குப் பின்னால ஒருவரா நில்லுங்கோ அப்பதான் சாமான்கள் தருவம். இல்லாட்டி வந்த சாமான்களை அப்படியே திருப்பிக் கொண்டு போய் விடுவோம். சீ! என்ன சனங்களப்பா! இவ்வளவு நடந்தும் இன்னும் மண்டையில ஏறுதில்லை. இதுகள் திருந்தவே மாட்டுதுகள்.

தம்பி! ராசா! கோபிக்காதை அப்பு. இவ்வளவு நடந்தும் என்று சொல்லுறியே என்னத்தைச சொல்லுறாய் எண்டு எங்களுக்கு விளங்குது. நீ சொல்லுற அந்த இவ்வளவும் நடந்தபடியால் தான் எத்தினை மணித்தியாலங்கள் இந்த வெய்யிலுக்கை நிண்டு காயிறம். சாமான்கள் வராட்டிலும் பரவாயில்லை. யாரோ மனமிரங்கி புண்ணியவான்கள் எங்களுக்குத் தரும் நிவாரணப் பொருட்களை எடுத்துத் தர உங்களுக்கு இவ்வளவு அலுப்பாக இருக்குது. நாங்களும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறம். நீங்கள் மூன்று நான்கு பேரும் இருந்து அரட்டை அடிப்பதும், Hand phone இலிருந்து கதைப்பதுமாக இருக்கிறியள். ராசாமாரே எங்களைப் போல் நீங்களும் துன்பப்பட்டிருந்தால் அந்த வேதனை வலி எப்படி என்று உங்களுக்கும் விளங்கியிருக்கும். தாற சாமான்களோடு வலிக்குப் பூசுவதற்கு கொஞ்சம் மருந்தும் தாங்கோ. கால் எல்லாம் ரொம்ப வலிக்குது.

அங்கு நின்ற ஒரு பெரியவரின் வார்த்தைகளைக் கேட்ட அங்கு கூடி நின்றவர்கள் கொல்லென்று சிரித்தனர்.

கூடியிருந்தவர்களின் சிரிப்பொலி நிவாரணம் கொடுக்க வந்தவர்களுக்கு கோபமூட்டியதோ என்னவோ "இன்னும் கொஞ்ச நேரம் நின்று காயுங்கோ"என்று கூறி மேசை மேல் இருந்த file ஐ மூடி வைத்துவிட்டு உள்ளே போய் விடுகின்றார்கள்.

"இந்த மனுஷன் வாயை சும்மா மூடி வைச்சுக் கொண்டு இருந்திருக்கலாம்" என்று அங்கு நின்றவர்களில் சிலர் முணு முணுத்தார்கள்.

ஒரு விடயத்திற்காக அலுவலகத்திற்கு வந்த நான் வந்த காரியத்தை மறந்து போய் அங்கு நடந்த உரையாடல்களையும், சம்பவங்களையும் பார்த்து மிகவும் வேதனைப்பட்டேன். எவ்வளவு வசதிகளுடன் கௌரவமாக சொந்த மண்ணில் உழுது பயிரிட்டு உண்டு மகிழ்ந்தவர்கள் எத்தனையோ பேர் நிவாரணத்திற்காக நிற்கின்றார்கள் இதைத்தான் விதி என்பதா? நினைத்துப் பார்க்கும் போது நெஞ்சமே வெடிக்கின்றது. அந்த நீண்ட கியூவை மீண்டும் வேதனையுடன் பார்க்கின்றேன் அங்கே நின்றவர்களில் ஒரு பெண் தன் கண்களால் என்னை உற்றுப் பார்ப்பது போல இருந்தது எனக்கு.வேறு யாரையாவது பார்க்கின்றாவா என்று சுற்றுமுற்றும் பார்த்தேன். என்னைத் தவிர அங்கு வேறு எவரும் இல்லை. நிட்சயமாக அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவம் என்னைத்தான் பார்ப்பதை உணர்ந்தேன். எனக்கும் அந்த முகம் மிகவும் தெரிந்த பரிச்சமான முகமாகத் தென்பட்டது. யாராக இருக்கலாம் சரியாக வனிதா அக்காவைப் போலத்தான் இருக்கிறது எதற்கும் கிட்டப் போய்ப் பார்க்கலாம் என நினைத்து அந்த உருவத்தின் அருகே போனேன் வனிதாக்காவேதான்.

இயற்கையாகவே மெலிந்த உடம்பு தான் அக்காவிற்கு ஆனாலும் இந்தக் குறுகிய காலகட்டத்திற்குள் மிகவும் மெலிந்து போய்விட்டதாக என் கண்களுக்குப்பட்டது.அவவைப் பார்த்ததும் என் கண்கள் கலங்கின.அவவுடன் கதைக்க எனக்கு வார்த்தைகளே வரவில்லை. ஏதோ கதைக்க வேண்டும் என்பதற்காக :ஏனக்கா நிக்கிறிஎய்?" என்று நான் கேட்டது தான் தாமதம் "வேட்டைக்காரன் படம் பார்க்க ரிக்கற் எடுப்பதற்காக கியூவில் நிற்கிறம் நீயும் என்ன மோனை படம் பார்க்கவே வந்தனி வா வா " என்று அதே பெரியவர் கிண்டலடித்துக் கூற மீண்டும் அங்கே சிரிப்பொலி பரவியது.

என் அசட்டுக் கேள்வியை நினைத்து நான் வெட்கப்பட்டேன் எரிச்சலுடன் அந்தப் பெரியவர் கூறிய வார்த்தையிலிருந்து அவர் மட்டுமல்ல அங்கு கூடி நின்ற அனைவரும் எவ்வளவு துன்பப்பட்டிருப்பர்கள், விரக்தியடைந்துள்ளார்கள் என்பதை நினைத்துப் பார்த்துக்கொண்டிருந்த என்னை "என்ன கணேஸ் எப்படி இருக்கிறீர்?" என்ற வனிதா அக்காவின் குரல் தடை போட "நான் நல்லாய் இருக்கிறன் நீங்கள் எப்படி இருக்கிறியள் அக்கா?" "ஏதோ இருக்கிறன்" என்று ஒரு சிறு புன்னகையுடன் கூறிய அக்காவின் வரிசையில் நின்றவர்கள் முன்னேற அவர்களைத் தொடர்ந்து போகின்றாள் வனிதா அக்கா.

பெருநிலம் என்று கூறும் அந்த அழகான ஊரிலே வசதியுடயும் செல்வாக்குடனும் வாழ்ந்த குடும்பங்களில் அக்காவின் குடும்பமும் ஒன்று. உறவுக்காரரை விட அயலவருடனும், நண்பர்களுடனும் சேர்ந்திருந்த காலம் தான் கூட. அந்த நண்பர்கள் பட்டியலில் நானும் ஒருவன் பசி என்று வருபவகட்கு அலுப்பு பஞ்சி பாராது சமைத்துப் போட்டவள். வீட்டிற்கு வருபவர்களைக் கட்டாயப்படுத்தி உணவருந்த வைப்பதில் அக்காவை விட அண்ணன்(அக்காவின் கணவர்) ஒரு படி மேல். குசினிக்குள் சாப்பாடு இருக்கோ இல்லையோ தன் வீட்டிற்கு செல்லும் அத்தனைபேரிற்கும் "சாப்பாட்டை குடம்மா" என்று புத்தகம் படித்துக் கொண்டே சொல்வார் அண்ணன். நான் அவர்கள் வீட்டிற்கு போகும் வேளையில் தனியாகப் போவதில்லை. மூன்று நான்கு பேர் தொத்திக் கொள்வான்கள். அதிகமாக ஏனோ தெரியாது மதியம் சாப்பாடு வேளையில் தான் செல்வோம். வழக்கமாக அண்ணனின் கட்டளை குசினிக்குள் இருக்கும் அக்காவின் காதில் போகும். "இந்த மனுசன் எப்ப போனாலும் சாப்பிட்டிட்டுப்போ சாப்பிட்டிட்டுப்போ என்கிறார். அக்கா எங்களைப் பற்றி என்ன நினைப்பா. சரியாகச் சாப்பாடு நேரத்திற்கு வந்திடுவான்கள்" என நினைத்துப் புறுபுறுப்பாவோ சட்டியில் அகப்பையைப் போட்டு உடைப்பாவோ என்று சில வேளைகளில் நாம் பயப்பட்டதும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் எந்த ஒரு ஆரவாரமின்றி அக்கா புன் சிரிப்புடன் போனவர்கள் அனைவருக்கும் கோப்பையில் சாப்பாடு போட்டுக் கொண்டு வந்து தருவா. சோறைப் போடட்டோ கறியைப் போடட்டோ என்று பார்த்துப் பார்த்துக் கேட்பா.

என்ன கேட்டுக்கொண்டு நிற்கிறாய் " போட வேண்டாம் கொட்டு அவன்கள் நல்லாய் வெட்டுவான்கள்." என்று அண்ணா சொல்ல எங்கள் எல்லோருக்கும் வெட்கமாக இருக்கும். ஆனால் அண்ணை சொல்வது போல நாங்கள் ஒரு வெட்டு வெட்டிப் போட்டு தான் எழும்புவம். அவ்வளவு ருசி அக்காவின் சமையல். அக்காவின் அந்த வீட்டின் வெள்ளை மணல் முற்றத்தில் அனைவரும் அமர்ந்து அண்ணரின் பகிடிக் கதைகளையும், பயனுள்ள கதைகளையும் கேட்டு மகிழ்வோம். யார் கண்பட்டதோ எவர் சாபமோ தெரியாது எல்லாமே தலை கீழாக மாறியது. யாருமே நினைத்துப் பார்க்காத அந்த அசம்பாவிதம் நாட்டில் ஏற்பட ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிய வேண்டி வந்தது. திக்குத்திக்காய் ஓடினோம். இரத்த வெள்ளத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் உறவுகளை நண்பர்களைக் காப்பாற்ற முடியாமல் கடந்து ஓடினோம். திரும்பிக் கூட பார்க்காமல் ஓடினோம். செத்தவர்கள் யாரென்று தெரியாது. ஆனால் பிழைத்தவர்களில் என் குடும்பமும் ஒன்று.

ஓட முடியாமல் களைத்தப் போய் ஒரு இடத்தில் பதுங்கினோம். சாப்பாடு இல்லை தேநீர் இல்லை. என் கையில் ஒரு சதக் காசு கூட இல்லை. வருத்தக் காரனான என் அப்பா சாப்பாடு இல்லாததால் மருந்து பாவிக்காமல் விட்டதால் வருத்தம் கூடியது. பிறந்த உடனேயே பெற்றவளை இழந்த என்னைத் தாயாக இருந்து வளர்த்தவர் என் அப்பா.தன் சுகங்களை துறந்து எனக்காக வாழ்ந்'தவர். எனக்கு இருக்கும் ஒரே ஒரு சொத்தான என் அப்பாவை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்று துடித்தேன் யாரிடம் போவது? எவரிடம் போவது? எல்லோருக்கும் ஒரே நிலைமை தான். ஒரே கஸ்டம் தான். யார் தரப் போகிறார்கள் சாப்பாடு? ஆனாலும் ஒரு நம்பிக்கையில் அக்கா இருக்கும் வீட்டைத் தேடித் தேடி ஓடினேன். எவ்வளவோ கஸ்டத்தின் மத்தியில் அக்கா இருக்கும் சிறு கொட்டிலைக் கண்டு பிடித்தேன்.

மரக்கறி எல்லாத்தையும் குவித்து வைத்து விட்டு எதைச் சமைக்கலாம், எப்படிக் கறி வைக்கலாம் என்று நீண்ட பட்டியல் போடும் அக்காவின் கையில் ஒரே ஒரு கீரைப் பிடியை வைத்துக் கொண்டு யோசிப்பதை பார்த்த எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. அவர்கள் நிலமையை என் கண்ணால் கண்டு கொண்டு எப்படி உதவி கேட்பது என்று நினைத்து அக்காவுடன் சும்மா கதைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுத் திரும்பிப் போக எத்தனித்த போது அங்கே அண்ணர் வந்தர். என்னடா கணேஸ்? பயங்கரச் சத்தங்கள் எல்லாம் கேட்டுக் கொண்டிருக்கு இந்த நிலையில ஏன் வெளியில வெளிக்கிட்டனி, போ போ நிற்காமல் கெதியாய் வீட்டை போ அட சீ மறந்து போனேன்.

அப்பா எப்படி இருக்கிறார்? மருந்து ஒழுங்காகக் குடிக்கிறாரோ? சாப்பாட்டிற்கு என்ன செய்கிறீர்கள்? என்று அண்ணர் கேட்க அடக்கி வைத்திருந்த வேதனை எல்லாம் அழுகையாய் வெளிவர பலத்து அழுதே விட்டேன். என் நிலைமை இருவருக்கும் புரிந்து விட்டது போலும், அண்ணர் அக்காவிற்கு ஏதோ சொல்ல அக்கா உள்ளே போய் அரிசி, தேங்காய் உட்பட ஒரு சில சாமான்களை ஒரு சின்ன சொப்பின்பாக்கில் போட்டு கொண்டு வந்து தந்தா.

“கறிக்கு ஏதும் குடுத்தினியே?” என்று அண்ணர் கேட்க “இருந்தால் குடுக்கமாட்டேனா? இந்த ஒரு பிடி கீரை மட்டும் தான் இருக்குது வேறு ஒன்றும் இல்லை” நான் என்ன செய்ய என்று முகவாட்டத்துடன் கூறினாள் அக்கா.

“அவன் பாவம் கறிக்கு என்ன செய்வான் உந்தக் கீரையில் அரைவாசியை அவனுக்கு குடுத்து விடு மிச்சத்தை நாங்கள் ஒருவாறு சமாளிக்கலாம்” என்று அண்ணர் சொல்ல அக்கா மறு பேச்சின்றி அரைப்பிடி கீரையை என்னிடம் தந்தா. அண்ணர் எவ்வளவோ உதவிகள் அப்பாவிற்கும் எனக்கும் செய்தவர் தான். ஆனால் அந்த நேரத்தில் அந்தக் கட்டத்தில் அந்த அரைப்பிடி கீரை எனக்குப் பெரும் திரவியமாக இருந்தது. அண்ணரின் இரக்க சுபாவத்தையும், தாராள குணத்தையும் அன்றைய நிலையிலும் பார்த்தேன். அவரைக்கட்டிப்பிடித்து அழுதேன். அவர் என்னைச் சமாதானப்படுத்தி இருநூறு ரூபா பணமும் தந்து என்னை அனுப்பி வைத்தார்.

அன்று தான் என் அன்பு அண்ணனை நான் சந்தித்த கடைசி நாள். அதன் பின் நான் அவரை சந்திக்கவேயில்லை. அதன் பின் என்னென்னவோ எல்லாம் நடந்து முடிந்தது. பரபரப்பான செய்திகள் பத்திரிகையில் பரவியது. பெரும்பாலானவை உண்மைக்குப் புறம்பானதாகவே இருந்தது. அண்ணன் குடும்பத்தைப் பற்றி ஏதும் தகவல்கள் அறிந்திடலாம் என்று எவ்வளவோ முயற்சி செய்தேன். ஆனால் எதுவித பலனும் இல்லாமல் போய்விட்டது.

என் அப்பாவின் வருத்தத்தைக் குணப்படுத்தி அவரின் உயிரையும் காபாற்றி இருந்த அந்த நல்லவரைப்பற்றி எதுவித தகவலும் இல்லை என்றும் குடும்பத்தை விட்டு விட்டுப் போனவரின் தொடர்பு ஏதும் கிடைக்காமல் அக்கா சாஸ்த்திரிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லும் நம்பிக்கையிலும் எல்லாத்துக்கும் மேலாக தெய்வ நம்பிக்கையிலும் இருக்கிறா என்றும் சிலா் மூலம் அறிந்து கொண்டேன்.

இன்று எப்படியோ அக்காவை கண்டு பிடித்து விட்டேன். பழைய நினைப்பில் மூழ்கி போயிருந்த என்னை "ஏன் தம்பி என்னத்திற்கு இதில நிக்கிறீர்?" என்று ஒருவா் கேட்க திடுக்கிட்டுப் போய்ப்பார்த்தேன் அங்கே அந்தக் கியூவில் ஒருவா் மட்டும் நின்றார்கள். அக்காவைக் காணவில்லை அவவைத் தேடி வெளியில் ஓடினேன் அக்கா ஒரு சின்ன உரைப்பையைத் தூக்கிக் கொண்டு மெல்ல நடந்து கொண்டிருந்தா."இந்தக் கொஞ்ச சாமான்களுக்காகவா இவ்வளவு நேரமும் இந்தச் சனங்கள் வெய்யிலுக்கை நிண்டு காய்ஞ்சதுகள்" என்று என் மனதில் ஒரு கோபம் வந்தாலும் சரி இதையாவது குடுக்கிறான்களே என்று சற்று நின்மதி அடைந்தேன். அக்காவின் அருகில் ஓடிப்போய் அவளின் கையில் இருந்த உரைப்பையை வாங்கிக் கொண்டு"அக்கா சைக்கிலில் ஏறுங்கோ நான் வீட்டை கொண்டு போய் விடுகிறன்" என்றேன்.

வேண்டாம் கணேஸ் நான் நடந்து போகிறேன் உமக்கு என்னத்திற்கு வீண் கரைச்சல்?

"என்னக்கா அப்படிச் சொல்லுறியள் எத்தினை நாள் அண்ணா் தன் வாகனத்தில் அப்பாவை ஆஸ்பத்திரிக்கு கூட்டிப்போய்வந்தவா். எங்கள் இருவருக்கும் எத்தினை உதவிகள் செய்தனியள் இதை எனக்கு கரைச்சல் என்று சொல்லுறியள்". ஏனக்கா என்னை வேறுபடுத்திறியள்?

"இல்லை கணேஸ் நான் உம்மை வேறுபடுத்தேல நான் இப்ப வீட்டை போகேல. பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு போட்டுத் தான் போவன். இயலுமானால் இந்தச் சாமான்களை வீட்டில குடும்.

என்னக்கா இங்க தாங்கோ நான் போய்குடுக்கிறன். அக்கா நான் ஒன்று கேட்கிறன்.

என்ன அண்ணனைப்பற்றி தானே?

ஓம் அக்கா

அண்ணை என்னை விட்டுப்பிரிந்த நாளில் இருந்து இதுவரை எதுவித தொடா்பும் இல்லை. நான் பல இடங்களில் பல பேரிடம் அது சம்பந்தபட்டவா்களுக்கு கடிதம் அனுப்பி உள்ளேன்.கருணை மனு போட்டுள்ளேன். உதவி செய்வாா்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரங்களும் அண்ணை உயிருக்கு எந்தவித ஆபத்து இல்லை என்றும், அவர் பத்திரமாக இருப்பதாகவும் சொல்லுது. எல்லாவற்றிற்கும் மேலாக என் காளித்தாய் என்னைக் கடைசி வரை கை விட மாட்டாள்.அவரை என்னுடன் கொண்டு வந்து சேர்ப்பாள். நீர் வேணும் எண்டால் பாரும். பழையபடி நாங்கள் எல்லோரும் அந்த வெள்ளை மணல் முற்றத்தில் இருந்து சிரித்து மகிழ்வோம். சரி கணேஸ் பூசை தொடங்கப் போகுது நான் போட்டு வாறன் என்று கூறி விட்டு அம்பாள் கோயிலை நோக்கிப் போகின்றாள்.

பத்திரகாளித்தாயே! உன்னை நானும் மனம் உருகி வேண்டுகின்றேன். அக்கா உன் மேல், எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளா. அவாவின் நம்பிக்கையை பாழாக்கி விடாதே உன்னையே நம்பி இருக்கும் அவளை ஏமாற்றி விடாதே! சீக்கிரமே ஒரு நல்ல செய்தியைத் தா தாயே என்று அந்தப் பத்திரகாளி அம்மனை நோக்கி நானும் கை எடுத்துக் கும்பிட்டு விட்டு அந்த நிவாரணச் சாமானுடன் வனிதாக்கா இருக்கும் வீட்டை நோக்கி போகின்றேன்.

முற்றும்

(யாவும் கற்பனையே)

**2010 தேசிய இலக்கியப் போட்டியில் மாவட்டம் இரண்டாம் இடம் பெற்ற சிறுகதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமைப்படுகிறது கடல்

கடல் நீரினால் அபிஷேகம் செய்யப்பட்டு கடல் காற்றையே சுவாசித்துக் கொண்டிருக்கும் எம்பெருமான் ஆஞ்சநேயரை தரிசிப்பதற்காக ஒரு ஞயிற்றுக்கிழமை மாலை அவ் ஆலயதிற்கு செல்கின்றேன். பூசை தொடங்குவதற்கு இன்னும் முக்கால் மணிநேரம் இருப்பதாக அங்கு கூடி நின்றவர்கள் பேசிக்கொள்ளவே அந்த மட்டிக்களி கடல் பக்கம் என் கால்கள் என்னை அழைத்துச் செல்கின்றன.

இயற்கை வளம் கொண்ட எம் திருமலை நகரிலே இருக்கும் இந்த மட்டிக்கலி கடலில் இருந்து மெல்ல மெல்லமாகஅலைகள் தவழ்ந்து வரும் அழகை ரசித்துக் கொண்டிருந்த என்னை அக்கடலின் நடுவே தெரிந்த காட்சி மெய் சிலிர்க்க வைத்துவிட்டது ஆமாம் ஒரு பெண் உருவம் இடுப்பளவு தண்ணீருக்குள் நின்றுகொண்டு குனிந்து குனிந்து ஏதோ பொறுக்கிக் கொண்டிருந்தது. சரி என்னதான் பொறுக்குகின்றாள் என்பதை வெளியே வந்ததுடன் பார்ப்போம் எனக் காத்திருந்தேன் ஒரு அரை மணி நேரம் கூட ஆகவில்லை கடலை விட்டு அவ் உருவம் வெளியே வந்தது மெலிந்த உடல் கலைந்த கேசம், தளர்ந்த நடை மொத்தத்தில் ஒரு ஏழ்மை வடிவத்தைக் கண்டேன். என் மனம் மிகவும் வேதனைப்பட்டது வயது போன காலத்தில் கடலில் இறங்கி மட்டி பொறுக்கி சீவியம் நடாத்தும் அவசியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலுடன் அப் பெண்ணை அணுகி பெயரையும் இருப்பிடத்தையும் அறிந்து கொண்டு பெருமானை வழிபட்டு விட்டு வீடு திரும்பினேன்.

ஏனோ தெரியாது எப்படியும் அப்பெண்ணைப்பற்றி அறிய வேண்டும் என்ற என் மனம் ஆவல்பட்டது அடுத்தநாள் மாலையிலே குறித்த இலக்கமிடப்பட்ட வீட்டைக் கண்டு பிடிக்க சற்று சிரமமாகத்தான் இருந்தது.

காரணம் கடலை அண்டியிருக்கும் அந்த அழகான ஊரில் வீடுகள் எல்லாம் நெருக்கமாக இருந்தது. ஒவ்வொரு வீட்டின் உபகரணங்களைப் பார்க்கும் போது அவர்கள் எல்லாம் கடல் தொழில் செய்பவர்கள் என்று நான் தெரிந்துகொண்டேன். கடல் இல்லை என்றால் வாழ்வே இல்லை என்று நினைத்து கடல் மாதாவையே நம்பி வாழும் அந்த குடும்பங்களை பார்க்கும் போது எனக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. காரணம் அந்த வீடுகளின் முற்றத்தில் பரவிக்கிடக்கும் வெள்ளை மணலில் குழந்தைகள் விளையாடுவதும் பெண்கள் ஆண்கள் எல்லாம் உட்கார்ந்து அளவலாவி உரையாடிக்கொண்டிருந்ததுதான். நான் போனவிடயத்தை மறந்துபோய் அந்த ஆனந்த மயமான காட்சிகளைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

"ஆரையம்மா தேடிவந்தனீங்கள்" என்று ஒரு இளைஞன் வந்து கேட்கவே எனக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது என்னைச் சுதாகரித்துக்கொண்டு" அது மகன் வந்து இங்கு பவளநாயகி என்ற ஒரு பெண்ணைக்காண வந்தனான் அவவின் வீடு எதுவென்று தெரியாது அதுதான் நிற்கிறன்" என்றேன் "பவளநாயகி அன்ரியின் வீடா இதோ இந்தவீட்டிட்கு பின்னாலைதான் அவவீடு இருக்குதுவாங்கோகாட்டிறன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லி அந்த இளைஞன் என்னைக் கூட்டிப்போனான் அவனுக்குநன்றி கூறிவிட்டுஅவ் வீட்டிற்குள் நுழைகின்றேன். நான் சென்றசமயம். குறிப்பிட்டபெண்மணிஅங்கில்லை வீட்டிலிருந்தமற்றவர்கள் என்னைஅன்புடன் வரவேற்றார்கள். அவர்களுடன் கதைத்துக்கொண்டிருந்ததில் அதுநான் தேடிவந்தபெண்ணின் வீடுஅல்லஎன்பதையும் எவ்விதசொந்தபந்தமும் இல்லாதபவளநாயகிஅந்தவீட்டுக்காரர்ஆதரவில் அவர்களடன் ஒட்டிக்கொண்டு இருக்கிறார்என்பதையும் அறிந்துகொண்டேன்.

சற்றுநேரத்தில் பவளநாயகி வேகமாக அங்கு வந்தார் நான் என்னைஅறிமுகப்படுத்திவந்தகாரணத்தையும் கூறிஅவவின் முழுச்சம்மதத்துடன் அவளைப்பற்றிஅறியமுற்பட்டேன். மிகநிதானமாகவும் தெளிவாகவும் தன்னுடையகடந்தகாலவாழ்க்கையைமற்றும் தற்போதையநிலைமையையும் எனக்குவிளக்கினார்.

மட்டக்களப்பைபிறப்பிடமாகக் கொண்டபவளநாயகிசிறுவயதுமுதல் திருமலைநகரில் வாழ்ந்துவந்தார் பதினாறுவயதினிலேபெற்றோரைஎதிர்த்துகணபதியைதிருமணம் செய்து கொண்ட பவளநாயகி நான்கு பிள்ளைகளுடன் வறுமையையும் சேர்த்தார் கணவனின் உழைப்பு அக்குடும்பத்திற்கு அன்றாட அவசியத் தேவைகளுக்குபோதாமல் இருந்தது. அதனால் பவளநாயகிஅயலில் உள்ளபெண்களுடன் சேர்ந்துமட்டிபொறுக்கும் வேலைக்குபோகத்தொடங்கினார். அந்தத் தொழில்தான் இன்றுதனியே இருக்கும் அவருக்குகைகொடுக்கின்றது இதிலிருந்துவரும் பணத்தில் தன் செலவைப்பார்த்துக் கொள்கிறார்

கணவரும் பிள்ளைகளும் நாட்டிலேநடந்தயுத்தம் காரயமாக இடம் பெயர்ந்து இந்தியாவுக்குசென்றுவாழ்கின்றார்கள். பிரச்சனைகள் ஓரளவுமுடிந்தகாலகட்டத்தில் கூட அவாகள் இலங்கைவரவிரும்பவில்லை. கணவன் பெற்றபிள்ளைகள் இருந்தும். பவளநாயகிதெரிந்தவர்கள் வீட்டில் தன் காலத்தைகழிக்கின்றார். உறவுகளைவிடஅவ்வீட்டுக்காரர் அவரைமிகவும் அன்பாக அக்கறையாக கவனித்துவருகின்றார்கள் சுகயீனம் ஏதும் வந்தாலும் அவர்களே அவரைப் பராமரிக்கின்றார்கள்.

குறிப்பிட்டகடலில் மட்டும் தான் மட்டிபொறுக்கிஅக்கடலின் கரையில் இருந்துஒருமரத்தின் கீழ்வைத்துமட்டிகளைஅவித்துவிற்பனைசெய்வார் வெள்ளிக்கிழமையிலும் மழைக்காலங்களிலும் தவிரமற்றையநாட்களில் மட்டிஎடுத்கசெல்வார். கடல் மாதகருணையால் மட்டிகள் எல்லாம் விற்பனைஆகும் நாளொன்றுக்குருபா நூறு, நூற்றைம்பதுவருமானம் வரும் என்று கூறுனார் ஆனால் அப்பணம் அவரின் வெற்றிலைபாக்குசெலவிற்கேமுக்கால்வாசிபோய்விடும் ஆடு மாடு குழை சப்புவதுபோலஓயாதுவெற்றிலைபோடுவதைபழக்கமாக்கிக் கொண்டார் அதன் தாக்கம் அவவின் இரண்டுபக்கக் கடவாய்களும் அவிந்துபோயுள்ளன. கடலில் இறங்கும் போதுஎச்சில் ஊறுவதையும் தாகத்தையும் தடுப்பதற்கும் போடத்தொடங்கியவெற்றிலை இன்று முழுச்சாப்பாடுபோல ஆகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஸ்டமானதொழிலாக இருந்தாலும் இஸ்டத்துடன் செய்கின்றார் திருப்தியடைகின்றார் ஆண்களைப்போலதுணிவுடன் கடலில் இறங்கிமட்டிபொறுக்கிப் பிழைக்கும் இவருக்குவேறுவேலைகளுக்குபோகவிருப்பம் இல்லைகாரணம் எந்தவேலையாக இருந்தாலும் மற்றவர்களுக்குபயந்துஒடுங்கிஅவர்களிடம் பொல்லாப்புவாங்கிச் செய்யவேணும் மற்றும் குறித்தநேரத்திற்குதொழிலுக்குபோகவேணும் ஆனால் இத்தொழிலுக்கு போகாமலும் விடலாம் கடலம்மாஏசவோபுறுபுறுக்கவோமாட்டாள் அப்படியாகசுதந்திரமாகமட்டிபொறுக்கிஅவித்துவிற்பனைசெய்யும் அந்த ஏழைப்பெண்ணுக்கு அபயம் கொடுத்து வந்த கற்கரை மரத்தை யாரோ புண்ணியவானகள் வெட்டிபோட்டான்களாம் ஆண்கள் தான் கடலில் இறங்கிதொழில் செய்வதைப்பார்த்து இருக்கிக்றேன். கேட்டிருக்கிகறேனஆனால் இங்குபவளநயகி?.

உண்மையிலேயேபெருமைப்படக்கூடியவிடயம் தான் கணவன் பிள்ளைகள் உழைப்பைஎதிர்பார்க்காது இந்தவயதிலும் தானேஉழைத்துதன்னைக்காப்பாற்றிக் கொள்கின்றார் இந்தியாவில் இருக்கும் பவளநாயகியின் குடும்பத்தார் மறுபடியும் திரும்பிவந்துதங்களோடு இருக்குமாறுஅழைத்தாலும் செய்யும் இத்தொழிலைவிட்டுஅவர்களுடன் போகஅவள் மனம் விரும்பவில்லை.

உழைத்தஅந்தக் கரங்கள் ஓய்வுபெறவேண்டியநிலமைஏற்பட்டால் சிலவேளை உறவுகளோடு சேரும் கட்டம் ஏற்படலாம் அதையும் நிச்சியம் சொல்லமுடியாது பவளநாயகியிடம் இருந்து பெற்றுக்கொண்ட விடயங்களை என் மனதிலே பதித்த வண்ணம் இறுதியாக அவளிடம் ஒருகேள்வியை எறிகின்றேன்.

நான் உங்களிடம் இருந்துசேகரித்தவிடயங்களைஉங்கள் படத்துடன் பத்திரிகையிலோ புத்தகத்திலோ பிரசுரித்தால் அதைப் பார்த்து எதிர்ப்பு தெரிவிக்கமாட்டிர்களா? உங்கள் குடும்பத்தவர்கள்?

நான் உண்மைநிலைமையத்தான் சொல்லுறன் களவு எடுப்பத பொய் சொல்லி வாழவும் இல்லை பொய்யான தகவல்களைஉங்களுக்குதரவுமில்லைநான் உழைக்கிறன் வாழுறன் அதனால் நான் எவருக்கும் பயப்படத்தேவையில்லைநான் சந்தோசமாகத்தான் உங்களிடம் கதைக்கின்றேன். ஆண்கள் உழைப்பைமட்டும் நம்பிவழாழும் பலபெண்கள் மத்தியில் "சாகும் வரைக்கும் சாயாமல் இருப்பேன்"என்று வைராக்கியத்துடன் உழைத்துக்கொண்டிருக்கும் அவளிடம் இருந்துவிடைபெருகின்றேன்.

ஓய்வுஎடுக்கும் வயதில் உறுதியுடக் உழைத்துவரும்
பவளநாயகியைப்பார்த்து
பெருமைப்படுகின்றாள் கடலம்மா.

முற்றும்

(யாவும் கற்பனையே)

**"விடியலைத் தேடும் விட்டில்கள்" நூலில் பிரசுரமானது (2012)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரும் வசந்த காலம்

மாரி கால மழையைப் போல இடைவிடாது பயங்கரச் சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன. யாருக்கு என்ன நடக்குமோ என்ற பயத்தில் சனங்கள் பதற்றப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அமைதியாக நின்மதியாக ஒருவராலும் ஒரு காரியத்தைச் செய்ய முடியவில்லை. தபால்காரனும் அப்படியான நிலைமையில்தான் இருந்தான். ஒவ்வொரு வீட்டு வாசலிலும் கடிதத்தை வீசி விட்டுச் சென்றான். கமல் முற்றத்தில் ஒரு கடிதம் வந்து வீழ்ந்தது.

கடித உறையை பார்த்த கமல் மிகவும் சந்தோசப்பட்டான். காரணம் அவன் உயிர் நண்பன் ஆதவனின் கடிதம் அது. கடிதத்தைப் பிரித்துப் படித்த அவன் கண்களில் இருந்து நீர்த் துளிகள் வீழ்ந்து கொண்டேயிருந்தன.தொடர்ந்து அவனால் கடிதத்தைப் பார்க்க முடியவில்லை. சற்று இடைவேளைக்குப் பின் கண்ணீர் பட்டு நனைந்திருந்த கடிதத்தை மீண்டும் படிக்க ஆரம்பித்தான்.

என் அன்பு கமல் நீண்ட நாட்களின் பின் உன் கடிதம் என் கரங்களுக்கு எட்டியது அதில் உன்னைக் கண்டேன். உன் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டேன். உன் கடிதத்தின் வரிகள் எந்த விதத்திலும் என்னைத் தாக்கி விடவில்லை. காரணம் உன் லட்சியத்தை எதிர்பார்ப்புகளை புரிந்து கொண்டவன் நான். உன்னோடு பழகிய காலம்தொட்டு உன்னை நான் பிரிந்து இங்கு வரும்வரை எல்லாவற்றிலும் பங்கு கொண்டோம். நிலமை என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்தது. அவ்வளவு தான் எதையுமே நான் மறக்கவில்லை நண்பா! எங்கள் வீட்டுத் திண்ணையில் பாண்டிக் குண்டு விளையாடினதும் உங்கள் வீட்டு முற்றத்தில் கிட்டிப்புல் விளையாடினதும் மழைக்காலம் என்றால் பள்ளிக்கூடம் போகாமல் கட் அடித்து மதவுக்குள் ஒளித்திருந்து வெள்ளத்தில் விளையாடியதும் அதனால் கிடைத்த தண்டணைகளையும் நான் மறந்து விடவில்லை மறக்கவும் முடியாது. மறக்கவே முடியாது.

அந்த பசுமை நிறைந்த நாட்களை நினைத்துப் பார்க்கவே இனிமையாக இருக்கிறது. பிறந்த மண்ணின் வாசனையை இன்னும் முகர்ந்து கொண்டே இருக்கிறேன்.

"மாற்றான் தோட்டத்து மல்லிகை வாசம் கூட" என்று நான் நினைக்கவில்லை. இங்கு வரவும் இல்லை. என் வீட்டுத் தோட்டத்து மல்லிகை கருகி வாசம் இழந்த பின்பு தான் புறப்பட்டேன்.

கண்ணுக்குக் கண்ணாக என்னை வளர்த்த என் அப்பா, பூப்போல நான் பாசமுடன் வளர்த்த என் தங்கை மீனா இருவரும் எப்படிச் செத்தார்கள் என்பதை நீ அறிவாய். ஒரே நேரத்தில இருவரையும் பறி கொடுத்துவிட்டு அரைப் பைத்தியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் இருக்கும் என் அம்மாவைக் காப்பாற்ற என் மற்றொரு தங்கை சுசியை மானமுடன் வாழ வைக்கவே மனம் இல்லாமல் என மண்ணை விட்டுப் புறப்பட்டேன். "முகாம் வாழ்கை எனக்குப் புதிதல்ல" என்று எழுதியிருந்தாய் உண்மைதான். ஆனால் இந்நாட்டு அகதி முகாமிற்கும் உவ்விடத்திற்கும் என்ன வேறுபாடு இருக்கிறது சொல் பார்ப்பம்? வீடு என்ற பெயரில் ஒரு முகாமிற்குள் தானே முடங்கிக் கிடக்கின்றோம். சுதந்திரமாக நின்மதியாக வீட்டில் வாழ்ந்தோமா? தற்போது உவ்விடம் நடக்கும் பிரச்சனையைப் பார்க்கும் போது மற்றைய என் தங்கையை என்றாலும் காப்பாற்றி விட்டேன் என்று திருப்தி அடைகிறேன். அம்மாவிற்கு என் நினைவு விட உன் நினைவு தான் அதிகம். அந்தப் பொடியன் பிடிவாதம் பிடித்துக் கொண்டு இருக்கிறான் அவனை இங்கு வரச் சொல் என்று அம்மா என்னைக் கரைச்சல் படுத்துகின்றா. "நாட்டுப் பற்றில் அவன் ஊறிப்போனான்" என்று அம்மாவுக்கு விளக்க முடியுமா?

மற்றும் உவ்விடம் பொருட்கள் எல்லாம் சரியான விலை என்றும் குடும்பத்தை கொண்டு போவதே பெரும்பாடாக இருக்கிறது என்று சித்தி கடிதம் போட்டிருந்தா. யாருக்கு யார் உதவி செய்வது. யாருக்கு யார் ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் இருக்கிறது. உறவுகளோடும் நண்பர்களோடும் சேர்ந்திருக்கும் சந்தோசம் எதிலுமே இல்லை. கமல்! கவலைப்படாதே மீண்டும் அந்த வசந்த காலம் வரும், நாம் இருவரும் சந்தோசமாக, சுதந்திரமாக அர்த்த ராத்திரியிலும் உலாவும் காலம் வெகுவிரைவில் வரும். அக்காலத்திற்கும் ஒரு காலக்கெடு வந்தால் தங்கையின் வாழ்விற்கு ஒரு வழியைத் தேடிக் கொடுத்து விட்டு அம்மாவையும் கூட்டிக்கொண்டு நான் உவ்விடம் வந்து விடுவேன்.

உன்னைப் போல் பல பேர நம்பிக்கை இழக்காமல் காத்திருப்பது போல் நானும் பிறந்த மண்ணிற்கே திரும்பி வந்திடுவேன் மரணம் எங்கேயும் வரலாம். எப்படியும் வரலாம். மரணத்தைக் கண்டு அஞ்சுபவன் நான் அல்ல, என்னோடு உவ்விடம் திரும்பி வரச் சம்மதித்த அம்மா எமது வீட்டிற்கு வர விரும்பவில்லை.

இரத்த ஆறு ஓடிய அந்த வீட்டில் காலடி வைக்க விரும்பவில்லை. அம்மாவின் விருப்பம் போலவே செய்ய வேண்டும். அதனால் எங்களது வீட்டை உடனடியாக விற்பதற்கு ஏற்பாடு செய். காணி இப்போ நல்ல விலை போகுது என்று அறிந்தேன். அதற்காக கொள்ளை இலாபம் பெற நான் விரும்பவில்லை. நியாமான விலைக்கு விற்கப்பார். எங்கள் காணி உறுதி உன்னிடம் தான் தந்து விட்டதாக அம்மா சொன்னார். தங்கச்சிக்கு இங்க தான் ஒரு மாஸ்ரர் மாப்பிள்ளையை பேசி முடித்திருக்கிறேன். அனேகமாக இந்த வருட முடிவிற்குள் திருமணம் முடிந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கமலண்ணை வாடகை வீட்டில் தானே இரக்கிறார். அவரை எங்கள் வீட்டில் இருக்க விடலாம் தானே ஏன் வீட்டை விற்கிறீர்கள்?" எனத் தங்கச்சி சுசி என்னை ஏசுகிறாள். தன் வீட்டில் நடந்த கொடுமை அவளுக்கு எங்கே தெரியப் போகுது.

நான் இல்லாத வேளை என் அப்பாவிற்கும் தங்கச்சிக்கும் நடந்த கொடூரம்! என் தங்கையின் உயிர் உன் மடியில் தான் பிரிந்ததென்றும் அப்பாவின் இறுதி மூச்சு அடங்கும் போது என்னைப் போல குரல் கொடுத்து அவர் ஆசையைப் பூர்த்தி செய்ததும் வெளியூரில் படித்துக் கொண்டிருந்தவள் விடயம் அறிந்து அதிர்ச்சியில் மயங்கிப் போய் இரண்டு நாட்கள் கண் திறக்காமல் கிடந்த அவளுக்கு தெரிந்திருக்க நியாயம் இல்லை. நீயும் அந்த வீட்டில் குடியிருக்க விரும்பமாட்டாய் என்பதால் தான் எங்கள் வீட்டை விற்பதற்கு ஒழுங்கு செய்யும் படி எழுதுகிறேன். கமல் உன்னால் முடியுமானால் என் வீட்டில் போய் இரு. இரத்தக் கறை பிடித்திருக்கும் என் வீட்டு முற்றத்தில் சாணித்தண்ணீர் படட்டும். எதையும் ஜீரணிக்ககூடிய மனமும் சக்தியும் உனக்கு இருப்பதால் தான் தங்கையின் வேண்டுகோளுக்கு இணங்கி வீட்டு விடயத்தை எழுதுகிறேன் கோபப்படாதே.

மீண்டும் ஒரு பூரண கதவடைப்பு வரமுன்னே உனக்கு இக் கடிதம் சேரவேண்டும் என்பதற்காக உடனே பதில் எழுதுகின்றேன். உன் குடும்பத்தை கேட்டதாக சொல். மறந்து விடாமல் என் யூலியைக் கூட்டிக் கொண்டு போய் உன்னோடு வைத்திரு. நான் வரும் வரை அவன் உனக்கு காவலாக உன் நண்பனைப்போல இருப்பான். கமல்! இன்னும் எழுத எத்தனையோ விடயம் இருக்கு மிகுதியை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன். காரணம் அகதிகளுக்கு சாமான்கள் குடுக்கினம். நான் தான் நீண்ட கியூவில் நின்று வாங்க வேணும் அதனால் இக்கடிததத்தை இத்துடன் முடிக்கின்றேன். நண்பன் ஆதவன்.

கடிதத்தை படித்து விட்டு வெளியே போகப் புறப்பட்ட கமலைப் பார்த்து "எல்லாச் சனங்களும் மூட்டை முடிச்சோடு இடம் பெயர்ந்து கொண்டிருக்குதுகள் நீ மட்டும் ஒரு முடிவும் சொல்லாமல் உன்ர பாட்டில் திரியிறாய்" குமர்ப்பிள்ளையை வைத்துக் கொண்டு மடியில நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பது போல நான் துடிதுடித்துக் கொண்டிருக்கிறன். என்னடா கமல் நாங்களும் போவோமா? என்று கேட்ட தாயின் வார்த்தைகளைக் காதில வாங்கிக் கொள்ளாமல் புறப்பட்டுச் சென்றான் கமல்.

**முற்றும்**

(யாவும் கற்பனையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியின் விளையாட்டு

சரியாக முப்பது வருடங்கள் கழித்து கனடாவில் இருந்து தன் பிறந்தநாட்டிற்கு தன்குடும்பத்துடன் வந்த மாலதி பெரும்பாலான இடங்களைச் சுற்றிப்பார்த்துவிட்டு கடைசியாக வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயிலுக்குப் போகின்றாள். போரினால் வன்னியில் ஏற்பட்ட அவலங்களை பத்திரிகையிலும், தொலைக்காட்சியிலும் படித்தும், பார்த்தும் அறிந்து கொண்டவளுக்கு நேரில் வந்து பார்த்து புதிதாகத் தென்படாவிட்டாலும் அறிந்தவற்றை விட மிகவும் கொடூரமான முறையில் வன்னி பாதிக்கப்பட்டதைப் பார்த்து அதிரந்து போனாள். "தாங்கள் எல்லாம் வெளிநாட்டில் நின்மதியாக வாழ தங்கள் உறவுகள் சொந்தங்கள் எப்படி எல்லாம் அவஸ்த்தைப்பட்டிருப்பார்கள்" என்று வேதனைப்பட்டாள். வந்தோரை வாழவைத்த வன்னி மண்ணுக்கு ஏற்பட்ட நிலமையைப் பார்த்து துன்பப்பட்ட வண்ணம் கோயிலுக்குள் போக எத்தனித்தவளை "மாலதி எப்ப கனடாவில் இருந்து வந்தனீ? என்று ஒரு பெண்ணின் குரல் கேட்கவே திரும்பிப்பார்த்தவள் தன்பெயர் சொல்லி அழைத்தவளை அடையாளம் காணமுடியாமல் முழிக்கிறாள்.

என்னடியப்பா! எல்லோரையும் போல நீயும் வெளிநாடு போனவுடன் பழகினவர்களையும் மறந்துவிட்டாய் போலிக்கு பரவாயில்லை நானே சொல்லுறன் நான் தான் உன் சிநேகிதி பூமா இப்பாவது ஞாபகம் வருகுதோ? என்று அவள் சொல்லியது தான் தாமதம்

பூமா என்னடி உன் கோலம்? ஆளே தெரியாமல் இப்படி மெலிந்து கறுத்துப்போய் இருக்கிறாயே! உனக்கு என்னடி நடந்தது? அழகு தேவதையாய் எந்தநேரமும் சிரித்துக்கொண்டு சிட்டுக்குருவிபோல பறந்து திரிந்த நீயா? என் பூமாவா? எனக்கேட்டவண்ணம் அவள் தோளைப் பிடித்து உலுக்கியவள் அவள் கழுத்தில் தாலிக்கயிறு கூட இல்லாததைப் பார்த்து அதிர்ச்சியடைந்தாள். ஏதேதோ விபரீதமான கற்பனை எல்லாம் தோன்றவே அதை வெளிக்காட்டாமல் என்னடி தாலி கூட இல்லாத அளவிற்கு உனக்குக் கஸ்டம் வந்து விட்டதா? என்று கேட்டாள்.

தாலிகட்டாமல் அது எப்படி என் கழுத்தில் இருக்கும்? என்று ஒரு சிறு புன்னகையுடன் கூறினாள் பூமா

அப்ப நீ கலியாணமே செயவில்லையா?

இல்லை

என்னடி நீயும் ராஜனும் ஒருவருக்கொருவர் காதலித்துத்தானே இருந்தீர்கள் அவனைத்தானே கலியாணமும் செய்யப் போவதாக எந்தநேரமும் அவனைப் பற்றியே புலம்பிக்கொண்டிருப்பாய். நாங்கள் இருவரும் கலியாணம் செய்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களைப்போல ஒரு அன்பான தம்பதிகள் வேறு எவரும் இருக்கமாட்டார்கள். ராஜன் என்மேல் உயிரையே வைத்திருக்கிறார் நான் பிரிந்தால் அவர் தாங்கமாட்டார். என்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் மனதால் கூட நினைக்கமாட்டார் என்று எல்லாம் சொன்னியே? அந்த உன் ராஜன் எங்கே? அவன் ஏன் உன்னைக் கலியாணம் செய்யேல்லை? ஏமாத்திப்போட்டானோ சொல்லடி'

அவர் என்னை ஏமாத்தவும் இல்லை ஏமாற்ற நினைக்கவும் இல்லை எல்லாம் என் விதி

விதியும் மண்ணாங்கட்டியும். அவன் இப்ப எங்கை இருக்கிறான்? என்ன செய்யிறான்? அதை முதலிலை சொல்லு.

அவர் வேறை கலியாணம் செய்து இரண்டு பிள்ளைகளும் இருக்கிறார்கள். அவர் என்னை விட்டுப்பிரிய நானும் ஒரு காரணம்

என்ன நீயும் ஒரு காரணமா?

ஓமெடி மாலதி உறவுக்காரன் ஒருவன் எங்கடை வீட்டிலை வந்து தங்கியிருந்தது உனக்குத் தெரியும் தானே

ஓம் அவன் செந்தில் தானே நல்லாய்த்தெரியும் ஏன் அவனுக்கு என்ன?

அவனுக்கு ஒன்றும் நடக்கேல்லை. அவன் நல்ல வசதியாய் பிள்ளை குட்டியுடன் சிறப்பாக வாழுறான். அந்தப் பரதேசியிலை நான் காட்டிய இரக்கம் பாசம் என் தலை எழுத்தையே மாற்றிவிட்டது.

எனக்கு ஒன்றுமே விளங்கேல்லை விளக்கமாய்ச் சொல்லடி.

மாலதி என் ராஜனை நான் எவ்வளவு ஆழமாகக் காதலித்தேன் என்று உனக்குத் தெரியும்தானே? அவரும் அப்படித்தான் என்மேல் உயிராக இருந்தார். அவரும் நானும் எங்கை எல்லாம் சுத்தினோம் எப்படி எல்லாம் பழகினோம் என்று உனக்கு மட்டும்தான் தெரியும்.

நான் ராஜனைக் கலியாணம் செய்தால் தன்மேல் நான் வைத்திருக்கும் அன்பு பாசம் பறிபோய்விடும் அருமை கெட்டுவிடும் என்று செந்தில் நினைத்தான். பலதடவைகள் என்னிடம் சொல்லியும் இருக்கிறான். அவன் மேல் அதிக பாசம் நான் வைத்தது உண்மைதான் அந்த உந்தலில் தான் என் ராஜனுக்கு எழுதிய கடிதத்தில் "என் இரு கண்களில் ஒன்று நீங்கள் ஒன்று அவன்" என்று யோசிக்காமல் எழுதிப்போட்டன் ஆனால் அந்த எழுத்துக்கள் ராஜனுக்குப் பிடிக்கவில்லை. தனக்கு மனைவியாக வரப்போறவள் இன்னுமொரு ஆணை முக்கியப்படுத்தி எழுதியதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை அன்றிலிருந்து அவர் என்னுடன் தொடர்பு கொள்ளவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் நீ உண்மையான காரணத்தைக் கூறியிருக்கலாம் தானே

ஐயோ! அவர் இதற்காகத்தான் என் தொடர்பை துண்டித்தவர் என்று எனக்குத் தெரியவே தெரியாது. அவர் அதற்கான சந்தர்ப்பத்தை எனக்குத் தரவேயில்லை. ஏன் அவர் என்னைப் பிரிந்தார் என்பதே எனக்கு வேதனையாக இருந்தது.

அதற்குப் பிறகு நீ அவனைச் சந்திக்கவேயில்லையா?

நான் எவ்வளவோ முயற்சித்தும் தேடித் திரிந்தும் அவரைச் சந்திக்க முடியாமல் போய்விட்டது மாலதி அவர் பிரிவு என்னைத் துடிக்கவைத்தது. எனக்குப் பயித்தியம் பிடிக்காத குறை ஒன்றுதான். கொஞ்சக்காலம் நடைப்பிணமாக வாழ்ந்தேன். தற்கொலை செய்ய முயற்சித்தும அதிலும் தோற்றுப்போனேன் பலபேர் பல கதை சொன்னார்கள் எத்தனையோ துன்பங்கள் இன்னல்கள் மத்தியில் ஏதோ வாழ்ந்து கொண்டு இருக்கிறன்

அது சரி உன் கடித எழுத்தால்தான் ராஜன் மாறினான் என்று எப்படி உனக்குத் தெரியும்?

ராஜன்தான் சொன்னார்

என்னடி அவனைக் காணேல்லை என்று சொல்லுறாய். அவன்தான் சொன்னவன் என்கிறாய். உண்மையிலே உன் பேச்சு எனக்கு குழப்பமாகக் கிடக்குது எப்ப அவனைச் சந்தித்தனீ?

போனமாதம் வவனியாவிலை வைத்து என் சொந்தக்காரர் ஒருவரை ராஜன் சந்தித்தவராம். அப்போதுதான் என்னைப்பற்றி விசாரித்து என் டெலிபோன் நம்பரையும் வாங்கி என்னுடன் தொடர்பு கொண்டார்.

உன் மனசு அப்படியே உருகிப்போயிருக்குமே நீயும் எல்லாத்தையும் மறந்து அவனோடு கதைச்சாயாக்கும் எனக்குத் தெரியும் உன்னைப்பற்றி சரி மேலே சொல்லு.

நான் கலியாணம் செய்யாமல் இருப்பது அவருக்கு அப்போது தான் தெரியும். தன்னாலை தான் எனக்கு இப்படி ஒரு நிலமை என்று உண்மையிலே மிகவும் வேதனைப்பட்டார் காலம் கடந்து போனதால் எதுவுமே செய்யமுடியாமல் இருக்கிறார்.

அதுசரி அவன் யாரைக் கலியாணம் செய்தவன். களனியிலை இருந்து வந்த அவனோடு ஒன்றாய் வேலை செய்த அவள் ரஜனியைத்தானே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓமோம் எப்பிடி அது உனக்குத்தெரியும்?

எனக்குதெரியுமெடி எல்லாம் நீ ஏமாளி என்றால் நானும் அப்படியே? அவையள் இரண்டு பேரும் பழகினவிதமும் அவனைத்தேடி அவள் அவன் ரூமுக்கு வாறதும் அவையின்ரை கதைப்பும் சிரிப்பும் எல்லாத்தையும் பார்த்தனான். இரண்டு பேரினதும் நடவடிக்கை சரியில்லை என்று உனக்குச் சொன்னன்தானே நீ நம்பவில்லை அவர் அப்படிப்பட்டவர் இல்லை கடைசிவரை என்னை ஏமாற்றமாட்டார் என்று சொன்னியே இப்ப பாத்தியே அவன் செய்த வேலையை? சரி அவன்மேல் நீ உண்மையான அன்பு வைத்தபடியால் நம்பினாய் ஆனால் அவள் ரஜனி உனக்குச் சவால் விட்டு எழுதின கடிதத்தை அவனிடம் காட்டினாயா அதுவும் இல்லை. உன் தலையிலை நீயே உன்கையால் அள்ளிப்போட்ட மண் ஒருவகையில் நீ அந்த வசனம் எழுதியது பெரிய பிழைதான். அதை எந்த ஒரு ஆம்பிளையாலும் ஏற்றுக்கொள்ள முடியாதுதான் ஆனால் உன் குணம், நடத்தை, நீ அவன்மேல் வைத்திருந்த ஆழமான அன்பு பாசத்தைத் தெரிந்து கொண்டும் உன்னை மறந்தானே? உன்னைச் சட்டென்று தூக்கி எறிந்தானே இது உன் எழுத்தால் மட்டும் வந்த மாற்றம் என்று என்னால் நினைக்கமுடியவில்லை.

பின்னை எதனால் என்று சொல்லுறாய்?

அவன் வேறு யாரையாவது கலியாணம் செய்திருந்தால் ஓரளவு ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இது கைக்குள்ளே வைத்திருந்தவளைக் கட்டியிருக்கிறான் என்றால் என்ன இது நாடகமே வாழ்க்கை அவளைக்கட்டுவதற்காக. தன் உடனடித்தேவைகளுக்காக உன்னை விட்டிருக்கிறான். இதுதான் உண்மை, உன்னை அவன் கொஞ்சம் என்றாலும் உண்மையாகக் காதலித்து இருந்திருந்தால் உன்னோடு அதுபற்றிக் கேட்டிருப்பான் அவசரப்பட்டு அப்படி ஒரு முடிவை கடைசிவரை எடுத்திருக்கவே மாட்டான். ஒன்றில் அவன் உன்னைப்போலியாகக் காதலித்து இருக்கவேணும் அல்லது உன் எழுத்தால் தான் அவன் மனம் மாறியது பொய்யாக இருக்கவேணும் தனக்கு உடனடியாக ஒரு துணையைத் தேடியவன் வாழ்க்கையை அமைத்து சுகபோகம் அனுபவித்தவன் ஒரு கணம் என்றாலும் உன்னை நினைத்துப் பார்த்தானா? உன் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தானா? சரி அதுதான் போகட்டும் ஏதோ ஒரு வேகத்தில் முடிவெடுத்து வேறு ஒருத்தியைக் கட்டியவன் பின்பு என்றாலும் உன் நிலமையைப்பற்றி அறிய முற்பட்டானா? அதுவும் இல்லை இப்ப அவன் மனம் கலங்கி என்ன பயன்? அவன் உன்னை மறந்து எடுத்தெறிஞ்சு போட்டு சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருக்கிறான். நீ வாழாவெட்டியாக மற்றவர்கள் தயவில் வாழ்ந்து கொண்டிருக்கிறாய். நான் என்றால் உப்பிடியானவங்களுக்கு முன்னிலையில் வாழ்ந்து காட்டியிருப்பன். விசரி எடி நீ உன்னை நினைக்க எனக்குக் கோபம் கோபமாய் வருகுது இனிக்கனக்கக் கதைச்சு ஒன்றும் நடக்கப்போவதில்லை உன்னுடன் தொடர்பை ஏற்படுத்தாமல் விட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிழையாப் போச்சுது அல்லது உன்னை வெளிநாட்டிற்குக் கூப்பிட்டு அங்கேயே உனக்கு ஒரு வாழ்க்கையை அமைச்சுத் தந்திருப்பன்.

எனக்கு வெளிநாட்டிலை இருந்து கலியாணம் பேசி வந்தது. நான்தான் வேண்டாம் என்று மறுத்திட்டன்.

என்வயதை ஒத்த நீ தனிமரமாய் நிக்கிறாய், நான் பிள்ளைகள் பேரன் பேத்தியுடன் வந்திருக்கிறன். பார்த்தியே காலத்தின் கோலத்தை? ஏன்டி நல்ல உள்ளங்களை ஆண்டவன் இப்படிச் சோதிக்கின்றார். உன்ரை நல்ல குணத்திற்கும் இரக்க சுபாவத்திற்கும் எப்படி ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சு இருக்கவேணும். உன்னை நினைக்க எனக்கு எவ்வளவு வேதனையாக இருக்குது தெரியுமா? பூமா! நீ கொஞ்சக்காலம் என்றாலும் சந்தோஷமாக, நல்லாய் வாழவேணும் என்பதுதான் என் ஆசை அதனாலைதான் நான் ஒரு முடிவெடுத்திருக்கிறன். உன்னைக் கனடாவிற்கு எடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்போறன். அது என்னாலை முடியும். நீ பாஸ்போட்டை எடுத்துத்தா இப்ப ஒருநாளையிலை எடுக்கலாம்தானே. நாளைக்கு நீ என்னுடன் கொழும்பிற்கு வரவேணும் சொல்லிப்போட்டன். என்னடி நான் விசரி போலை அலம்பிக்கொண்டிருக்கிறன் நீ ஒன்றும் பேசாமல் சிரிச்சுக்கொண்டு நிக்கிறாய். என்ன என்னோடை நாளைக்கு வாறது தானே இல்லை வாறாய்.

சும்மா இரு மாலதி இந்த வயதிற்குப் பிறகு எனக்கு வெளிநாடு அவசியம் இல்லை. எனக்கு அதில் இஸ்டமும் இல்லை. அதுவும் போக எனக்கு இந்த ஊரை நாட்டை விட்டு வர விருப்பம் இல்லை.

ஏன் விருப்பம் இல்லை என்ற காரணத்தை என்றாலும் நான் அறிந்து கொள்ளலாமா?

காரணம் தெரியாது. ஆனால் நான் வரவில்லை நீ சந்தோஷமாகப் போட்டு வா என்னை வற்புறுத்தாதை.

அப்போது பூமாவின் கைத்தொலைபேசி கிணு கிணுக்கவே எடுத்துப்பார்க்கின்றாள். அவள் முகத்தில் ஒரு பிரகாசம், மகிழ்ச்சி ஏற்படுவதை மாலதி கண்டு கொள்கிறாள் அவருக்கு ஏதோ புரிவதைப்போல இருக்கின்றது. பெருமூச்சு ஒன்றை விட்டபடி அவ்விடத்தை விட்டு நகர்கின்றாள்.

(முற்றும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் வருவார்

திருமலையில் ஒரு பின்தங்கிய கிராமத்தில் இருக்கும் பாடசாலையில் ஆசிரியராக பணிபுரியும் ஒருவரைச் சந்திப்பதற்காக சென்றேன். நிழல்தரும் மரங்களும் குரோட்டன் செடிகளும் பூத்துக்குலுங்கும் பூமரங்களும் நிறைந்து காணப்பட்ட அந்தப் பாடசாலையின் சூழல் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் சென்ற சமயம் பாடசாலை இடைவேளைபோல் இருக்கின்றது. காரணம் மரத்தடியில் மாணவர்கள் ஒன்று கூடி கலகலப்பாய் இருந்ததையும் சில சின்னஞ்சிறு சிறுசிட்டுக்கள் ஓடித்திரிந்து விளையாடியதைப் பார்த்தவுடன் எனது பள்ளி ஞாபகம் எனக்கு வந்தது. பள்ளிக்கூட வாழ்க்கை பழகிய தோழர்கள் இதைப்போல சந்தோசம் வேறு எதிலுமே கிடைக்கப்போவதுமில்லை. உண்மையிலேயே அது ஒரு பொற்காலம் என்றே சொல்லலாம். பசுமை நிறைந்த அந்த நினைவுகளோடு ஆசிரியரை தேடிச் செல்கின்றேன்.

அங்கே வகுப்பறையின் முன்னே இருக்கும் குரோட்ன் செடிகளுக்கு தண்ணீரை ஊற்றிக்கொண்டு நிற்கும் ஒரு இளம்பெண்ணைக் கண்டேன் நான் தேடிச்செல்லும் ஆசிரியரைப்பற்றி இவளிடம் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் அவள் பக்கம் சென்றேன். தன்னருகே என்னைக் கண்டவுடன். செய்த வேலையை இடையிலே நிறுவத்திவிட்டு "வாங்கோ மிஸ் யாரைத்தேடுறீங்க" என்று புன்சிரிப்புடன் கேட்டு என்னை அழைத்துச் செல்கின்றாள். நான் வந்த விடயத்தை முடித்து விட்டு சும்மா ஒரு பேச்சுக்காக அந்தப் பெண்ணைப்பற்றி ஆசிரியரிடம் கேட்டேன். ஆசிரியர் சொன்ன விடயம் எனக்கு அதிர்ச்சியைக் கொண்டந்தது. துன்பங்களை சுமந்து கொண்டு வாழும் அந்தப்பெண்ணைப் பற்றி முழு விபரங்களை அறிய வேண்டும் என்ற ஆவலுடன் பாடசாலை அதிபருடன் அனுமதி பெற்று அப்பெண்ணை அணுகினேன். மீண்டு ஒரு புன்னகையை வீசியபடி "உங்களைப் பார்த்தால் மிஸ் எனக்கு என் சித்தியின் ஞாபகம் வருகின்றது கதைக்கிறது சிரிக்கிறது எல்லாம் சரியா அவவாவைப்போலவே இருக்கிறியள்."

அப்ப நான் கட்டாயம் உம்முடைய சித்தியை ஒருக்கால் பார்க்கத்தான் வேண்டும். நான் எப்படி சிரிக்கின்றேன் கதைக்கிறேன் என்று நேரில் பார்க்கலாம் இல்லையா? என்று சொல்லி நான் சிரித்தேன். அதுவரை நேரமும் சிரித்துக்கொண்டு இருந்த வதனா என்ற பெயரை உடைய அந்தப் பெண் மௌனமானாள்.

என்ன வதனா நான் வீட்டை வாறது என்றதும் சோடாவோ தேனீரோ தரவேண்டும் என்று யோசிக்கின்றீரா? அது ஒன்றும் வேண்டாம் நீர் என்னைக் கூட்டிப்போகாவிட்டாலும் நான் உங்கடை சித்தியை ஒருக்கால் பார்க்க கட்டாயம் வரத்தான் போகின்றேன். என்று சொல்லியதுதான் தாமதம் மிஸ் மிஸ் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி என்கைகளைப்பிடித்து குலுங்கி குலுங்கி அழுதாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை நான் திகைத்துப்போய்விட்டேன். இதை அவதானித்த வதனா மிஸ் எங்கடை சித்தி இப்ப உயிரோடை இல்லை. படுபாவிகள் அவவவைக் கொண்டு போட்டார்கள் தான் உண்டு தன் வேலை உண்டு என்று அமைதியாக இருந்து எங்களை அரவணைத்து வாழ்ந்த எங்கள் அன்புச்சித்தியை மானபங்கப்படுத்தி சித்திரவதை செய்து சாகடித்துப்போட்டான்கள். வெறிநாய்களுக்கு என் சித்தி பலியாகிப்போயிட்டா. தட்டிக்கேட்க எங்களுக்கு தைரியம் இல்லாததால் அப்படியே அச்சம்பவம் மூடி மறைஞ்சு போச்சுது. மிஸ் இது மட்டுமல்ல எத்தனை கொடுமைகள் அநியாயங்கள் நடந்தது எமக்குத்தெரிந்தும் நாங்கள் வாயை மூடிக்கொண்டுதான் இருக்கிறம். ஊர்க்கதையை விடுங்கோ மிஸ் என் கதையைச் சொல்லுறன் என்று அழுகையின் ஊடே சொல்லத்தொடங்கினாள்...

வதனாவின் கணவர் ஜோர்ஜ் இவர்களுக்கு ஆணும் பெண்ணுமாக இரு குழந்தைகள் உள்ளனர். மெக்கானிக்காக வேலை செய்யும் ஜோர்ஜ் அதில் வரும் பணத்தில் வருமானத்திற்கு ஏற்றவாறு சிக்கனமாக குடும்பத்தை நடாத்தி வந்தார். செல்வம் செழிக்காவிட்டாலும் அந்தக் குடும்பத்தில் சந்தோசம் நிறைய இருந்தது. அனாவசியமான ஆடம்பர வாழ்விற்கு ஆசைப்படாத வகையில் குழந்தைகளும் இருந்தமையினால் சேமிப்பு இல்லையானாலும் மற்றவர்களிடம் கடன்படாது குடும்பம் ஓடிக்கொண்டிருந்தது.

விதி என்னும் கொடூர அரக்கன் அக்குடும்பத்திலும் தன் விளையாட்டைக்காட்ட நினைத்தான் விளையாடினான். ஆமாம் வழக்கம்போலவே அந்த ஞாயிற்றுக்கிழமையும் அம்மா அப்பா பிள்ளைகள் எல்லோரும் இருந்து TV பார்த்துக்கொண்டிருந்தனர். அச்சமயம் இரவு சுமார் 8 மணியிருக்கும் திடீரென இனம் தெரியாத நபர்கள் அவர்கள் வீட்டிற்குள் புகுந்து வதனாவின் கணவர் கையைப்பிடித்து விசாரணை செய்த பின்பு திரும்பவும் கொண்டுவந்து விடுகின்றோம் என்று கூட்டிச்சென்றவர்கள் தான் இதுநாள் வரை அவரை விடவில்லை. ஒரு நாள் கூட மனைவி பிள்ளைகள் கண்ணில் காட்டவும் இல்லை. ஜோர்ஜ் எங்கே இருக்கிறார் என்ன செய்கிறார் என்று எவருக்குமே தெரியாது.

கணவரைப்பற்றி விபரம் அறிவதற்காக அந்தப் பேதைப்பெண் மனித உரிமைக்குழு, காவல் நிலையம் என்று முறைப்பாடு செய்தும் பதில் பூச்சியம் தான். கணவன் இல்லாமல் இரண்டு குழந்தைகளையும் வைத்திருக்கும் வதனாவுக்கு எவருமே உதவிகள் செய்ய முன்வருவதில்லை இலவசமான யோசனையை மட்டும் வழங்குவார்கள் அதனால் தான் தன் இரண்டு பிள்ளைகளையும் காப்பாற்றுவதற்காக அந்தப்பாடசாலையில் கூட்டிச்சுத்தம் செய்யும் தொழில் செய்ய வந்தார். அத்தொழிலில் கிடைக்கும் வருமானம் அவளுக்கு போதாமல் இருந்தது அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பள்ளிக்கூட பெண் அதிபர் தன்னால் இயன்ற உதவிகளை செய்கின்றார் அதிபரின் உதவி மட்டும் இல்லாது இருந்திருந்தால் வதனா பெரிதும் கஸ்ரப்பட்டிருப்பாள். கடவுள் நேரே வந்து ஒருவருக்கும் உதவி செய்வதில்லை வேறு எவர் மூலமாகவோ செய்விக்கின்றார். அது அந்த அதிபர் மூலமாக வதனாவிற்கு கிடைச்சிருக்கு.

மற்றவர்களிடம் கையேந்தி உதவிகேட்டு கேவலப்படுவதை விட கூட்டித்துப்பரவு செய்யும் தொழிலை அவள் கௌரவமான தொழிலாக நினைத்துச் செய்கின்றாள். குடும்ப சூழ்நிலை காரணமாக இடையிலே படிப்பை நிறுத்திய வதனா தான் கஸ்ரப்பட்டிருந்தாலும் பிள்ளைகள் இருவரையும் படிப்பித்து ஒரு நல்ல உத்தியோகத்தில் வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றாள். இரண்டு பிள்ளைகளும் படிப்பில் நல்ல கெட்டிக்காரர்கள் தாயின் கஸ்ட நிலமை நன்றாக தெரிந்த படியால் ரியூசன் ரீச்சர்மார் பணம் வாங்குவதில்லை அப்பாவின் உழைப்பில் அதிகாரம் பண்ணி உரிமையுடன் பயமில்லாமல் செயற்பட வேண்டிய பிள்ளைகள் இன்று யாரோ உதவி செய்ய வேண்டிய நிலமைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இது... ஆண்டவன் சோதனையோ? யார் கொடுத்த சோதனையோ?

ஒரு மனிதனுக்கு மரணம் தான் நிச்சயிக்கப்பட்ட ஒன்று. அதிலிருந்து யாருமே தப்பிக்க முடியாது. அப்படியான ஒரு சாவு வந்திருந்தால் காலம் முடிந்து விட்டது என்று மனதைத் தேற்றிக்கொண்டு நாளடைவில் மறந்தே போகலாம். ஆனாலும் பெரும் கொடுமை என்னவென்றால் ஆள் உயிருடன் இருக்குதா? இல்லையா? என்று நினைத்து நித்தமும் கலங்குவதுதான். அப்படியான ஒரு கலக்கத்துடன் வதனா வாழ்ந்த கொண்டு இருந்தாலும் மனதிலே அவர் வருவார என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றாள்.

கணவர் வருவார் என்ற அசையாத நம்பிக்கையுடன் காத்திருக்கும் வதனாவிடம் உங்களுக்கு என்றொரு லட்சியம் எதிர்பார்ப்பு என்று ஏதாவது உண்டா என்று கேட்டேன்.

எனக்கென்று எதிர்பார்ப்புகள் எதுவுமில்லை மிஸ் இளம் வயதிலேயே என் வாழ்க்கை தொலைந்து போன மாதிரி இருந்தாலும் என் இரு செலவங்களுக்காகவே உயிர் வாழுறன். என் கணவருக்கு நடந்தது நினைத்துப்பார்க்கும் போது மனம் வேகுது துடிக்குது என்னைப்போல இன்னும் எத்தனையோ பெண்கள் இந்நிலைக்கு உட்படுத்தப்பட்டு வாழ்ந்து கொண்டிருப்பது இந்த உலகம் முழுவதுமே தெரியும் அப்பாவிகளான எங்களுக்கு ஏன் இப்படி கொடுமை நடக்குது? நாங்கள் என்ன குற்றம் செய்தோம்? எனக்கு வீடு காணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று எதுவுமே தேவையில்லை என்னுடைய பிள்ளைகளுக்கு அவர்கள் அப்பா வேணும். பிள்ளைகள் படிக்க வேணும் நல்ல நிலமைக்கு வரவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டவர். அவர் திரும்பிவரும்வரை என் பிள்ளைகளை நான் வளர்ப்பன் படிப்பிப்பன். என்ர பிள்ளைகள் நன்றாய் படிக்கவேணும் பெரிய பதவி வகிக்கணும் அதுதான் என் லட்சியம் எதிர்பார்ப்பு என்கிறார்.

கணவன் திரும்பிவருவார் என்ற பெரும் நம்பிக்கையுடன் காத்திருக்கும் வதனாவின் ஆசை நிறைவேறுமா? பதில் யார் சொல்வார்கள்? உங்களுக்கு யாருக்காவது இதற்கு விடை தெரியுமா? தயதுசெய்து தெரிந்தால் கூறுங்கள்.

இப்படி என்னும் எத்தனையோ பெண்கள் காத்திருக்கின்றார்கள்.

முற்றும்.

(யாவும் கற்பனை)

**"விடியலைத் தேடும் விட்டில்கள்" நூலில் பிரசுரமானது (2012)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள்தான் தாய்

"ஐயா! என்ரை மகன் கொழும்பு ஆஸ்பத்திரியிலை வருத்தமாகக் கிடக்கிறான். நாங்கள் உடனே போய் அவனைப் பார்க்க வேண்டும். நாளைக்கு வெளிக்கிடுகின்ற கப்பலில் போறதுக்கு எங்களுக்கு ரிக்கற் போட்டுத் தாங்கோ" என்று அதற்குப் பொறுப்பான ஒருத்தரிடம் பார்வதி கேட்டாள். இல்லை கெஞ்சினாள்.

"என்னம்மா விசர்க்கதை கதைக்கிறியள். இஞ்சை பாருங்கோ எத்தனை சனம் நிக்குதென்று. அவையள் எவ்வளவு நாளாய் அலையினம் தெரியுமே? நீங்கள் இண்டைக்கு வந்திட்டு கலைச்சல் கொடுக்கிறியள். போய் அடுத்த கிழமை வாங்கோ பார்க்கலாம்" என்றான் அந்த நல்ல மனிதன்.

"தம்பி! அப்படிச் சொல்லாதையுங்கோ எங்கடை பெற்ற வயிறு படும் வேதனை அந்த ஆண்டவனுக்குத் தான் தெரியும். அது உங்களுக்குத் தெரியாது. எவ்வளவு கஸ்ரப்பட்டுக் காசுமாறிக் கொண்டு வந்து நிற்கிறம். மகனைப்பார்க்க வேணும் என்று காதிலை போட்டிருந்த தோட்டைக் கூட விற்றுப்போட்டுத்தான் வந்தவ. எனக்குத் தராவிட்டாலும் பரவாயில்லை எப்படியாவது நாளைக்கு வெளிக்கிடுகின்ற கப்பலிலை இவளை மட்டும் என்றாலும் அனுப்பி விடுங்கோ! உங்களுக்கு புண்ணியம் கிடைக்கும்" என்று சொல்கின்றார் மணியம்.

"ஐயா உங்கட புராணத்தை யார் இப்ப கேட்டது? ஒருக்கால் சொன்னால் உங்களுக்கு விளங்காதோ, என்னால ஒன்றும் செய்ய முடியாது ஒரு கிழமைக்கிடையில் உங்கடை மகன் என்ன செத்தா போய்விடுவான்? போட்டு பிறகு வாங்கோ நீங்கள் போய் என்ன உயிரே குடுக்கப்போறீங்கள்? என்று அந்தக் கடமை வீரன் சொன்னதுதான் தாமதம்"

"அட பாவி என்ன வார்த்தை சொல்லுறாய்? என்ரை பிள்ளை அங்க உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான் நான் வேண்டாத தெய்வம் இல்லை. நான் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறன். அபசகுனமாய்ப் பேசுறாய். உனக்கு மனசாட்சியே இல்லையா நீயும் மனுசனா? ஒரு பெற்ற தாய் மனம் உருகி வேண்டினால் அது நிச்சயம் பலிக்கும் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த வலி ஒரு தாய்க்குத்தான் தெரியும்" என்று சொல்லி குலுங்கி குலுங்கி அழுகின்றாள் பார்வதி.

தம்பி! கோவிக்காதையும் பிள்ளை மேல் வைச்சிருக்கிற பாசத்தில உங்களைப் பேசிப்போட்டா அத மனசில வைச்சுக் கொண்டு அளவுக்கு பாஸ் கொடுக்காம மட்டும் விட்டிடாதைங்கோ. அவள் மகனை நினைச்ச நினைச்ச அந்த ஏக்கத்திலையோ செத்துப்போவாள் என்றார் மணியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா! நான் தான் யோசிக்காமல் வார்த்தையை விட்டடிட்டன். ஒரு தாயின் துடிப்பு வேதனையைத் தெரியாமல் நடந்திட்டன். நீங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும். ஒரு தாயின் கண்ணீர் என்னைக் கலக்கி விட்டது. தாயின் அன்பிற்கு முன்னால எதுவும் பெரிதில்லை என்பதைப் புரிந்து கொண்டேன். எப்படியாவது நாளைக்குப் போற கப்பலிலை உங்களுக்கு இரண்டு பேருக்கும் ரிக்கற் போட்டுத்தாறன். நீங்கள் கவலைப்படாமல் நாளைக்குப் போறதுக்கு ஆயத்தமா வாங்கோ.

"நன்றி மகன் நன்றி என்று மணியம் கூற பார்வதி சடாரென பயணச்சீட்டு தருவதாகச் சொன்னவரின் காலில் விழுந்து "மகன் நீங்கள் செய்யும் இந்தப் பெரும் உதவியை நான் மறக்கவே மாட்டேன்." தெய்வம் தான் வந்து நேரில் நிற்பதாக இருக்குது எனக்கு காரணம் ஒரு தாயின் தவிப்பை அறிந்த பிள்ளையாய் இருக்கிறீர்"

அம்மா என்ன காரியம் செய்து விட்டீர்கள்? ஒரு சில நிமிடத்திலயே என் மனதில் நீங்கள் உயர்ந்து விட்டீர்கள் என்னைப் பாவியாக்குகிறீர்கள். என்று சொல்லி தன் இரு கைகளாலும் பார்வதியைத் தூக்கி விடுகிறான்.

இல்லை மகன். நீர் கப்பல் ரிக்கற் தர மறுத்தால் ஒன்றும் செய்ய இயலாது. வேறு எந்த வழியிலும் போகவும் முடியாது என்னைப் பொறுத்த மட்டில் இது ஒரு பெரிய உதவிதான். என்னுடைய ஒரே ஒரு மகன் அங்கே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறான். நாங்கள் போய்ப் பணத்தைக் கொடுத்தால் தான் அவனுக்கு ஒப்பரேஷன் செய்த அவனது உயிரைப்பிழைக்க வைக்க முடியும். உடனடியாக ஒப்பரேஷன் செய்தால்தான் நல்லது என்று டொக்டர்கள் சொன்னவயாம். ஏன்ர பிள்ளையிட்ட காசில்லை அதனால்தான் நான் அவரசப்படுகிறேன். நான் போக முடியாமல் விட்டு என்ர குஞ்சுக்கு எதுவும் நடந்தால் அந்த வினாடியே நானும் செத்துப்போவன். ஒரே சமயத்தில் நீர் இரண்டு உயிரைக் காப்பாற்றி உதவி செய்திருக்கிறீர். இது எவ்வளவு பெரிய உதவி அனுவும் போக எந்த ஒரு பிள்ளை தன் தாயை தெய்வத்திற்கு சமமாக மதிக்கிறானோ, அவளின் அன்பை பாசத்தைப் புரிந்து கொள்கிறானோ அவனின் காலில் விழுவது தப்பேயில்லை. இதை நீர் பெரிசாய் எடுக்காதையும். சரி ராசா நாங்கள் போட்டுவாறம்" என்று கூறிவிட்டு இருவரும் அவ்விடத்தை விட்டுச் செல்கின்றார்கள்.

"பார்த்தியேடி பிள்ளை பார்வதியை அவன் குமார் இப்ப எவ்வளவு காலமாய் தாய் தகப்பன் இருக்கிறார்கள் என்ற நினைப்பே இல்லாமல் இருக்கிறான் அதுகளைக் கடைசிக்காலத்தில் என்றாலும் தன்னோட கொண்டுபோய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைச்சிருக்காமல் அதுகளை தனக்குப் பாரம் என்று நினைச்சு தன் குடும்பத்தோட தொலைதூரத்தில் போய் இருக்கிறான். அப்படி இருந்தும் பார்த்தியே? இதைத்தான் "பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு" என்று சொல்லுது."

அப்ப மகன் மாதா மாதம் தனக்கு காசு அனுப்புவதாகவும் அடிக்கடி டெலிபோன் பண்ணிக் கதைப்பதாகவும் சொன்னவாவே.

அது எல்லாம் சுத்தப்பொய். மகனை மற்றவர்களுக்கு முன்விட்டுக் குடுக்கக்கூடாது என்ற எண்ணம் தான்.

அடப்பாவமே! இப்படியும் தியாகமா பாசமா?

நீயும் கல்யாணம் செய்து பிள்ளை குட்டிகளைப் பெத்துப்பார் அப்ப புரியும் உனக்கு.

ஐயைய்யோ நான் இப்படியெல்லாம் தியாகம் செய்யமாட்டனப்பா!

இப்ப அப்பிடித்தான் சொல்லத் தோணும் அந்தக் கட்டம் வரேக்க தெரியும். இஞ்சை பார் ஊர்க்கதை கதைத்துக்கொண்டு நின்றதிலை வந்த விஷயத்தையே மறந்து போனம். பார் கியூவிலை நின்ற சனம் எல்லாம் எங்கே போட்டுது. வா வா ரிக்கற்றுக்கு பதிவம் என்று கப்பலுக்கு பதியவந்த இரு பெண்களும் சொல்லிப்போட்டு முன்னேறுகின்றனர்.

மறுநாள் புறப்பட்ட கப்பலில் குமாரின் பெற்றோர்கள் பயணித்து கொழும்பில் மகன் வீட்டை வந்தடைந்தார்கள். வந்த களைப்பையும் பாராது மகனை ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கான ஆயத்தங்களைச் செய்கின்றார்கள். காதில் தோடு கூட இல்லாமல் வந்திறங்கிய தாயைக் கட்டிப்பிடித்து குமறி அழுகின்றான். தன்னால் உதாசீனம் செய்த பெற்றோர்கள் தனக்கு வருத்தம் என்று தெரிந்தவுடன் துடித்துப்போய் ஓடி வந்ததை நினைத்து அவர்கள் இருவரையும் நிமிர்ந்து பார்க்க வெட்கப்பட்டவனாய் தலை குனிந்த படி குலுங்கி குலுங்கி அழுகின்றான். மகனின் நிலமையைப் புரிந்து கொண்ட பார்வதி அவன் தலையை நிமிரத்தி தன் சேலைத்தலைப்பால் அவன் கண்ணீரைத்துடைத்தபடி.

அட விசர்ப்பெடியா! இப்ப என்ன நடந்து போச்சுதென்று வருத்தத்தோட அழுது கொட்டுறாய்? ஒரு காலத்தில் நீ எங்களுக்கு உழலைச்சுத் தந்தனி தானே? ஏதோ எங்கள் போதாத காலம் இப்படி போச்சு நீ ஒன்றையும் மனசில வைச்சுக் கவலைப்படாமல் போய் முகத்தைக் கழுவிக்கொண்டு வா ஆஸ்பத்திரிக்குப் போகவேணும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை அம்மா நீங்கள் என்ன சமாதானம் சொன்னாலும் என்ர மனம் ஆறாது. அப்படியான துரோகம் தான் நான் உங்களுக்கு செய்திட்டன். முந்தியும் என்ரை வேலை விஷயத்திற்குத்தானே உங்களுக்கு என்றிருந்த காணியையும் ஈடுவைச்சுக் காசு அனுப்பினீங்கள். நான் அதற்கு வட்டி கூடக் கட்டாமல் விட்டிட்டன். இப்ப எப்படியம்மா இவ்வளவு தொகையை உங்களால மாற முடிந்தது? காதிலை தோடும் இல்லாமல் இருக்கிறியள்.

அது ஒன்றுமில்லை குமார் வட்டியும் முதலும் காணியின் பெறுமதிக்கு மேல வந்திட்டுதென்று ஈடு பிடிச்சவன் கரைச்சல் கொடுத்துக்கொண்டே இருந்தான். அதுதான் கொம்மா போய் அவனிட்ட மூன்று இலட்சம் ருபா மேலும் வாங்கிக்கொண்டு அவனுக்கு விற்றுப்போட்டு வந்திட்டா. இங்கை வந்து போறதுக்கும் செலவுக்கும் பணம் தேவைதானே என்று எனக்கு சொல்லாமல் தோட்டையும் விற்றுப்போட்டு வந்திட்டா.

ஐயோ! கடவுளே! எனக்கு இப்படி ஒரு கொடிய நோய் வந்தபடியால் தானே என் பெற்றோர்கள் எல்லாத்தையும் இழந்து வந்திருக்கினம். என்னால் தானே அவர்களுக்கு இந்தக் கஸ்டம் ஏன் எனக்கு இப்படியான ஒரு வருத்தத்தைக் கொடுத்தாய்?

எங்களுக்கு ஒரு கஸ்ரமும் இல்லை. நீ ஒப்பரேஷன் செய்து சுகமாக வந்து திரும்பவேலைக்குப் போகத்தானே போறாய். அப்ப உன்ர அம்மாவுக்கு பெரிய தோடாய் வாங்கித்தாவன் ராசா.

ஓமம்மா தோடு வாங்கித்தாறது மட்டுமில்லை இனி உங்கள் இருவரையும் என்னோடைதான் வச்சிருக்கப்போறன். உங்களை விட்டு இனி ஒரு போதும் பிரிய மாட்டேன்.

சரி சரி உன்ர விருப்பப்படி எல்லாம் நடக்கட்டும். முதலில் இப்ப ஆஸ்பத்திரிக்குப் போவம் வா என்று சொல்லி மகனை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப்போனார்கள்.

அடுத்த நாள் காலை குமாருக்கு ஒப்பரேஷன் வெற்றிகரமாக நடந்து முடிந்தது. அவன் உயிருக்கு இனி ஒரு ஆபத்தும் இல்லை என டொக்டர்கள் கூறியதைக் கேட்டு பெற்றவர்கள் இருவரும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தனர்.

பிள்ளை தன்னோடை எங்களை வைச்சிருக்க விரும்புகிறான் அவன்ரை ஆசையை ஏன் நாம் கெடுப்பான்? நீங்கள் போய் இரண்டு பேரினதும் உடுப்புக்களை எடுத்துக்கொண்டு வாங்கோ. அங்க என்ன பெரிசாய் சாமான்கள் இருக்கு கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர. அங்க இனி வீடு, காணி ஒன்றும் இல்லைத்தானே. கடைசி காலத்தில் பிள்ளையோட இருப்பம் என்று குமாரின் தாய் கணவரிடம் சொன்னாள்.

ஓமடியப்பா! வாற கிழமை தானே போறது இப்ப ஏன் அவரசப்படுத்துகிறாய். நாங்கள் இனி இங்கதானே இருக்கவேண்டும். போய் வாறன் என்றார்.

மூன்று நாட்களால் குமாரை வீட்டிற்கு கூட்டிக்கொண்டு போகலாம் என்று டொக்டர்கள் கூற தகப்பன் அதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கும் போது குமாரின் மனைவியும் பிள்ளைகளும் வருகின்றார்கள்.

எப்படியப்பா இருக்கிறியள்? நான் அம்மாட்டை காசு மாறக் கிளிநொச்சிக்குப் போனது உங்களுக்குத் தெரியும் தானே? அங்கே ஒரு வசதியும் இல்லை. அதனால் தான் பார்த்து வரலாம் என்று நின்றனான். நல்ல வேளை மாமா மாமி காசு மாறிக்கொண்டு வந்ததாலை உங்களுக்கு பிரச்சனை இல்லாமல் ஒப்பிரேஷன் முடிஞ்சு போச்சு.

உங்களுக்கு இண்டைக்கு ரிக்கற் வெட்டுறதென்று நான் வந்து இறங்கினதும் பக்கத்து வீட்டு வேணியக்கா சொன்னவ அதுதான் உடனை வந்திட்டன். சொல்ல மறந்திட்டன் அப்பா. நாங்கள் சாமான்கள் போட்டு வைச்சிருந்த மற்றைய அறையை ஒரு கம்பஸ் பெட்டைக்குத் தாறதெண்டு சொல்லிப்போட்டன். மாமா மாமி வாறதெண்டு தெரிஞ்சிருந்தால் உண்மையிலை குடுத்திருக்கமாட்டன். இப்ப என்ன செய்யிறது எண்டு தெரியாமல் கிடக்குது.

மருமகளின் வார்த்தைகளின் உள்நோக்கத்தைப் புரிந்து கொண்ட குமாரின் பெற்றோர்கள் ஒருவரைஒருவர் பார்த்தனர்.

பிள்ளை நீ ஏன் வருத்தப்படுகின்றாய்? நாங்கள் இங்கே நிற்பதற்கு வரவில்லை. அதுவும் போக கொழும்பு வாழ்க்கை ஒத்தும் போகாது நாங்கள் யாழ்ப்பாணத்திற்கே போறம்.

ஏனப்பா என்னை அப்படி முறைச்சுப் பாக்கிறியள்? என்னுடைய நிலமை மாமா மாமிக்கு விளங்குது. சரியப்பா மெல்ல எழும்புங்கோ, ஆட்டோவிலைதான் வந்தனான் இவ்வளவு நேரம் நின்ற காசும் கொடுக்க வேண்டும். திரும்பிப் போகவும் வேணும் எப்படியும் ஆயிரம் ரூபாவிற்கு மேலைதான் கேட்பான் என்னட்டை ஒரு காசும் இல்லை. நீங்கள் ஏதும் வைச்சிருக்கிறீங்களா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திருந்தவன் தன் வருத்தத்தையும் மறந்து கோபப்பட்டு சடாரென எழும்பினான். வலி தாங்க முடியாமல் ஐயோ அம்மா என்று கத்திய வண்ணம் மீண்டும் படுக்கையில் சாய்ந்தான்.

ஏன் ராசா இப்படி அவரசப்பட்டு எழும்பினாய் ஒப்பிரேஷன் செய்த உடம்பு கொஞ்சம் நிதானமாய் எழும்பி இருக்கலாம் தானே. இப்ப உன்ரை மனுசி என்னத்தைச் சொல்லிப் போட்டாள் என்று கோபப்பட்டனி? தன்னட்டை காசு இல்லை என்று தானே சொன்னவள். இந்தா பிள்ளை இதிலை இரண்டாயிரம் ரூபா இருக்குது. ஆட்டோ காசு போக மிகுதியை பிள்ளைகளுக்கு ஏதும் வாங்கிக்கொடு என்று சொல்லிக் காசை மருமகள் கையில் வைச்சுப்போட்டு கண்முட்ட வந்த கண்ணீரை வெளியிலை விடாமல் அடக்கிக்கொண்டு ஆஸ்பத்திரி அறையை விட்டு. வெளியேற அவள் பின்னே ஏதும் பேசாமல் அவள் கணவரும் செல்கிறார். இருவரும் போற திசையைப்பார்த்து எதுவுமே சொல்ல முடியாது திக் பிரமை பிடித்தவன் போல மனைவி அழைக்க ஒரு நடைபிணமாக அவள் பின்னே செல்கின்றான் குமார்!.

(யாவும் கற்பனை)

முற்றும்.

தேசிய இலக்கியப் போட்டி
பிரதேச மட்டம் இரண்டாம் இடம் 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்டனை

போக்குவரத்துப்பாதையின் எதிர்ப் பக்கத்தால் எதையோ பறிகொடுத்தவள் போல எதையும் சட்டை செய்யாமல் நடந்து கொண்டிருந்தவள் எதிரே வந்த ஆட்டோவைக் கவனிக்காமல் தெருவைக்கடக்க முற்பட்ட போது கிறீச் என்ற சத்தத்துடன் அவளை உரசிக்கொண்டு ஆட்டோ ஒன்று வந்து நின்றது ஈஸ்வரி பெரிதும் அதிர்ச்சி அடைந்தவளாய் கீழே விழுந்து விட்டாள் நல்ல வேளை ஆட்டோ சாரதியின் சாமர்த்தியத்தால் அவனது நிதானத்தால் அவளின் உயிர் காப்பாற்றப்பட்டது. "என்னம்மா என் ஆட்டோவில் அடிபட்டுத்தான் சாகவேண்டும் என்று நேர்த்தி வைச்சிட்டு வந்தனீங்களே? நான் பிறேக் போடாட்டில் இப்ப உங்கள் நிலமை என்னவாயிருக்கும்" என்று கூறியவன் கீழே விழுந்து கிடந்த ஈஸ்வரியை தூக்க எத்தனித்தான். அப்போதுதான் தெரிந்தது அவள் மயங்கி விட்டாள் என்று அக்கம்பக்கத்தில் நின்றவர்கள் உதவியுடன் ஆஸ்பத்திரியில் கொண்டு போய்ச் சேர்த்து விட்டுப்போனான்.

அவரசப்பிரிவில் சேர்த்துவிட்ட ஈஸ்வரியைப்பற்றி விபரத்தை கேட்டறிய எவருமே இல்லாததால் அவள் கண்முழிக்கும் வரை மருத்துவர்கள் காத்திருந்தார்கள் சரியாக ஒருமணிநேரம் கழித்துத்தான் அவள் கண்களைத்திறந்தாள். தன்னைச்சுற்றி மருத்துவர்கள் தாதிமார் நிற்பதைப்பார்த்து தான் ஆஸ்பத்திரியில் இருப்பதை உணர்ந்து கொண்டாள். தனக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் யோசித்தவளை என்னம்மா கனக்க யோசிக்கிறயள். தெருவாலை இப்படியா போறது? உங்களுக்கு ஏதாவது நடந்திருந்தால் பாவம் அந்த ஆட்டோக்காரப் பெடியனைத்தானே கொண்டுபோய் அடைச்சிருப்பார்கள். கெட்டிக்காரன் என்றபடியால் தான் உங்களையும் காப்பாற்றி அவனும் தப்பித்துக் கொண்டான். இனிமேல் என்றாலும் பார்த்துப்போங்கோ சரி அம்மா உங்கட பெயர் விலாசம் சொல்லுங்கோ.

பெயரை மட்டும் சொன்னாள் ஈஸ்வரி விலாசம் ஏதும் சொல்லவில்லை. ஏன்னம்மா விலாசம் கேட்டாள் சொல்லாமல் இருக்கிறியள். எங்களுக்குப் புத்தகத்தில் பதிவதற்கு சரியான விலாசம் வேணும். அதுவும் போக உங்கள் நிலமை பற்றி யாரோ ஒருவருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

அது வந்த டாக்டர் எனக்கு நெருங்கிய உறவு என்று சொல்லக்கூடிய அளவிற்கு எவரும் இல்லை எவருக்கும் அறிவிக்கவும் தேவையில்லை.

உங்களுக்கு ஏதாவது நடந்தால் யாருக்குச் சொல்லிப் பொறுப்பேற்பது?

ஏன் எத்தனையோ ஆதரவற்றவர்களை அரசாங்கச் செலவில் அடக்கம் செய்யவில்லையோ? அதுபோல எனக்கும் செய்யட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி அம்மா இதனால் என்ன பிரச்சனை வரப்போகுதோ தெரியாது. பின்னர் அதைப்பற்றி யோசிப்பம் என்று கூறி வெளியேறினார் டாக்டர்.

கட்டிலிலே படுத்திருந்து பெருமூச்சு விட்டாள் ஈஸ்வரி உண்மையிலேயே அவளுக்கு உறவுகள் இல்லாமல் இல்லை. ஏதோ அவளுக்கு அப்படிச் சொல்லத்தோன்றியது. அவர்களை விட்டு விலகி இருக்கவே ஆசைப்பட்டாள் இதனால் அவள் பாசம் இல்லாதவள் என்று கூறிவிட முடியாது. அன்பு பாசம் காட்டுவதில் அவளுக்கு நிகராக எவரும் இருந்துவிட முடியாது. பிறருக்கு உதவி செய்வதும் அப்படித்தான் எப்படித்தான் அவள் உறவுகளோடு அன்பு பாசம் காட்டி நடந்தாலும் அவர்கள் அவளை ஒரு உறவாக மனுசியாக மதிப்பதேயில்லை அலட்சியப்படுத்தியே நடப்பார்கள். அதனால் அவர்கள் மேல் வைத்திருந்த பாசம் படிப்படியாக குறைய ஆரம்பித்தது. அவர்களை விட்டு விலகி இருக்கவே ஆசைப்பட்டாள். யாருக்கும் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்று நினைத்து வெளியேற இப்போ தான் அனாதை என்று கூறியும் விட்டாள். அதுமட்டுமல்ல தன் தொலைபேசியில் உள்ள உறவினர், நண்பர்கள் தொலைபேசி இலக்கங்கள் அனைத்தையும் அழித்தேவிட்டாள். இலக்கங்களை அழித்தாளே ஒழிய அவர்களின் நினைவுகளை அழிக்க முடியாதவளாய் சற்றே கண் அயர்ந்தாள்.

அம்மா! உங்களுக்கு யாருமே இல்லை என்று சொன்னீர்கள். இஞ்ச பாருங்கோ ஒரு ஐயா உங்களைப்பார்க்க வந்து நிற்கின்றார். என்று தாதி ஒருவர் வந்து கூறிவிட்டுச் செல்கின்றாள்.

"தான் ஆஸ்பத்திரியில் இருப்பது யாருக்குமே தெரியாதே அப்படி இருக்கும் போது யார் தன்னைப்பார்க்க வந்திருக்கின்றது என நினைத்து மறுபக்கம் திரும்பிப்பார்க்கின்றாள்." வந்த நபரை அவளால் அடையாளம் காணமுடியாமல் இருந்தது.

என்னம்மா ஈஸ்வரி என்னைத் தெரியவில்லையா? நான் தான் சுந்தர்

சுந்தர் நீங்களா? எப்படி இருக்கியள்? எவ்வளவு காலம் உங்களைப் பார்த்து ஆள் அடையாளம் தெரியாத அளவிற்கு பருத்துஇருக்கியள் நான் இங்க அனுமதிக்கப்பட்டிருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?

அதுதானம்மா சந்தர்ப்பம் சூழ்நிலை என்பது நீ எங்கிருக்கிறாய் என்பது மட்டுமல்ல எப்படி இருக்கியள் என்பதும் எனக்குத் தெரியாமல் இருந்தது என் நண்பனின் மனைவியைப் பார்த்து விட்டு போகலாம் என்று வந்தனான். பார்த்திட்டு திரும்பும் போது தான் எதேற்ச்சியாக உன்னைப் பார்த்தேன். நீயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமோ இல்லை வேறு யாராக இருக்குமோ என்று சந்தேகத்தில் அந்த நர்ஸ்சிடம் உன் பெயரைக் கேட்டு அறிந்த பின்புதான் உனக்குக்கிட்ட வந்து பார்த்தனான். அது நீயே தான். எப்படி அம்மா இருக்கின்றாய்?

ஏதோ இருக்கின்றன். இவ்வளவு காலமும் ஒரு அர்த்தம் இல்லாத பிடிப்பற்ற வாழ்க்கை வாழ்ந்தேனோ அதேபோல் இன்னும் எத்தனை காலம் வாழப்போறன். எல்லாம் முடிஞ்சு போச்சு. நாளைக்குச் சாவு வந்தாலும் எனக்கு சந்தோசம்தான் எனக்கென்று யார் இருக்கின்றார்கள் கவலைப்பட?

நான் இருக்கிறன் ஈஸ்வரி நான் இருக்கிறன். நீ யாருமற்றவள் இல்லை உன் சுந்தர் நான் இருக்கிறன். நீ அனாதை இல்லை இனிச் சாகும்வரைக்கும் நான் உன்னை வைத்துக் காப்பாற்றுவேன். நல்லாய் வைச்சுக் காப்பாற்றுவன் இவ்வளவு காலமும் யார் யாரோ தயவில் வாழ்ந்திருப்பாய். எப்படி எப்படியெல்லாம் கஸ்டப்பட்டிருப்பாயோ தெரியாது. நீ இப்படித் தனியாக வாழ்வதற்கு நானும் ஒரு காரணம் தானே? என் பிழையான நினைப்பால் தீர்ப்பால் நீ இவ்வளவிற்கும் பாதிக்கப்பட்டிருப்பாய் என்று எனக்கு சத்தியமாய்த் தெரியாது. நான் எடுத்த அவசர முடிவால் நீ இப்படி அந்தரித்து நிற்கின்றாய் என்று எனக்குத் தெரியவே தெரியாது. ஈஸ்வரி இனி ஒரு போதும் உன்னை விட்டுப்பரியமாட்டேன்.

மளமளவென்று சுந்தர் சொல்லிக்கொண்டு போன வார்த்தைகள் ஈஸ்வரிக்கும் இதமானதாகத்தான் இருந்தது. சுந்தர் இதுவரை காலமும் நான் இதற்காகத்தானே காத்திருந்தேன். எத்தனை நாள் நான் ஏங்கி இருப்பேன் தெரியுமா? என் விருப்பம் நிறைவேறிவிட்டது. ஆனால் அது காலம் கடந்த சந்திப்பாக இருக்கும் என்று நான் நினைக்கவேயில்லை என்று வெளியே சொல்ல முடியாமல் தன் மனத்திற்குள் நினைத்துக் கொண்டாள்.

என்னம்மா நான் சொல்லிக்கொண்டு இருக்கிறன். நீ எதுவித பதிலும் சொல்லாமல் ஏன் மௌனம் சாதிக்கிறாய்?

இல்லை சுந்தர் கண்கெட்ட பிறகு சூரியநமஸ்காரம் எதற்கு என்று யோசிக்கின்றேன் அதனால் எந்தவித பலனும் கிடைக்கப்போவதில்லை உங்களைச்சந்தித்தது பெரிய சந்தோசம். உங்களை மறக்கமுடியாமல் நான் தத்தளித்தது உண்மைதான். ஆனால் என்று நீங்கள் இன்னொருத்திக்கு சொந்தமாகிவிட்டீர்கள் என்று தெரிந்து கொண்டேனோ அன்றிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உங்களை மறக்க முற்பட்டேன். காலப்போக்கில் உங்களை மறந்தே விட்டேன். ஆண்டவன் மீண்டும் என் வாழ்க்கையில் விளையாட நினைத்தான் போலும். அதுதான் இன்று உங்களைச் சந்திக்க வைத்திருக்கின்றான். உங்களைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்காமலே இருந்திருக்கலாம். ஏன் இப்பவும் ஒன்றும் கெட்டுப்போகவில்லை நானும் நீங்களும் ஒருவரை ஒருவர் மீண்டும் சந்திக்கவேயில்லை என்று நினைத்துக்கொள்வோம்.

எங்கே என்னைப்பார்த்துச் சொல்லு என்னை உன் மனதில் இருந்து தூக்கி எறிந்துவிட்டேன் மறந்திட்டன் என்று நான் போகிறேன்.

என் உயிர் போகும் வரைக்கும் உங்கள் நினைவு இருக்கும் என்று உரக்கக் கத்திச் சொல்ல வேண்டும் போல இருந்தாலும் அதை அடக்கிக் கொண்டு சுந்தர் பிளீஸ் தயவுசெய்து என்னைத்தனியாக விடுங்கோ. எம்மைச் சுற்றி ஒரு சமூகம் இருப்பதை மறந்திட்டீங்களா?

சமூகம் என்ன சமூகம் அந்தச் சமூகம் உன்னை வாழ வைத்ததா? சொல்! எனக்கும் உனக்கும் இப்ப எத்தினை வயது? தப்பாக மற்றவர்கள் ஏன் கதைக்கப்போகின்றார்கள் நீ ஒரு வட்டத்திற்குள் மட்டும் இருந்து யோசிக்கின்றாய்? வெளி உலகத்தில் நடக்கும் சம்பவங்களையும் கொஞ்சம் வெளியே வந்து பார் எண்பது வயதில் ஒரு ஆணும் பெண்ணும் இணைந்து எவ்வளவு சாதனைகள் செய்கிறார்கள் என்று தெரியுமா உனக்கு? ஆசாபாசத்திற்கும் சபலத்திற்கும் அடிமைப்படுகின்ற வயதா எமக்கு சொல் பார்ப்பம்?

எங்களுக்கு நாங்கள் நல்லவர்களாக வாழ்ந்தால் அதுவே போதும் சமுதாயத்திற்கு செய்ய வேண்டிய எத்தனையே நன்மையான காரியங்கள் இருக்குது. நாம் இருவரும் இணைந்து அதைச் செய்தால் என்ன? நண்பர்களாக இருக்கலாம் தானே ஈஸ்வரி நான் உனக்கு செய்த பிழைக்கு பரிகாரம் செய்ததற்கு ஒரு வாய்ப்பாக இருப்பதற்கு அனுமதி தரமாட்டாயா?

சுந்தரின் இந்த வேண்டுகோளிற்கு ஈஸ்வரி இணக்கம் தெரிவித்தலே சுந்தர் மிகத் திருப்தியுடன் வெளியேறுகின்றார். அவசரம் அவசரமாக அவள் தங்குவதற்காக ஒரு வீடும் பார்க்கின்றார். எல்லா வசதிகளும் கொண்ட வீடும் கிடைக்கின்றது. ஈஸ்வரியை அந்த வீட்டில் குடியிருக்க வைக்கப்போகும் சந்தோசத்தில் அன்றைய பொழுதைக் கழிக்கின்றார். அடுத்த நாள் பகல் ஈஸ்வரியைப்பார்க்க ஆவலுடன் அவள் வாா்ட்டுக்கு போகின்றார். அவள் படுத்திருந்த கட்டில் வெறுமையாகக்கிடக்கின்றது. ஏதோ ஒரு கலக்கம். பயம் அவர் மனதில் வரவே பக்கத்துக்கட்டிலில் இருந்த பெண்மணியைப்பார்த்து "அம்மா இந்தக் கட்டிலில் இருந்த அம்மாவைக் காணவில்லை எங்கே போய்விட்டார் எனக்கேட்டார்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா உங்களுக்கு விசயமே தெரியாதா? அவ இண்டைக்கு காலையில் ஒரு ஒன்பது மணியிருக்கும் செத்துப்போனா நல்லாத்தான் கதைச்சு சிரிச்சுகொண்டு இருந்தவா திடீரென நெச்சு வலி வந்து உயிர் போட்டுது அவவை பிரேத அறைக்கு கொண்டு போட்டினம் அங்கை போய் பாருங்கோ என்று சொன்னாள்.

சுந்தர் துடிதுடித்துப்போனார் அவசரம் அவசரமாக பிரேத அறைக்குப்போய் எட்டிப்பார்த்தார் வெள்ளை பெற்சீட்டால் முகம் மூடப்பட்டு படுத்திருக்கும் ஈஸ்வரியைக் கண்டார் அவரால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை ஐயோ ஈஸ்வரி என்னம்மா இது? ஏனம்மா இப்படிச் செய்தாய்? நான் செய்த பிழைக்கு எனக்கு இப்படி ஒரு தண்டனையை தந்து விட்டாயே நேற்று நான் இந்த ஆஸ்பத்திரி பக்கம் வராமல் விட்டிருக்கலாம் உன்னைக் காணாமலும் போயிருக்கலாம் உன் விருப்பபடியே நீ தனியாக இருக்க வீடும் பார்த்திட்டன். உன்னை அந்த வீட்டில் குடியிருத்தி வசதியாக வாழவைக்கலாமென்று எப்படியெல்லாம் கற்பனை செய்தேன் தெரியுமா? எல்லாத்தையும் பாழாக்கிப்போட்டியே. இது வரை காலமும் உன்னை அழவைத்ததற்கு இனி வரும்காலமெல்லாம் என்னை அழவைக்க வேண்டும் என்று நினைத்துத்தான் இப்படி செய்தாயோ என்று அவள் கையைத் தடவித் தடவி அழுதார். அவளை குடியிருத்த நினைத்த அந்த வீட்டில் அவள் உயிரற்ற உடலையாவது எடுத்துக் கொண்டுபோய் வைக்கலாம் என நினைத்தவர் டாக்டரிடம் போய் பிரேதத்தை தன்னிடம் தரும்படி கேட்கின்றார்.

நீங்கள் யார் ஈஸ்வரிக்கு? ஈஸ்வரிக்கு என்ன உறவு? என்று டாக்டர் கேட்ட கேள்விக்கு அவரால் பதில் சொல்ல முடியாமல் இருந்தது.

அதனால்! நேற்று ஈஸ்வரி கொடுத்திருந்த வேண்டுகோளின் படி அவளின் உடல் அரசாங்க செலவில் அடக்கம் செய்ய அனுப்பப்பட்டது சுந்தருக்கு இது மேலும் ஒரு தண்டனை ஆக இருந்தது.

(யாவும் கற்பனை)

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்ரநெற் காதல்

கோமதி எங்கை பெடி பெட்டை ஒன்றையும் காணேல்லை. பள்ளக்கூடம் போட்டினமே?

உனக்கென்ன வாக்கு மாறிப்போச்சுதே மங்களம்? இண்டைக்குப்போயா வீவெல்லே!

அட சத்தியமா நான் மறந்தே போனன். அப்ப எங்கே எல்லோரும் போட்டினம். சீட்டுக்காசை ஒருக்கா ஞானமக்காலிடம் குடுத்து விடலாம் எண்டுதான் வந்தனான்.

அதை ஏன் கேட்கிறாய் மங்களம்? பக்கத்து வீட்டிலை இன்ரநெட்டோ என்ன கோதாரியோ ஒன்றைக் கொண்டு வந்து பூட்டினது என்று உனக்குச் சொன்னது தானே? வழக்கம் போல இதுகள் எல்லாம் அங்கதான் போட்டுதுகள். பள்ளிக்கூடமும் இல்லை. இந்தப் பக்கமே வரமாட்டுதுகள் நான் கூப்பிட்டால் எட்டியும் பார்க்காதுகள் எதற்கும் நீ கூப்பிட்டுப்பார் சிலவேளை சின்னவன் வந்தாலும் வருவான்.

கோமதி சொல்லுறன் எண்டு கோபிக்காதை அடுத்த வீட்டிலை அதுவும் சொந்த பந்தம் இல்லாத பிறத்தியார் வீட்டிற்குப் போறதும் எந்த நேரமும் இன்ரநெற் பார்ப்பதும் சரியாப்படேல்லை எனக்கு அதுகள் என்ன நினைப்பார்கள்? சினக்கப்போகுதுகள்.

மங்களம் நீ நினைக்கிற மாதிரியில்லை புதுப்பணம் படைச்சு ஏதோ காணாதனதக் கண்டதுபோல ஆட்களைக் கண்டாலும் தெரிந்தும் தெரியாதது போல போகும் திமிர் பிடிச்ச எங்கள் சொந்தக்காரரைப்போல இல்லை அதுகள் பரம்பரைப் பணக்காரர் பெரிய நகைக்கடையும், உடுப்புக்கடையும் வைச்சிருந்து செல்வத்தில் மிதந்ததுகள். இந்தப் பாழாய்ப்போன பிரச்சனையால் சொத்து சுகம் எல்லாத்தையும் இழந்து உயிர் தப்பினால் காணும் என்று ஓடி வந்ததுகள். சாப்பாட்டிற்கே கஸ்டம் வந்தும் ஒருவரிடமும் உதவி கேட்காமல் கௌரவமாக இருந்ததுகள்.

"இறைச்ச கிணறு ஊறும் என்பார்கள்" அதுபோல் அதுகள் வன்னியில் இருக்கும் போது ஒரு கஸ்ரப்பட்ட பெடியனுக்கு உதவி செய்து கனடாவிற்கு அனுப்பினதுகளாம். அந்த நன்றியுள்ள பிள்ளை தான் வெளிநாடு வர அந்தக் குடும்பம்தானே காரணம் என நினைத்து இதுகாலிண்ட மூத்த பெடியனைக் கனடாவிற்குக் கூப்பிட்டவனாம். அவன் இப்ப உழைத்துப்பணம் அனுப்பித்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுகள் இப்ப வசதியாய் வாழுதுகள். வீடு வாடகையாய் இருந்தாலும் வீட்டுக்குத் தேவையான சாமான்கள் எல்லாம் வாங்கிப் போட்டுதுகள் பிரச்சனை இல்லாமல் வாழுதுகள். தாய் தகப்பன் முகம் பார்த்துக் கதைக்க வேணும் என்றுதான் இன்ரநெற் வசதி செய்து குடுத்தவனாம். எங்கடை பிள்ளைகள் போனால் சினக்குங்கள் என்று சொல்லுறியே. அப்படியில்லை மங்களம் ஒருநேரம் பிள்ளைகள் போகாட்டி மதிலாலை எட்டிக் கூப்பிடுங்கள் பிள்ளைகளிலை சரியான விருப்பம். எங்கடை பிள்ளையளும் வேறு எங்கை இப்படிப் பார்க்கப் போறதுகள் அதுதான் நானும் மறிக்கிறேலை.

சரி அது உன்ரை விருப்பம் உலக நடப்புகளைப் பற்றி நெற்றில்ஏதும் சொன்னாலோ கோமதி.

ஓம் மங்களம் ஏதோ திடுக்கிடும் உண்மைகள் என்று போட்டுக் காட்டினவையளாம். ஆனால் பேப்பரிலை ஒன்றும் நடக்காதது போல போட்டுக் கிடக்குது. நெற்றிலை பார்க்கிறதுக்கும் பேப்பரிலை பாக்கிறதுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லாமல் இருக்குது.

எது உண்மை எது பொய் தெரியாமல் கிடக்குது.

நீ சொல்வதெல்லாம் சரிதான் கோமதி உலக விசயமும் மட்டுமல்ல ஊர் விசயமும் தெரியாமல் தான் கிடக்குது. எப்படித்தான் நெருங்கிப்பழகினாலும் சில சனங்கள் சிலவற்றை மறைச்சுத்தான் ஆகுதுகள்.

என்ன மங்களம் கதை ஒரு மாதிரிப்போகுது எனக்கொன்றும் விளங்கேயில்லை. இஞ்சை பார் எதை என்றாலும் நேரடியாகக் கேள். எனக்கு இந்த சூட்சுமக் கதைகள் ஒன்றும் பிடிக்காது.

நான் பொதுவாய்த்தானே சொன்னனான் உனக்கேன் கோபம் வருகுது?

பொது விசயத்தை ஏன் என்ர வீட்டிலை வந்து கதைக்கிறாய். எனக்கு வேலை கிடக்குது நான் போறன் என குசினிப்பக்கம் போக எத்தனித்த கோமிதியின் கையைப்பிடித்து நில்லடியப்பா சொல்லுறன் என்கின்றாள். ஏதோ சனங்கள் கதைக்கிறததான் சொல்லுறன். சின்னப்பிள்ளைகள் போனாலும் பரவாயில்லை ஏன் உன்ர பெரிய பெட்டையை விடுகிறாய்? அந்த வீட்டிலை வளர்ந்த இளந்தாரிப் பெடியன்கள் இருக்கிறான்கள் இப்பத்தை பெடியன்களை நம்பேலாது. வயசும் அப்படிப்பட்ட வயசு. நீ ஒரு வசதி வாய்ப்போடு இருந்தால் பரவாயில்லை அன்றாடம் சாப்பாட்டிற்கே கஸ்ரப்படும் குடும்பம் ஒன்று நினைக்க ஒன்று நடந்திட்டால் என்ன செய்வாய்? அதுகள் நல்ல சனங்கள் தான் பிள்ளைகளும் ஒழுக்கமானதுகள் தான் அது உனக்கும் எனக்கும் மட்டும் தெரிந்தால் போதாது. இந்தக் கண்கெட்ட உலகம் நரம்பில்லாத நாக்கால எதை வேண்டுமானாலும் கதைக்கும். பழிபாவத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாதுகள் ஏன் கன கதையைள உன்ரை மனிசன்ர தமக்கைக்காரி மீன்காரனுக்கு என்ன சொன்னவள் தெரியுமே? அதுவும் வேற ஆட்கள் நின்றதைக்கூட கொஞ்சமும் பாராமல் "பணக்காரப் பெடியனை வளைச்சுப் போடத்தான் நெற் பாக்கிற சாக்கில் உன்ரை மகள் அங்கை போறதைத் தடுக்காமல் நீ இருக்கிறியாம் தன்ர தம்பி குடிகாரன்தானே அவனைப் பேக்காட்டலாம் என்றும் நீ தன்னிச்சையாக நடக்கின்றாய் என்றும் கொஞ்சமும் வாய்கூசாமல் சொல்லுதே மனுசி." தன்ர தம்பின்ரை மகள் என்று கொஞ்சமென்றாலும் யோசிக்கவேயில்லை. எதிரிகள் உனக்கு வெளியிலை இல்லை உன்வீட்டுக்குள்ளைதான். ஏதோ யோசித்து நடந்துகொள்.

கோமதி! எங்களைப்போல ஆட்கள் கொஞ்சம் பயந்து தான் இருக்க வேண்டும். காரணம் எங்களிட்டை பணம் இல்லை.

எதிர்பார்ப்புகளும், ஆசைகளும், பணக்காரர்களுக்கு மட்டும்தான் வரவேண்டும் என்று நினைக்கின்றார்கள். அளவுக்கு மிஞ்சி ஆசைப்படாவிட்டாலும் இல்லாதவர்கள் ஆசைப்படவே கூடாது என்ற நியதியாய்ப் போட்டுது. ஒவ்வொரு இடத்திலும் ஏதோ ஒரு சம்பவம் நடந்து கொண்டுதான் இருக்குது. சில பிரச்சினைகள் நீதிக்கு முன் நிற்பாட்டினாலும் காசுக்கு முன்னால் அது தோற்றுப்போய் விடுகிறது. சில பிரச்சனைகள் தீர்க்கவே முடியாமலே போகுது. ஏன் எங்கடை கமலமக்காவின் மகளுக்கு என்ன நடந்தது? இந்த "இன்ரநெட் பாழாய்ப்போனதால் தானே" அவன் ஒருத்தன் பார்த்துப்போட்டு அவளைத்தான் கலியாணம் செய்யப்போறன் எண்டு ஒற்றைக்காலில் நிண்டு படாதபாடுபட்டவனாம். வறுமைப்பட்ட அந்தக் குடும்பம் இந்தச் சம்பந்தம் வேணாம் என்று மறுத்ததுக்கு ஒருவித சீதனமும் வேண்டாம் என்று கூறியிருக்கின்றான் இதுகளும் பாவங்கள் நல்ல வரன் வலிய வருகுதென்று சம்மதம் சொல்லிப்போட்டுதுகள். பின் கேட்கவே வேணும் பெடியன் வந்து கலியாணம் முடிஞ்சு போச்சு " ஒரு மாதம் பொம்பிளை வீடு வெளிநாடு சென்ற வாசனையாகவே இருந்தது. ஒரு மாதம் முடிய கெதியாய்க் கூப்பிடுவன்" என்று சொல்லிப்போட்டு லண்டனுக்கு துலைஞ்சவன் தான் அப்படியே போட்டான் எதுவித தொடர்பும் இல்லை எங்கே இருக்கிறான் எதுவும் தெரியாது. இன்ரநெற்றைப்பார்த்து அவனைப் பற்றி விசாரிக்காமல் மயங்கியதின் பலாபலன் பெட்டை பிள்ளைத்தாச்சி ஆனதுதான். இப்ப பிள்ளைக்கு ஆறு வயசாப்போச்சு தகப்பன்ரை முகத்தையே அந்தப்பிள்ளை காணவில்லை. அவள் வேலை பார்க்கின்றதால் ஒருத்தருக்கும் பாரமில்லாமல் பிள்ளையை வளர்க்கின்றாள். இதுபோல இன்னும் எவ்வளவு நடக்குது என்று மூச்சு விடாமல் கோமதிக்கு புத்திமதி சொன்ன மங்களம். :கதைச்சுக் கொண்டே நின்றதிலை தூள் வாங்க வந்ததை மறந்து போனன். இறைச்சியை மனுசன் வேண்டிக்கொண்டு வந்திட்டார். தூள் முடிஞ்சு போச்சு ஒரு சுண்டு தா இடிச்ச பிறகு திருப்பித்தாறன்"

என்னட்டையும் முடிஞ்சு போச்சு இருக்கிறதிலை கொஞ்சம் தாறன் என்று சொல்லிப்போட்டு குசினிக்குள் போய் திரும்பிவரும்போது தூள் பார்சலுடன் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களத்திடம் கொடுக்க அதை வாங்கிக்கொண்டு வெளியே வந்தபோது வாசல் கதவோடு பக்கத்து வீட்டு ஆனந்தி நிற்பதைப் பார்த்து திடுக்கிட்டுப் போனாள் இந்த ஆனந்தி எப்போ வந்தாள். தான் கதைத்தை கேட்டுக்கொண்டுதான் நின்றாளோ என சிறு பதட்டம் ஏற்பட்டது.

ஆனந்திக்கு இது புரிந்து விட்டது போலும், மங்களம் என்ன மலைத்துப்போய் நிற்கின்றாய்? என்ன நீங்கள் இருவரும் கதைத்ததை நான் கேட்டுக்கொண்டு நின்றேனா என நினைக்கின்றாய். உண்மையில் கேட்டுக்கொண்டுதான் நின்றனான் அதற்காக ஒட்டுக்கேட்டன் என மட்டும் தப்பாக நினைத்து விடாதை கோமதியிடன் ஒரு விஷயத்தை சொல்ல வந்தபோது தான் எங்கடை வீட்டுக்கதை அடிபட்டது. அதுதான் சத்தம் போடாமல் அப்படியே நின்றிட்டன். மங்களம் நீ உன்ர சினேகிதிக்கு உபதேசம் செய்ய வந்தியோ. உண்மைகளைச் சொல்ல வந்தியோ எனக்குத் தெரியாது. ஆனால் ஊர் வாய் என்று சொன்னியே அந்த ஊர் வாயை அடைக்கத்தான் ஒரு முடிவோடு வந்தனான். ஏன் வெளியிலையே நின்று கதைப்பான் உள்ளே வா சினேகிதியின் விஷயம் தானே? என்று சொல்லிவிட்டு உள்ளே போகின்றாள். மங்களம் மௌனமாகப் பின் செல்கின்றாள்.

இருவரது உரையாடலையும் கேட்டுக் கொண்டிருந்த கோமதிக்கு ஒன்றுமே விளங்கவில்லை வாய் திறந்து கேட்கவும் ஏதோ ஒரு பயம் அவளைத் தடுத்தது. ஊர் வாயை மூடப்போவதாக ஆனந்தி அக்கா சொல்லுறா. எங்கடை பிள்ளையளை குறிப்பாக என்ரை பெரியவளை தங்கடை வீட்டை வரவேண்டாம் என்று சொல்லப்போறாவோ? அப்பயென்றால் ஊர் கதைச்சது உண்மையாகிவிடுமோ?

கடவுளே! இந்த நாசமாய்ப்போன மனுஷன் உழைச்ச காசிலை என்னவெல்லாம் வாங்கிப்போட்டிருக்கலாம். எங்கடை வீட்டைத்தவிர வேற எல்லா வீட்டிலையும் ரீ.வி இருக்கு இருந்தால் ஏன் அதுகள் அங்கை ஓடப்போகுதுகள்?

என்ன கோமதி வீட்டிற்கு வந்தவளை வா என்று ஒரு சொல் கூடச்சொல்லாமல் ஏதோ கணக்க யோசிச்சுக் கொண்டு நிக்கிறாய்?

இல்லை அக்கா நீங்கள் இருவரும் ஏதோ கதைச்சுக் கொண்டு நிக்கிறியள் அதுதான்...!

கோமதி மங்களம் சொல்வதில் ஒரு நியாயம் இருக்குதுதான். கமலமக்காவின் மகளின் நிலைமையை நினைக்கும்போது எனக்கும் கவலையாய்த்தான் இருக்குது. "இன்ரநெற்றில்" பார்த்தவுடனே ஒன்றும் விசாரிக்காமல் முடிவு எடுக்கிறதா? இது என்ன பொம்மைக் கலியாணமே ஆயிரம் காலத்துப் பயிரேல்லே. ஊர் பேர் தெரியாதவனை நம்பி ஏமாந்து போகுதுகள். ஊரார் வீட்டுக்கதையைப் பற்றி நாம் ஏன் வம்பிளப்பான்? நான் சொல்ல வந்த விஷயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிவிடுறன். கோமதி தயவுசெய்து உன்ரை மகள் ஜானுவை இனிமேல் எங்கடை வீட்டிற்கு அனுப்பாதை.

என்னக்கா நடந்தது? ஏன் அப்படிச் சொல்லுறியள்? அவள் ஏதும் பிழை செய்திட்டாளே? நான் அப்படி அவளை வளர்க்கேல்லை. ஆண்டவனே ஊர் கதைக்குது என்று மங்களம் சொன்னது உண்மைதானோ படபடத்தாள் கோமதி.

பார்த்தியேடி இருக்குத்தான் நான் பயப்பட்டன். அங்கை அவள் போறது சரி இல்லை என்று சொல்ல நீ என்ன நியாயம் எல்லாம் கதைச்சனி இப்ப அவையள் வாயாலே வரவேண்டாம் என்று சொல்லிப்போட்டினம். இது உனக்கு மரியாதையாய்க் கிடக்குதோ இனி என்ன செய்யப்போறாய் என்று மங்களம் கூற அவளுக்கு மேலும் வேதனையாய் இருந்தது.

இப்ப என்ன நடந்தது போச்சுதென்று இருவரும் கதைக்கிறியள். ஜானுவை எங்கடை வீட்டை அனுப்பவேண்டாம் என்று சொன்னதில் என்ன பிழை? பின்னை என்ன கலியாணம் கட்டப்போற வீட்டிற்கு முறைதலை இல்லாமல் வாறதோ?

என்னக்கா சொல்லுறியள்? என்று கோமதியும் மங்களமும் ஒரே நேரத்தில் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

உண்மைதான் கோமதி உன்ர மகளை என்ர மருமகளாக்கப்போறன். வெளிநாட்டிலை இருக்கிற என்ர மகன் நெற்றிலை ஜானுவைப் பார்த்திருக்கிறான். ஒருக்கால் தன்னோடை கதைக்கச் சொல்லி தம்பிமாரிட்டை சொன்னவனாம். இவள் மறுத்து விட்டாளாம். அதற்குப் பிறகு வீட்டை வந்தாலும் அவள் அந்தப் பக்கம் போறதில்லையாம் அவளின்ரை அழகும் அடக்கமும் என்ரை மகனுக்கு நல்லாய் பிடிச்சுப் போச்சுது. அதன்பிறகு எங்கடை சம்மதத்தையும் கேட்டான். உங்களிடை குடும்ப நிலைமை பற்றி ஒன்றையும் மறைக்காமல் சொன்னன். பணக்கார குடும்பத்திலை பெண் எடுத்து மேலும் அவர்களை உயர்த்துவதை விட ஒரு வறிய குடும்பத்தை வாழவைப்பது நல்லது என்ற நாங்களும் அவன் விருப்பத்திற்கு தடை செய்யவில்லை. எங்களுக்கு உன்ரை மகளை நல்லாய் பிடிச்சுப் போச்சு தென்றோ வசதியாய் வாழலாம் என்றோ ஒரு பக்க முடிவை நாங்கள் எடுக்கமாட்டோம். அதனாலை உங்களுக்கு இதிலை முழுச்சம்மதம் என்றால் தான் நாங்கள் மேற்கொண்டு இதைப்பற்றிக் கதைப்பம் எங்கை உன்ர மனுஷன் சுந்தரத்தைக் காணவில்லை. எங்கையாவது வெளியிலை போட்டாரோ?

இல்லையுங்கோ நான் இங்கைதான் இருக்கிறன். என்று கூறிக்கொண்டு வெளியே வருகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர் என்ன அதிசயமாய்க்கிடக்குது இண்டைக்கு சுந்தரம் நிற்கிறது. கையிலையும் ஒன்றையும் காணேல்லை என்ன கூட்டாளி வரேல்லையோ?

ஆனந்தி அக்கா! போத்தலை வாங்க நான் வெளியிலை போகத்தான் இருந்தன். ஆனால் இந்தக் குடிகாரன் வீட்டிலை சம்பந்தம் செய்ய முடிவெடுத்த உங்கள் பெருந்தன்மையை நினைக்கும் போது உங்கள் காலைத் தொட்டுக்கும்பிடலாம் எனத்தோன்றுகின்றது. ஒரு குடிகாரனாக கையாலாகாத ஒரு தகப்பனாக உங்கள் முன்னே வர வெட்கமாக இருந்தது. அதனால்தான் வரேல்லை. குடிகாரன் வீட்டிலை யார் பெண் எடுக்கப்போகினம் யாரன் இரண்டாம்தாரக்காரனுக்கோ இல்லை கிழட்டுக்கட்டைக்கோ தான் சுந்தரம் மகளைக் கட்டிக்கொடுக்க வேணும் என்று எத்தனைபேர் நையாண்டி செய்தார்கள். ஆனால் அந்தளவும் தவிடுபொடியாக்கி என் மகளுக்கு இவ்வளவு பெரிய நல்ல வாழ்க்கையைக் கொடுக்க வந்த தெய்வப்பிறவி நீங்கள். உங்கள் உயர்ந்த குணத்திற்கு முன்னால் ஒரு குடிகாரனாக இனிமேல் தலை குனிந்து நிற்கமாட்டேன். மனைவி, பிள்ளைகள், உறவுகள், நண்பர்கள் எவ்வளவு புத்திமதி சொல்லித்திருந்தாத நான் உங்கள் நல்ல குணத்தால் மாறி விட்டன். அக்கா என் பிள்ளைகள் மீது சத்தியம் செய்து சொல்கின்றேன். நான் இனிக் குடியை நினைத்துக் கூடப்பார்க்க மாட்டன். பிறர் மதிக்கத்தக்க ஒரு சம்பந்தியாகவே நான் உங்கள் முன்னிலையில் வருவேன் என்று கூறிக்கொண்டு வீட்டின் பின்பக்கம் போகின்றான்.

சிறிது நேரத்தில் ஏதோ உடையும் சத்தம் கேட்கிறது. யாவரும் எட்டிப் பார்க்கின்றார்கள் சுந்தரம் வெற்றுப்போத்தல்களைக் கூட ஒரு வித வெறியுடன் உடைத்துக்கொண்டிருக்கின்றான். அனைவரும் மகிழ்ச்சிக்கடலில் மிதக்கின்றார்கள்.

முற்றும்

(யாவும் கற்பனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவளும் தமிழச்சியே

குண்டு வீச்சினால் சிதைக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய வீடு திருத்தியமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் "விதவைகள் இல்லாம்" என்ற விளம்பரப்பலகையைத் தாங்கிக் கொண்டு கம்பீரமாய் நின்றது.

மந்திரி ஒருவர் மங்களவிளக்கேற்றி அவ்வில்லத்தை திறந்து வைக்கிறார். சொற்பொழிவுகள், அதையடுத்து சில நிகழ்ச்சிகள் நடந்து இறுதியாக விதவைகளுக்கு ஆடைகள் வழங்கும் வைபவம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. தேவகியின் முறை வரவே அவள் பெயர் ஒலிபெருக்கியில் அறிவிக்கப்படுகிறது கூட்டத்தில் இருந்து மேடையை நோக்கி வந்து கொண்டிருந்தவள் அங்கே ஆடைகளை வழங்கிக் கொண்டிருக்கும் பெண்மணியை ஒரு கணம் உற்றுப்பார்க்கிறாள். காஞ்சிபுரப்பட்டுச்சேலை துலாக்கயிறு போல மொத்தமான தாலிக்கொடி, நெற்றியின் அரைவாசி இடத்தைப் பிடிக்கும் குங்குமப்பொட்டு, குங்குமம், சிவப்பு நிறக்குங்குமம், தன் கணவன் சிந்திய அதே சிவப்பு நிறக் குங்குமம் தேவகியின் இரத்தமும் கொதிக்கின்றது. அந்தக் கொதிப்பினூடே அந்தப் பயங்கரமான சம்பவமும் திரைப்படம் போல அவள் கண்முன் தோன்றுகிறது.

காதலித்தவனை கைபிடித்ததால் சுமங்கலிப்பூசை அன்று விரதம் இருந்து திருவிளக்கு எடுப்பதாக நேரத்தி வைத்திருந்த தேவகி தன் கணவனோடு கோயிலுக்குச் செல்கின்றாள். கோயிலின் வாசலில் இராணுவத்தினரால் ஜனங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த காட்சி மனதில் பயத்தை உண்டாக்கியது. கோயிலுக்குள் யாரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. திடீரென பேரிரைச்சலுடன் ஒரு பாரிய வண்டி அங்கே வந்து பெருந்தொகையான இராணுவத்தைக் கொட்டியது.

வந்ததும் வராததுமாக ஆண்களை வேறாகவும், பெண்களை வேறாகவும் நிற்கும்படி கட்டளையிட்டார். தடித்த நெடிய தோற்றமுடைய ஒருவர் அவர்தான் இராணுவ அதிகாரியாக இருக்கவேண்டும்.

இணைந்திருந்த ஜோடிகள், தாய்பிள்ளை, சகோதரர்கள் பிரிக்கப்பட்டார்கள் "எல்லோரையும் சூட் பண்ணுங்க" என்று ஆண்கள் நிற்கும் இடத்தைச் சுட்டிக்காட்டி கொச்சைத் தமிழில் மீண்டும் உத்தரவிட்டார். அந்த இரக்கமற்ற அதிகாரி, பெண்கள், குழந்தைகள் எல்லாம் கதறி அழுதார்கள். கட்டளையிட்டவரின் கால்களில் விழுந்து மன்றாடினார்கள்.

தேவகிக்கு திருமணம் முடிந்து ஒரு மாதம் கூட ஆகவில்லை. தன் புத்தம்புதிய தாலியை எடுத்து தன் கண்ணில் ஒற்றிக்கொண்டாள். அம்பாளைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தித்தாள். பின் அங்கே அழுது கொண்டிருந்த தன் தாய் கட்டியிருந்த வெள்ளைச் சேலையின் ஒரு பகுதியைக் கிழித்து எடுத்துக்கொண்டு தன் கணவர் மற்றும் ஆண்களும் நிற்கும்பக்கத்திற்கு விரைந்து சென்று தன் இருக்கைகளாலும் வெள்ளை சேலையை அபயக்கொடியாக சமாதானக் கொடியாகத் தூக்கிப்பிடித்தாள். மற்றைய பெண்களும் "ஐயா இவர்களை ஒன்றும் செய்து விடாதீர்கள் அல்லது எங்களையும் சேர்ந்து சுடுங்கள்" என்று புலம்பினார்கள். அந்த இரக்கமற்ற அதிகாரியோ எதையும் சட்டை செய்யவில்லை. எந்த நேரம் வெடிச்சத்தம் கேட்குமோ என்று அஞ்சிக்கொண்டிருந்தனர்.

தேவகியரல் பொறுக்கவே முடியவில்லை முடிவு அவள் மனதில் தெரிந்துவிட்டது போலும். அவள் வேதனை வெறியாக மாறி ஒரு வேகத்தைக் கொடுத்தது. பலிபீடத்திற்கு கொண்டு சென்ற ஆடு உயிருடன் என்றுமே திரும்பிப் போவதில்லை அது போலத்தான் இவர்கள் நிலமை என்று நினைத்தாளோ என்னவோ. அந்த அதிகாரியின் அருகில் சென்றாள். ஐயா! எங்கள் கண்ணீர் உங்கள் கல்மனதைக் கரைத்து விடப்போவதில்லை. என்பது தெரியும் ஆனாலும் கேட்கிறேன் இந்த அப்பாவிகள் தங்களுக்கு என்ன குற்றம் செய்தார்கள்? ஏன் இவர்களைச் சுடச்சொல்கிறீர்கள்? காரணம் இல்லாமல் எங்கள் இனத்தை அழித்து கொண்டு போகின்றீர்களே? இந்தக் கொடுமைகளுக்கு ஒரு முடிவேயில்லையா? என்று பொரிந்து தள்ளினாள். பாஷை புரியவில்லையோ அல்லது சர்வாதிகாரமோ தெரியாது. தேவகி சற்றும் எதிர்பாராத விதமாக அவளைத் தன் பூட்ஸ் காலால் உதைத்துத் தள்ளி துப்பாக்கியால் அவள் கையை பதம்பார்த்தார் அந்தப் படைத்தளபதி கொடி பிடித்த கை ஒடிந்து போக சமாதானக் கொடி எங்கேயோ போய் விழுந்தது. அதைத்ததொடர்ந்து டுமீல் - டுமீல் என்ற வேட்டுச்சத்தங்கள், மரண ஓலிகள், ஒருவினாடிக்குள் எல்லாமே நடந்து முடிந்துவிட்டது விட்டன.

அடியின் வலியால் துவண்டு போய் மயக்கமுற்ற தேவகி கண் விழித்தபோது அவள் முழங்கையில் பெரியதொரு கட்டுப்போடப்பட்டிருந்தது. குற்றம் செய்யாத தன் கணவனைக் கொன்றதற்காக அன்று கண்ணகி அரசனிடமே நீதி கேட்டாள். மதுரை நகரத்தையே தீக்கிரையாக்கினாள் ஆனால் இன்று? கொலைசெய்யப்படவிருக்கும் தன் கணவனுக்காகவும் மற்றும் பெண்கள் சார்பிலும் அரக்கர்களிடம் நீதிகேட்கப்போய் கை செயலிழந்தது தான் கண்ட பலன். சுமங்கலிப்பூசை அன்று பல பெண்கள் அமங்கலியாக்கப்பட்டார்கள்.

"என்னம்மா நான் பார்சலை நீட்டிக் கொண்டிருக்கின்றேன் நீ ஏதோ கனவு கண்டு கொண்டிருக்கின்றாய்? மிகுதியானவர்களுக்கு குடுத்து முடித்து நாம் வீடு போய் சேர எவ்வளவு நேரமாகும் தெரியுமா? பணம் கொடுத்து வாங்குபவர்களே பொருட்களை மளமள வென்று வாங்கிக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விடுவார்கள் நீங்கள் என்னடாவென்றால் ஒசியில் தருவதைக்கூட...! என்று மந்திரி மனைவி சொல்லி முடிப்பதற்குள்ளே தன் கடந்த கால நினைவில் இருந்த சுயநினைவிற்குத் திரும்பிய தேவகி வெடுக்கென அவள் கையில் இருந்த பார்சலை தன் ஒற்றைக் கையால் பறித்து தூர எறிந்தாள்.

பார்சல் சுற்றியிருந்த பேப்பர் கிழிபட்டதால் அதற்குள் இருந்த புத்தம் புதிய வெள்ளைச்சேலை ஒன்று தேவகியைப் பரிதாபமாகப் பார்த்து "உனக்குரியவள் நான் தானே ஏன் என்னைத் தூக்கி எறிந்தாய்? உங்களை எல்லாம் இந்த நிலைக்குள்ளாக்கியவர்களை ஆதரித்து அவர்களுக்கு குடைபிடித்து அவர்கள் போடும் பிச்சையை உங்களுக்கு அன்பளிப்பு என்ற பெயரில் தருகின்றார்களே அவர்களைத் தூக்கி எறி" என்ற சொல்லாமல் சொல்வது போல இருந்தது தேவகிக்கு.

ஒரே ஒரு நிமிடம் தான் பாரதிதாசன் ஏட்டிலே படைத்த புதுமைப்பெண் இதோ மேடையில் ஏறி முழங்கத்தொடங்கி விட்டாள்.

என் இனிய சகோதரிகளே!

அழைக்கப்படாத பேச்சாளராக நான் உங்கள் முன் தோன்றலாம். அதற்காக என்னை மன்னித்து விடுங்கள். இன்று இந்த விதவைகள் இல்லம் என்ற ஒன்று உருவாகக்காரணம் என்ன? எமது நாட்டில் அதுவும் வடமாகாணத்தில் விதவைகள் தொகை அதிகரித்து விட்டது என்பது தானே அர்த்தம்? நினைத்துப் பார்க்க உங்களுக்கு மனம் வேகவில்லையா? என்னைப்போல இளம் பெண்கள் வாழ்விழந்து துன்புறக்காரணம் வன்செயல் இன்று நிவாரணம் என்ற பெயரில் எமக்கு எத்தனையோ தரலாம். ஆனால் இழந்த எம் வாழ்க்கை மீட்டுத்தர இவர்களால் முடியுமா? எம் பூவையும், பொட்டையும் தரமுடியுமா? சரி அதுதான் போகட்டும் இழந்தவை இழந்தவையாக இருக்கட்டும் போன உயிரை மீட்டுத்தாருங்கள் என்று நான் வாதாட வரவில்லை இனிமேலாவது எங்கள் உயிருக்கு எங்கள் பெண்மைக்கு இவர்களால் பாதுகாப்பளிக்க முடியுமா? நாங்கள் சுதந்திரமாக, நிம்மதியாக வாழ வழி செய்வார்களா? எங்கள் சகோதரிகள் புதைகுழிகளில் சங்கமாகும் கொடுமைகளைத் தவிர்க்க முடியுமா?

குண்டு வீச்சின் நடுவே குப்பி விளக்கின் ஒளியில் கஸ்ரப்பட்டுப் படித்து பரீட்சை எழுத முடியாத கட்டத்தில் இடம்பெயர்ந்து ஓடித்திரிந்தோமே இப்போதும் ஓடிக்கொண்டிருக்கின்றோமே அந்த ஓட்டத்தை தடுத்து நிறுத்தி எங்களுக்கு ஒரு நிரந்தரமான இடத்தை தர இவர்களால் முடியுமா? கூறுங்கள் என்ற அவளின் கூக்குரலைத் தொடர்ந்து பல குரல்கள் ஆவேசமாக அங்கிருந்து வெளிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு வந்திருந்த மந்திரியோ மற்றவர்களோ எவரும் வாயே திறக்கவில்லை

இதைக்கண்ணுற்ற தேவகி மீண்டும் தொடர்ந்தாள். நாங்கள் கேட்கும் கேள்விகளுக்கு இவர்களால் பதில் சொல்லவோ உத்தரவு தரவோ முடியாது. இவர்கள் உயிரே இவர்களுக்கு சொந்தமானது அல்ல. யாரிடமோ பணயம் வைத்து எத்தனையோ பாதுகாப்புடன் வந்திருக்கின்றனர் பார்த்தீர்களா? இவர்கள் மனித உருவில் நடமாடும் பொம்மைகள் எங்கள் கவலையை விட அவர்கள் கதிரையே அவர்களுக்குப் பெரிது மேடையில் முழங்குவார்கள் செயலில் காட்டமாட்டார்கள் எங்கள் முன் சந்ததியினர் உரிமைகளை விட்டுக்கொடுக்காமல் தீவிரமாகச் செயல்பட்டிருப்பார்களேயானால் இன்று நாம் கலங்க வேண்டி வந்திருக்காது. இவர்களை நம்பிப் பிரயோசனம் எதுவும் இல்லை. நாளை வரும் எமது சந்ததியினராவது நின்மதியாக சுதந்திரமாக வாழவேண்டுமானால் நாம் தான் முயற்சி செய்யவேண்டும் சொந்த நாட்டில் நாம் பிறந்த மண்ணில் ஏன் நாம் அகதி என்ற பெயருடன் வாழவேண்டும்? எங்களுக்கும் உரிமைகள் வேண்டும் சுதந்திரம் வேண்டும் இதோ இன்று ஆரம்பிக்கப்பட்ட விதவைகள் இல்லம் எமக்குப் பல உதவிகள் செய்யலாம். ஆனால் இங்கேயும் எமக்கு நின்மதி கிடைக்கப்போவதில்லை. இன ரீதியில் வகைபடுகின்றோம். இனத்தால் ஒடுக்கப்படுகின்றோம். நாம் ஒதுக்கப்பட்டத்திற்கு அத்தாட்சிதான் இந்த இல்லம். சுயநலமாக நீங்கள் மட்டும் வாழ நினைத்தால் இங்கே இருந்து வசதியாக வாழுங்கள் தன்னம்பிக்கையும் உறுதியும் இருந்தால் என் பின்னே வாருங்கள் என்று கூறி அவ்விடத்தை விட்டு வெளியேறுகின்றாள்.

கூட்டத்தில் இருந்த பெண்கள் எல்லாம் தங்கள் வாங்கிய பார்சல்களை அவ்விடத்திலேயே போட்டு விட்டு தேவகியின் பின் செல்கின்றனர். மேடையில் உள்ளவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக்கொள்கின்றனர். அதே சமயம் யாருமே சற்றும் எதிர்பார்க்க முடியாத வியப்பூட்டும் சம்பவம் ஒன்று அங்கே நடந்தது.

ஆம் ஆடைகள் நன்கொடை வழங்குவதற்காக வந்திருந்த மந்திரியின் மனைவி புயலெனப் பாய்ந்து செல்லும் அந்தப்புரட்சிப் பெண்களுடன் தானும் ஒருத்தியாக சேர்ந்து நடந்து கொண்டிருந்தாள்.

இனப்பற்று அவளை மட்டும் விட்டு விடுமா என்ன?

(யாவும் கற்பனை)

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை தேடிக்கொண்டே இருக்கிறாள்

"உந்தக்கடையில் ஒன்றும் இராது வா மற்றக் கடைக்குப் போவம்" அவள் கடையைத் தாண்டி ரியூசன் கிளாசுக்கு போகும் சின்னஞ்சிறுசுகளின் இக்கதையைக் கேட்டு தீபா சிரித்துக்கொள்வாள் வேதனைச் சிரிப்புத்தான் அது. தன் கடையைப் பார்த்துப் பகிடி பண்ணிக் கதைக்கும் அந்தப் பிஞ்சுகள் மேல் அவளுக்கு சிறு துளி கோபம் கூட வரவில்லை. உண்மையைத்தானே சொல்லுதுகள் என்று நினைத்துக் கொண்டாலும் எப்படி இருந்த கடை இப்படிப் போய்விட்டதே என்று மிகவும் துன்பப்பட்டாள்.

சொந்த மண்ணில் உறவுகளோடும், நண்பிகளோம் மிகவும் சந்தோசமாக வாழ்ந்தவள் தான் தீபா. படுக்கை நோயாளியாக இருக்கும் அவள் தாயை மிகவும் பரிவுடனும் அக்கறையுடனும் பராமரித்தாள். பக்கத்தில் இருந்து பணிவிடை செய்தாள். இவ்வளவு சிரமத்தின் மத்தியிலும் சிறு பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் குடுப்பாள் அதில் வரும் பணத்தில் தன் சிறு சிறு தேவைகளைப்பூர்த்தி செய்வாள். தீபாவிற்கு கலைத்துறையிலும் ஈடுபாடு இருந்தமையினால் சிறுவர்களுக்கு நிகழ்ச்சிகள் பழக்கி மேடை ஏற்றமும் செய்திருக்கின்றாள். சமூக சேவைகள் செய்து அவளுக்கென்று தனியாக ஓர் இடத்தையும் பெற்றிருந்தாள்.

யார் செய்த பாவமோ? இல்லை ஊருக்குத்தான் கண் பட்டதோ தெரியவில்லை. தடம் புரண்டது ஊர். சிறிது சிறிதாக தொடங்கிய நாட்டுப்பிரச்சனை பெரிதாக கோரத்தாண்டவம் ஆடியது. சமாளிக்கவே முடியாத கட்டத்தில் எங்கு போவது என்று தெரியாமல் சனங்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினார்கள் கொத்துக் கொத்தாய் குடும்பமாய் இருந்தவர்கள் தனித்தனியே பிரிக்கப்பட்டவர்கள். செத்தவர்கள் யார்? பிழைத்தவர்கள் யார்? பிடிபட்டவர்கள் யார்? என்று எவருக்குமே தெரியாது.

எவரும், எவரையும் பார்க்க காப்பாற்ற முடியாத நிலமை போர் அரக்கன் பிடியில் சிக்கிவிடாமல் தப்புவதற்காக ஓடினார்கள். ஊரே திரண்டு ஓடியும் தீபா மட்டும் அசையாமல் இருந்தாள் இதற்குக் காரணம் அவளுக்குத் தன் உயிர் மேல் ஆசை இல்லாமல் இல்லை. தாய்ப்பாசம் தான் தடுத்து நிறுத்தியது. ஆமாம்! அவளைப் பத்து மாதம் சுமந்து பெற்று பாசமுடன் அருமையாக வளர்த்த அன்புத்தாய் நடப்பது எதுவும் தெரியாது படுக்கையில் கிடக்கும்போது எப்படி அவளால் போக முடியும்? தாயைவிட வேறு எதுவும் அவளுக்கு பெரிதாகத் தெரியவில்லை. தங்கையின் பிடிவாதத்தை மாற்ற இயலாத தீபாவினது அண்ணன் அவர்கள் கூடவே தானும் இருந்து விட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் விமானங்கள் போட்டி போட்டு குண்டுகளை வீசின. "ஷெல்" விழும் சத்தம் காதுகளைப் பிளந்தன. தீபா பயத்தால் நடுங்கித் தேம்பி அழுதாள். அவளின் அழுகையை கட்டுப்படுத்த அவளது அண்ணனால் முடியவில்லை. தங்கையின் தலையைத் தடவியபடி "தீபா அம்மாவுக்காகத்தானே நீ எங்கும் வராமல் விட்டனீ? அதனால் எங்கள் குல தெய்வம் பத்திரகாளி ஒன்றுமே வர விடமாட்டாள் எங்களைக் காப்பாற்றுவாள் நீ ஒன்றுக்கும் பயப்படாதை" என்று சொன்னார். ஆனால் தீபா அழுகையை நிற்பாட்டவேயில்லை எப்படியோ அந்தப் பயங்கரமான இரவு மெல்ல மெல்ல அகன்றது.

எத்தனையோ இன்னல்கள், கொடூரங்களை சந்தித்து அனுபவித்த பின்பு ஒரு சில நாட்களில் மூவரும் அடைக்கலம் தேடிச் சென்ற உறவுகளிடம் கொண்டு வரப்பட்டார்கள். எந்தத் தாய்க்காக தன் உயிரையும் பொருட்படுத்தாது, ஆபத்து வரும் என்று தெரிந்தும் அசையாமல் இருந்து கஸ்ரப்பட்டாளே அந்தத்தாய் அவளுக்கு இருந்த ஒரே ஒரு துணை, அவளைத் தவிக்க விட்டு இந்த உலகத்தை விட்டே போய்விட்டாள்.

அனாதையாக்கப்பட்ட தீபாவை அழைத்து வந்த அவள் அண்ணன் ஒரு சிறு கடையை அவளுக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். இடம் பெயர்ந்து வெறும் கையோடு வந்தவளுக்கு அந்தக் கடைபெரும் ஆதரவையும், ஆறுதலையும் கொடுத்தது. துணை என்று பெரிதாகச் சொல்லக்கூடிய உரிமையான உறவு அவளுக்கு இல்லாததால் இதுவே பெரும் துணையாக இருந்தது. மற்றவர்களிடம் கையேந்தி அவர்கள் வெறுப்பிற்கும், சினத்திற்கும் ஆளாகாமல் காப்பாற்றியது. தன் வசதிக்கேற்றவாறு சிறு முதலீடு செய்து அத்தியாவசியமான பொருட்களைப் போட்டு கடையை நடாத்தி வந்தாள்.

அதன் வருமானத்தைக் கொண்டு தன் தேவைகளைப் பூர்த்தி செய்தாள். ஆனால் அவள் இரக்க சுபாவமே அவளுக்கு குழி தோண்டியது ஆமாம்! ஒரு நாள் கூட தன்னுடைய நிலமையை, தன் எதிர்காலத்தின் விளைவுகளைப்பற்றி சிந்திக்க மாட்டாள். மற்றவர்கள் படும் கஸ்டம் தான் அவள் கண்களுக்குப் தெரியும். தன்னால் இயன்ற அளவு பிறருக்கு உதவி செய்வாள். "தன்னைத்தானே உருக்கி மற்றவர்களுக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும் மெழுகுவர்த்தி" போலதான் அவளும். உதவிகள் ஒருபக்கம் இருக்க, இச்சின்னஞ்சிறுசுகளின் நையாண்டி செய்யும் அளவிற்கு இக்கடை வெறிச்சோடிக்கிடக்கின்றதே. அதற்கு முழுக்காரணம் அவளின் இரக்க சுபாவம் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தீபா கடை திறந்தால் தான் எங்கள் வீட்டில் அடுப்பு எரியும்" என்றவர்களும் "தீபா அன்றி இல்லாவிட்டால் நாங்கள் பசியால் செத்திருப்பம்" என்று சொன்னவர்களும் சேர்ந்தே இன்று நையாண்டி செய்கின்றார்கள். ஒரு காலகட்டத்தில்! ஒரு சில குடும்பங்கள் அவள் கடையை நம்பித்தான் சீவியம் நடந்தது. கஸ்ரப்பட்டவர்கள் உழைப்பு இல்லாதவர்கள் என்று அந்தக் குடும்பங்களை எவருமே உதவி செய்வதோ கணக்கெடுப்பதோ கிடையாது. அப்படியானவர்களுக்குத்தான் இரங்கி கூடுதலான உதவிகள் செய்தாள். பிச்சை எடுத்துப் பிச்சை போடுவதாகத்தான் இருந்தது அவள் செயல்கள்.

வருடங்கள் செல்ல நிலமைகள் மாற இவளிடம் கை ஏந்தி நின்றவர்கள் கொஞ்சம் வசதி வாய்ப்புக்கள் கிடைத்தவுடன் நவீன கடைகளைத் நாடிச் சென்றனர். வாங்கிய கடனைத் திருப்பிக்கு குடுக்கவும் இல்லை. அவள் கடைப்பக்கம் எட்டிக்கூடப்பார்ப்பதும் இல்லை. "கடன்பட்டார் நெஞ்சம் கலங்கியது அந்தக்காலம்" கடன் கொடுத்தார் கலங்குவது இந்தக் காலமாக மாறிவிட்டது தீபாவிற்கும் இதே நிலமைதான் அவளின் கடைக்கு மட்டும் பேசும் சக்தியிருக்குமானால் சாகஸக்கர்களின் கதைகளையும், அவர்கள் விட்ட கண்ணீரையும் பற்றியும் சொல்லும் கடை வீழ்ச்சி அடைந்ததே தவிர அவள் முயற்சி, நம்பிக்கை இன்னும் முற்றாக வீழ்ச்சி அடையவில்லை. பல்பேரின் பரிகாசங்களின் மத்தியிலும் ஏதோ ஒரு உறுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

அவளுடைய அந்த நம்பிக்கைக்கு சோதனை ஏற்பட்டது அவள் வயிற்றுப்பிழைப்புக்கு மண் அள்ளிப்போடப்பட்டது. ஆமாம்! அவளுக்கு கொடுக்கப்பட்ட அந்தக் கடை பறிக்கப்பட்டது. பாவம் தீபா பதறிப்போனாள் சிறுவருமானம் வந்தபோதும் தன் தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டவளுக்கு கடைபறிபோனது மிகவும் பாதிப்பை கொடுத்தது. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்த போதும் அடுத்த கணமே தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள் "இந்தக் கடை இல்லாவிட்டால் பிழைக்க முடியாதா? முடியும்" என்று ஒரு தீர்மானத்துடன் புறப்பட்டாள் வேற பிழைப்பைத் தேடி அவள் வயத்திற்கு அவ்வளவு சுலபமாக வேலை எவரும் கொடுக்கப்போவதில்லை. அது தெரிந்தும் இன்றுவரை தீபா வேலை தேடிக்கொண்டே இருக்கிறாள்.

(யாவும் கற்பனை)

முற்றும்

**2006 "கலை ஓசை" நூலில் பிரசுரமானது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலமெல்லாம் காத்திருப்பேன்

வனப்பும் வளமும் கொண்ட எம் வன்னி மண்ணை விட்டு அல்லல்பட்டு அவதிப்பட்டு அகதிகளாய் ஓடி வந்த குடும்பங்களில் ஜெயந்தியின் குடும்பமும் ஒன்றாகும். ஒவ்வொருவரும் வசதிகளைப் பார்க்காது இருப்பதற்கு இடம் தான் தேடினார்கள். நண்பர்கள் வீட்டிலும் உறவுகள் வீட்டிலும் தஞ்சம் அடைந்தார்கள். ஜெயந்தியும் குச்சவெளியில் உறவினர் வீட்டில் அடைக்கலம் புகுந்தாள்.

புதுகுடியிருப்பில் இரண்டு பிள்ளைகளுடன் ஜெயந்தியும் மோகனும் மிகவும் சந்தோசமாக வாழ்ந்து வந்தார்கள். காதலித்து திருமணம் செய்த இவர்கள் வாழ்க்கை மிகவும் வசந்தமாகத்தான் இருந்தது.

ஆனால் அந்த வசந்தம் நீடிக்கவில்லை ஆமாம் 2009ம் ஆண்டு முற்றாகத் தொலைந்து போனது. அது ஜெயந்தியின் குடும்பத்திற்கு மட்டுமல்ல வன்னியில் வாழ்ந்த அனைவருக்கும் தான். உறவுகளைப் பறிகொடுத்த உடமைகளை இழந்து உருக்குலைந்து நின்றது வன்னி.

புதுக்குடியிருப்பில் இருந்து புறப்பட்டு ஒவ்வொரு இடமாக அலைந்து இறுதியில் முள்ளிவாய்க்காலில் இருந்த போது அரச படையின் உத்தரவின் பேரில் அங்கிருந்து புறப்பட்டு ஓமந்தையில் தஞ்சம் அடைந்தார்கள்.ஜெயந்தியின் கணவர் குண்டுபட்ட காயங்களோடு இயலாத நிலையிலும் மனைவி பிள்ளைகளக்கு துணை வேண்டும் என்பதற்காக வந்த அவரை தங்களிடம் அடைக்கலமாகும் படியும் தாங்கள் பாதுகாப்பு தருவதாகவும் அழைத்துச் சென்றார்கள். அன்பு மனைவியையும் அருமைக் குழந்தைகளையும் அனாதைகளாக தனிமையில் தவிக்க விட்டு அழுத வண்ணம் அவர்களுடன் சென்றவர் தான் இதுவரை எதுவித தகவலும் இல்லை. அழுதவண்ணம் சென்ற கணவரை நினைத்து இன்னும் அழுது கொண்டிருக்கின்றாள் ஜெயந்தி.

கணவரைப்பற்றி அறிவதற்கு ஜெயந்தியால் எடுக்கப்பட்ட முடிவுகள் தோல்வியடைந்தன. முறைப்பாட்டைக் கேள்விப்பட்டவர்கள் முறையாகக் கவனித்து தீவிரமாக செயல்பட யாரும் முன் வரவில்லை. எங்கள் மக்கள் எங்கள் இனம் என்று கத்துபவர்கள் கூட கவனம் எடுக்கவில்லை. முறைப்பாட்டுக் கடிதம் பல வருடங்களாக முடங்கியே கிடந்தது.

நெருங்கிய உறவினர் என்று சொல்லக் கூடிய அளவிற்கு ஜெயந்திக்கு எவரும் இல்லை. கணவனின் தாயார் தனக்கு வரும் ஓய்வூதியப் பணத்தை மருமகளிடம் கொடுத்துக் கொள்வார். இப் பணம் கூட அவர்களுக்கு கொஞ்சக் காலமாவது கிடைக்குமோ என்பது தான் கேள்வி. வருத்தக்காரியான ஜெயந்தியின் மாமியாருக்கு88 வயதாகி விட்டது எந்த நேரம் என்ன நடக்கும் என்று தெரியாத நிலைமை கடவுள் கருணை செய்து அந்த வயோதிப மாமியாரை இன்னும் கொஞ்சக் காலமாவது உயிருடன் இருக்க விட வேண்டும். இல்லையேல் பாவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயந்தி தனித்துப் போவாள். உதவிக் கரம் நீட்ட வேறு எவரும் இல்லை. ஜெயந்தியின் நிலைமை அறிந்த father தையல் இயந்திரம் ஒன்றை அன்பளிப்புச் செய்தார். ஆடைகளை தைத்துக் கொடுத்து கூலி பெறலாம். அதுவும் சாத்தியமில்லாமல் போய் விட்டது. காரணம் ஏற்கனவே அவ்விடத்தில் தையல் தைப்பவர்கள் அதிகம் இருப்பதால் புதிதாக வந்த ஜெயந்தியிடம் எவரும் வரவில்லை.வேறு ஏதாவது கூலி வேலைக்கு என்றாலும் போவதற்கு அவளது உடல் நிலை இயலாமல் இருக்கின்றது. இறுதியாக நடந்த அசம்பாவிதத்தின் போது இவருக்கும் கை, வயிறு, தொடை, எல்லாம் காயம் ஏற்பட்டது அதனால் கடினமான வேலை செய்ய முடியாது."கதிரை" வேலைக்குப் படித்த படிப்பும் போதாது. பாவம் என்ன தான் செய்வாள்?

வவுனியா முகாமில் இருக்கு போது தான் மகன் துவாரகன் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் சித்தியடைந்தான். எவ்வளவு கஸ்டம் துன்பம் மத்தியிலும் சித்தியடைந்த துவாரகன் பாராட்டுக்குரியவன் தான். பிள்ளைகள் இருவரினதும் படிப்புச் செலவிற்காகவும் மற்றும் செலவுகளுக்காகவும் தாலிக்கொடியை அடைவ வைத்த ஜெயந்தி வட்டி கட்ட முடியாமல் போனதும் தாலிக்கொடி மாண்டே போய்விட்டது. நகை போனது பற்றி அவள் கவலைப்படவேயில்லை. பிள்ளைகள் இருவரும் நன்றாகப்படித்து வரவேண்டும் என்றே விரும்புகின்றாள். பத்து வயது வந்த துவாரகா பருவம் அடைந்து விட்டதால் தகப்பனின் பாதுகாப்பு இல்லாமல் எப்படிச் சமாளிக்கப் போறேன் என்ற கவலை வந்து விட்டது ஜெயந்திக்கு.

உறுதுணையாய் இருந்து உதவி செய்யும் மாமியாருக்கு ஏதும் நடந்து விடக் கூடாது என்று கடவுளை வேண்டுகிறாள். அடுத்து பிள்ளைகள் இருவரினதும் படிப்புச் செலவுகளிற்கு யாராவது உதவி செய்வார்களா என எதிர்பார்க்கின்றாள்.

யார் உளரோ? அவள் துயர் தீர்க்க? ஜெயந்தியைப் போல இன்னும் எத்தனை பெண்கள் தான் பிறரிடம் கை ஏந்தும் நிலை உள்ளதோ? அடுத்து வரும் எம் சந்ததியாவது பிரச்சனை இல்லாமல் சுதந்திரமாக வாழ வழி பிறக்குமா?

எப்போது என்றாலும் தன் கணவர் தன்னிடம் திரும்பி வருவார் என்ற பெரும் நம்பிக்கையுடன் நெற்றியிலே குங்குமமும் தலையிலே பூவும் சூடி எதிர் பார்ப்புடன் காத்திருக்கும் ஜெயந்தி தன் கணவர் வந்தவுடன் வன்னிக்கே மீண்டும் போய் வாழ விரும்புகிறாள்.

இறைவனே! அந்த அபலையின் எண்ணம் நிறைவேற வேண்டும். அவள் வாழ்வில் பூரண வசந்தம் பிறக்க வேண்டும் என்று எம் கோணேசர் பெருமானைக் கை எடுத்து இரஞ்சுகின்றேன். அந்த அந்த அபலைபக்காக நீங்களும் பிரார்த்தனை செய்யுங்கள்.

முற்றும்

(யாவும் கற்பனையே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வோமா?

யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அண்ணன் மகளைப் பார்ப்பதற்காக சென்ற உதயா "பாஸ்" இல்லாத காரணத்தினால் உள்ளே போக முடியாமல் ஆஸ்பத்திரி வாசலிலே நிற்கின்றாள். இவளைப் போல இன்னும் சில பெண்களும் பாஸ் இல்லாமல் நிற்கின்றார்கள். உள்ளே போக வாசலில் நின்ற கூர்க்கா அனுமதிக்கவில்லை. கெஞ்சிப்பார்த்தார்கள் தர்க்கமாடிப்பார்த்தார்கள் எதுவும் அங்கே எடுபடவில்லை எங்கள் பெண்டுகள் வாயைக் கேட்கவா வேண்டும்? ஏதோ எல்லாம் சொல்லி அவனைத்திட்டினார்கள். அந்தக் கடமைவீரன் அதைக் கணக்கெடுக்கவேயில்லை Hand phone ல் பாட்டுப்போட்டுக் கேட்டுக்கொண்டிருந்தான்.

அச்சமயம் கடமையை முடித்தவிட்டு ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்த டாக்டர் ஒருவர் பெண்கள் சிலர் வாசலிலே கத்திக் கொண்டிருந்ததையும் கடமையில் நின்ற கூர்க்கா பாட்டுக்கேட்டுக் கொண்டிருந்ததையும் பார்த்து விசயம் என்னவென்று புரிந்து கொண்டார். வாசலில் காத்துக்கொண்டிருந்த பெண்கள் அனைவரையும் உள்ளே போகச் சொல்லிவிட்டு கூர்க்காவை தன்னுடன் அழைத்துக் கொண்டு சென்றார். கூர்க்காவிற்கு இன்று நல்ல விருந்து கிடைக்கப்போகின்றது என நினைத்துக் கொண்டு பெண்கள் உள்ளே செல்கின்றனர்.

உதயா மருமகளிற்கு கொண்டு வந்த சாப்பாட்டை ஊட்டி விட்டு சுற்றும் முற்றும் பார்க்கின்றாள். எதிர்ப்பக்கத்தில் உள்ள கட்டிலில் காய்ச்சலால் அவஸ்த்தைப்பட்டுக் கொண்டிருந்த குழந்தையின் தலையைத் தடவிய வண்ணம் கவலைப்பட்டுக் கொண்டிருந்த பெண்ணைக்கண்டாள் வறுமை என்பதை விளம்பரப்படுத்துவது போல இருந்தது அப்பெண்ணின் தோற்றம். இயற்கையாகவே இரக்க சுபாவம் கொண்ட உதயாவிற்கு அப்பெண்ணின் தோற்றம் மிகவும் வேதனையைக் கொடுத்தது அண்ணன் மகளுக்கு கொண்டு சென்ற தோடம்பழத்தை அப்பெண்ணின் குழந்தைக்கு கொடுத்துவிட்டு அவளைப்பற்றி விசாரித்தாள்.

புஸ்பராசாவும் சிவரஞ்சனியும் காதல் திருமணம் செய்தவர்கள். இவர்களுக்கு மூன்று ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் உள்ளன. புஸ்பராசா தோட்டம் செய்கின்றவர். ஆனால் அதில் வரும் வருமானம் குடும்பத்திற்குப் போதாமையினால் இடைக்கிடையே கூலி வேலைக்கும் போய் உழைப்பார். ஏழு பேரைக்கொண்ட ஏழ்மையான குடும்பமாக இருந்தாலும் சந்தோசமாகத்தான் வாழ்ந்நதார்கள். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பார்கள்" ஆனால் அந்தக் குடும்பத்தின் தலைவனுக்கே நோய்வரத்தொடங்கியது. காலிலே ஒரு சிறுகாயம் ஏற்பட்டு பலகாலம் மாறாமல் இருக்கவே அவருக்கு சலரோக வருத்தம் கூடி விட்டது என்று சொன்னார்கள். வைத்தியம் செய்தும் பலனற்றுப் போகவே இடது கால் பாதத்தை சத்திரசிகிச்சை மூலம் துண்டித்தனர். அதனால் அவரால் எந்தவித தொழிலும் செய்ய முடியாமல் போனது. உழைக்கும் குடும்பங்களே வருமானம் பற்றாது என ஒப்பாரி வைக்கும் போது எதுவித உழைப்புமே இல்லாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு ஜவீன்களைக் கொண்ட குடும்பம் என்ன பாடுபடும்? கஸ்ட நிலமையில் மூத்த மூன்று பிள்ளைகளின் படிப்பை நிறுத்தி விட்டார்கள் முற்பந்தைந்த வயதே ஆன சிவரஞ்சனி வெட்கப்படாமல் கூலி வேலைக்குப் போகின்றாள். அனைவரினதும் வயிற்றுப் பசியைப் போக்கத்தான்.

அதுவும் நிரந்தரமாக கிடைப்பதில்லை சிவறஞ்சனியின் அண்ணர் சில சமயங்களில் உதவி செய்வார். அவரும் தனிநபர் அல்ல குடும்பஸ்தர் புஸ்பராசாவின் இடது கால் பாதம் எடுக்கப்பட்டதால் செயற்கைகால் பொருத்தலாம் என்றால் அதற்கும் அவர்களிடம் எதுவித வசதியில்லை. அதனால் அவர் சில நலன்புரி நிலையங்களுக்குச் சென்று உதவி கேட்ட போது எவரும் மறுக்கவில்லை. ஆனால் எந்தவித அமைப்பும் உதவி செய்யவேயில்லை. ஆறுதல் வார்த்தைகளும் அனுதாபங்களும் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதுமா? எத்தனை தடவைகள் எத்தனை இடங்களில் புஸ்பராசாவும் சிவரஞ்சனியும் கை ஏந்தி உதவி கேட்டார்கள். எல்லோரும் கையை விரித்து விட்டார்கள். ஆனால் சமூக சேவை திணைக்களம் ஒன்று சுயதொழில் செய்வதற்காக சிறுதொகை ஒன்றைக் கொடுத்து உதவியது. அந்தப்பணத்தைக் கொண்டு வீட்டோடு ஒரு கடை போட்டார்கள்.

அதுவும் மூலதனம் காணாததால் தொடர்ந்து நடத்த முடியாமல் கடை மூடவேண்டிய நிலை ஏற்பட்டது. வறுமை காரணமாக மூத்த பிள்ளைகள் மூன்றையும் படிப்பிக்க இயலாமல் போனதால் கடைசி இரண்டு பிள்ளைகளையாவது படிப்பிக்க வேண்டும் என்று இருக்கும் போதுதான் அடுத்த வலது காலிலும் புண் ஏற்பட்டு பெரிதாகி அதையும் துண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இரு காலுமே இயலாமல் போனால் அந்தக் குடும்பத்தை யார்தான் தாங்குவார்? சலரோக நோய் பொல்லாதது உரத்து விட்டால் பெரும் ஆபத்துத்தான் இதை நினைத்துத்தான் புஸ்பராசா பயப்படுகின்றார். தனக்கு ஏதும் நடந்து விட்டால் ஐந்து பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு தன் மனைவி என்ன செய்வாள் என்று பெரிதும் கவலைப்படுகின்றார். படிப்புத்தான் முக்கியம் என்று இருக்கும் இக்காலத்தில் படிக்காத தன் மனைவி எப்படித்தான் வாழப்போகின்றாள் என கடுமையாக சிந்திக்கின்றார்.

சிவரஞ்சனியின் சோகக்கதையைக்கேட்ட உதயா பெரிதும் மனம் வருந்தினாள். அம்மா உங்கள் பிள்ளையை டிஸ்சாஜ் செய்தாயிற்கு நீங்கள் இப்ப உடனேயே வீட்டிற்கு போகலாம் என்று தாதி வந்து சொன்னார். சிவரஞ்சனிவீட்டிற்கு போவதற்கான ஆயத்தம் எதுவும் செய்யாமல் இருப்பதை பார்த்து "நீங்கள் வீட்டிற்குப் போகலாம் என்று நார்ஸ் சொல்லிப்போட்டா ஏன் நீங்கள் ஆயத்தமாகாமல் இருக்கின்றியள் அக்கா" என்று உதயா கேட்டாள்.

இப்பை உடனே போக என்னட்டை ஓட்டோவிற்கு காசு இல்லை நாளைக்குத்தான் அண்ணை வருவார். அவரிடம் காசு வாங்கிக்கொண்டு போக இருக்கிறன். அக்கா! கடுமையான வருத்தக்காரர்கள் வந்தபடியால் தான் உங்கடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகளை வீட்டை விடுகினம் அதனால உங்களை நான் கொண்டு போய் விடுகிறன் வாங்கோ என்றாள்.

இல்லைத்தங்கச்சி எங்கடை வீடு ஒரு அடி மூலைக்குள்ளே இருக்குது. றோட்டுகளும் கூடாது. உம்மால் அதுக்குள்ள வர இயலாது. கேட்டதே எனக்கு உதவி செய்தமாதிரி இருக்கு நீர் போட்டு வாரும் நான் நாளைக்குப் போறன். அக்கா! எனக்கு இது பெரிய கஸ்டம் இல்லை வாங்கோ எனக்கூறி அவளின் அனுமதி கூட காத்திராமல் சமான்களை எடுத்துக்கொண்டு போய் ஆட்டோவில் வைத்து விட்டு அவர்கள் இருவரையும் கூட்டிக்கொண்டு சிவரஞ்சனி காட்டி வீட்டை அடைகின்றனர்.

ஏழு பேரைக் கொண்ட அந்தக் குடும்பத்தின் நிலமையை நேரில் பார்த்த உதயாவிற்கு ஏன் நான் அங்கு போனேன் என்று தோன்றியது குடியிருக்கும் வீடு கூட இரவல்தான். வீட்டின் அமைப்பும் அதைச்சுற்றியிருக்கும் சிறு காடு போன்ற பற்றைகளும் பார்க்கும் போது அற்றாஜ் பாத்ரூம் இல்லாட்டி இருக்கமாட்டோம் என்போரும் fan இல்லாட்டி படுக்க இயலாது என்று சொல்பவர்களின் நினைப்புத்தான் உதயாவிற்கு வந்தது.

வறுமையும் வருத்தமும் ஒன்றாகக் கலந்திருக்கும் அந்தக் குடும்பத்திற்கு வாழ வழியார் காட்டுவார்கள்? கண்டிப்பாய் காட்ட வேண்டும். அவர்களின் துன்பச்சுமைகளைக் குறைப்பதற்கு ஏதாவது வழி செய்ய வேண்டும் என நினைத்தவளாய் உதயா அவர்களிடம் விடைபெற்று அவ்விடத்தை விட்டு கிளம்புகின்றாள். தெருவிலே வந்த உதயாவை துரத்திக்கொண்டு வந்த சிவரஞ்சனி "தங்கச்சி எங்கள் நிலமையை நேரிலும் வந்து பார்த்து விட்டீர்கள் தானே. தயவு செய்து எங்களுக்கு தொழில் செய்ய ஏதாவது வழி செய்யுங்கள் உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும் என்று அவள் கூறிய இரங்கல் ஒலி உதயாவின் கால்களை நடை தளரச்செய்தது."

எதுவுமே பதில சொல்லாது தலையை மட்டும் அசைத்துவிட்டு அவ்விடத்தை விட்டு வந்த உதயாவை

அழுகையைத்தீர்க்க ஆட்கள் இல்லை.
ஆறுதல் சொல்ல யாருமே இல்லை
ஏழைகளை வாழ இடமே இல்லை
ஆலயம் எதிலும் ஆண்டவன் இல்லை

என்ற பாடல்களைக் கேட்டு அந்தப் பாடல்கள் ஜெயந்தியின் குடும்பத்திற்கே பொருத்தமானது என நினைத்தவண்ணம் ஆட்டோவை கைதட்டிக்கூப்பிடுகின்றாள்.

முற்றும்

(யாவும் கற்பனை)

**2012ம் ஆண்டு "விடியலைத் தேடு விட்டில்கள்" நூலில் பிரசுரமானது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றியுடன்



எசிறிய எழுத்தாளர் - இச்
சிறுகதைக்கு உரித்தானர்
மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன்
உங்களிடம் பேசுகின்றேன்.
"வரும் வசந்த காலம்"
சிறுகதைத் தொகுப்பினை நூலாக்கி
என் கரங்களிலே தவிழவிட்டு
எழுத்துலகத்தில் மேலும் எனக்கு
வசந்தத்தைத் தேடித் தந்த
கிழக்கு மாகாண பண்பாட்டலுவலகம்
பணிப்பாளருக்கும், பணிபுரிவோருக்கும்
ஆசி உரை, வாழ்த்துரை, பணிந்துரை
வழங்கி வாழ்த்தியவர்கட்கும்
ஏனைய உதவிகள்
செய்த உறவுகளுக்கும்
என் இதயபூர்வமான
நன்றிகளைத் தருகின்றேன்.
அன்புடன்
செல்வி. தேவி அருணாசலம்
திருமறைக்கலாமன்றம் - இணைப்பாளர்
திருகோணமலை

ISBN 978-955-4628-20-5

9 789554 628205

சண் பிரிண்டர்ஸ் 244, மத்திய வீதி, திருக்கோணமலை 0777296061

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org